Go. 66724
2015
T. 18389

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

நாரதமகாமுனிவர் கௌதமரிஷிக்கு

உபதேசித்தருளிய

மயிலிராவணன் கதை.

இஃது,

மணிமங்கலம்,

வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்,

பி. நா. சி. கடைகாரியம்

மு. கிருஷ்ணப்பிள்ளை அவர்களால்

பிடாரித்தாங்கல்

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை:

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1914.

சென்னைபிரம்பூர் குயப்பேட்டை 65-வது-நெம்பர் வீடு.

உ

கணபதிதுணை.

புதிதாய் அச்சிட்ட

வள்ளியம்மை சுயம்வரம்.

இஃது வள்ளியம்மை மான்வயிற்றிற் செனித்து குரவர்க்கரசனாகிய நம்பிராசன் கிரகத்தில் வளர்ந்து கன்னிப்பருவங்கழித்து தக்க பருவதிசையடைந்து வனஞ்சென்று செந்தினைக்கதிரைப் பக்ஷிஜாதிகள் கொய்யாது காவல்புரிந்து நாரதமாமுனிவரோடு வாதுகூறிச்சுப்ரமண்ய வேடுவனோடு வாதுபேசிப் பண்டாரக்கிழவனோடு மனமகிழ்ந்து பரண்மீதிருந்து அன்னவருக்குத் தொண்டுசெய்து சுனையையடுத்து யானையாற் சிவசுப்பிரமணியரை காந்தர்வமணம்புரிந்துதினைக்கதிரறுத்து அண்ணமார்களோடு சிற்றூர் சென்று குகனை நினைந்து சோதித்துப் பின்னர்ச் சிவசுப்பிரமணியரைப் பாணிக்கிரகணஞ் சேத்து திருப்பரங்குன்றஞ் செல்லுதல். இப்பாகங்களில் சாஸ்திரயுக்தப்படி நவரசங்களாலும் இந்துஸ்தான், பார்வீ, கெஜல், டோமரி துக்கடா, சிந்து, கீர்த்தனை, கலிப்பா, வெண்பா, விருத்தப்பா, ஓரடிப் பதம் முதலிய வர்ணமெட்டுகளினு லியற்றப்பெற்று நல்ல கிளேஸ் கடிதத்தில் ஆங்காங்கு ஐதீகப்படங்களமைத்து அச்சிட்டுத் தயாராயிருப்பதாலும் காப்பி சொற்பமாய் அச்சிட்டிருக்கிறபடியாலும் வேண்டுவோர் எமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் ஒன்றுக்கு விலை அணா 0 12 0

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானல் அரையணா ஸ்டாம்பு அனுப்பினுல் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. சிதம்பரமுதலியார்.

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு,

மதராஸ்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

நாரதமகாமுனிவர் கௌதமரிஷிக்கு

உபதேசித்தருளிய

மயிலிராவணன்கதை.

காப்பு.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

நாடியபொருள்கைகூடும் ஞானமும்புகழுமுண்டாம்
வீடுபேர்வழியகாக்கும் வேதியன்கமலநோக்கும
நீடியவரக்கர்சேனை நீறுபட்டழியவாகை
சூடியசிலையிராமன் தோள்வலிகூறுவோர்க்கே.

முகவுரை

கடல்புடைசூழ்ந்த நெடியவுலகத்திலே இராமாயணமென்று கூறத்தக்க இந்த வசனகாவியமானது மானிடருக்கு சித்தி முத்தி பத்தி வயிராக்கியங்களை தருதலாலும் ஆணவம் மாயை காமியமென்னுமும்மலங்களை நீக்கலாலும் மெய்வாய்கண் மூக்குசெவியென்னும் ஐம்பொறிகளை பரிசுத்தமாக்கலாலும் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்னும் ஐம்புலன்களை நோக்கலாலும் பிறவிப்பிணிகளைத் தீர்க்கலாலும் அதிக சிறப்புடையதாய் நீடுபுகழோங்கி நின்றது.

இந்த மயிலிராவணன் என்கிற இராட்சதனுடைய சரித்திரத்தைச் சிற்றறிவினனாகிய யான் கதைசொல்லப்போகிறேனென்று நாரதமகாமுனிவர் கௌதமரிஷிக்குச் சொல்ல தொடங்கினார். கேளுமையா கௌதமரிஷியே ஆதிகாலத்தில் ஸ்ரீராமரானவர் தென்னிலங்கையென்கிற பட்டணத்திற் கரசனாகிய இராவணனை சம்மாரஞ்

செய்யும்பொருட்டு எழுபதுவெள்ளம் வானரச் சேனையுடன் தண்டத்தலைவர் அணித்தலைவர் படைத்தலைவர் முதலிய சேனாசமுத்திரங்களோடு சுவாமியானவர் சமுத்திரக்கரையிலேபோய் இறங்கி சேதுவையணைகட்டி தென்னிலங்கைக் கரையிலிருந்து இராவணனுடனே போர்புரிந்துக் கொண்டிருக்கிற காலத்தில் அதிகாயன் மகாமாயன் நிகும்பன் அகம்பன் கும்பகர்னன் சம்புமாலி இந்திரசித்துமுதலான பற்பல அரக்கர்சேனைகளும் இராவணனுடைய பிள்ளைகளும் இரணக்களத்திலே கைவேறு மெய்வேறு கால்வேறு தலைவேறு தொடைவேறு இடைவேறு முழங்கால்வேறு கணுக்கால்வேறாக ராக்ஷசசேனைகள் பலவாறாய் சிதைந்துமாண்டுபோனார்கள்

இந்தவிசேஷமெல்லாம் இராவணன்கேட்டு கையிலிருந்த ஆயுதங்களைக் கீழேபோட்டுத் திடீரென்று சிங்காசனத்தின் மீதிருந்தபடியே பூமியில்விழுந்து அதிக விசாரத்தோடு மூர்ச்சையடைந்தான் சற்றுநேரம் சென்றபின் மறுபடியும் இராவணன் மூர்ச்சைதெளிந்து எழுந்து அழுது கடவுளைத்தொழுது மனமென்கிற வில்லைக் குழைந்து மந்திரிமார்களை யழைத்து வாருங்கள் மந்திரிகளே ராமர்லட்சுமணன் என்கிற இரண்டு மனிதரும் அனேகவானரசேனையோடுகூடிவந்து யுத்தங்களானவிடத்தில் அதிகாயன் மகாமாயன் நிகும்பன் கும்பகர்னன் சம்புமாலி இந்திரசித்து மயேந்திரசித்து முதலிய தம்பிமாரும் அனேகபுத்திரர்களும் இரதகஜதுரகபதாதிகளும் யானையும் சதுரங்கசேனையும் அந்த யிரண்டு மனிதர் கையினாலே இறந்து போனார்கள் அப்படியிருக்க என்சரீரமாத்திரம் என்னபுதுமையுடையது இந்தப் பொல்லாத காயமானது நில்லாமலும் ஒருவரோடு சொல்லாமலும் போகுமென்று எல்லாரு மறிவதுபோல நாமு மறிந்திருந்தும் தம்பிமார்களை யிழந்து அரசாட்சி செய்வதெப்படியென்று விசனப்படுகிற போது மந்திரிகள் இராவணேசுரனைப் பார்த்து வாருமைய சுவாமி நீரே விசாரப்பட்டால் அடியேங்களெப்படி பிழைப்போம் இனிமேலாகிறதென்ன இப்போ இலங்கையிலே யுண்டான யானை சேனை குதிரை ஒட்டக முதலிய படைகளையுங் கூட்டி அந்த இராம லட்சுமணருக் கெதிராகநாட்டி நம்முடைய சவுரியங்களைக்காட்டி வானர சேனைகளை வாட்டி மிதமாக யெண்ணி அதமாகப் பண்ணி வருவோம் அஞ்சாதே சுவாமியென்று தைரியங் கூற இதுகளை யெல்லாங் கேட்டு இராவணன் மகிழ்ந்து புகழ்ந்து மந்திரிகளைப் பார்த்து மமதைகொண்டார்ந்து நல்லது நல்லது சரி சரி ஆம் ஆம் என்று பலமாறாகக் கூறி ஆணவமீறி தன்னுடைய

ராணுவங்களாகிய யானைகுதிரை யொட்டை முதலியவைகளையும் சதுரங்கசேனைகளையும் வரும்படி ஆக்யாயித்து இராவணனானவன் வெளியிலேவந்து தன்னுடைய தேரின்மீதேறிஜயம்ஜயமென்று கூறி சகலஆடம்பரத்துடனே யுத்தகளத்திலே வந்து நின்றுக்கொண்டு இராமசுவாமியைப்பார்த்து ஒருவார்த்தை சொல்லத்தொடங்கினான்.

ஓஓ மானிடர்களே மரித்துப்போன பிணங்களே நற்குணமில்லாக் குணங்களே ஈக்கள் மொய்க்கும் பிணங்களே என்தம்பிமார்களை நீங்களிருவருமல்லோ கொன்றீர்கள் நல்லதாகட்டும் இதோ ஒருநொடியில் உங்களைக் கொல்லுகிறேன் அம்புகளாலே வெல்லுகிறேன் யமனுக் கிரைகொடுக்கச் சொல்லுகிறேன் உங்கள் சரீரத்தைச் சல்லடைக்கண்கள்போற் றுளைத்துக்கொல்லுகிறேனென்று மீசை துடிக்க ஆக்கரித்துப் பற்களை நறநறவென்று கடித்து வில்லைவளைத்து நாணியேற்றி அண்டங்களெல்லாம கிடுகிடுவென்று நடுங்கும்படி பயமுறுத்தினான் இராமசாமிக்குக் கோபம்வந்து கோதண்டத்தை வளைத்து நாணியேற்றி பாணப்பிரயோகஞ் செய்கிறபோது அநேகமாயிரமாயிரம்சேனைகளும் காலாள்களும் யுத்தகளத்தில் இறந்துபோய் ஒருவனாகநின்று இராவணன் யுத்தம் பண்ணுகிறபோது இராமசுவாமி பாணத்தினாலே அடிபட்டு புறமுதுகிட்டோடி இலங்காபுரியைநாடி அரமனையைத்தேடி அந்தப்புரத்திற்போய் படுத்துக்கொண்டு அதிகவிசாரத்துடனேயிருந்தான் அப்படியிருக்கிற காலத்திலே பிரகஸ்தனென்கிற மந்திரி இராவணனண்டையில்வந்து விசாரமாக யிருக்கிறவனைப்பார்த்து வாருமையாசுவாமி நீர் பராக்கிரமசாலியா யிருந்தும் இப்படியாகத் துயரப்பட்டிருந்தா லாகிறதென்னவென்று சொல்லுகிறபோது இராவணன்சொல்லுகிறான்.

வாரும்பிள்ளாய் மந்திரிபிரதானி தண்டத்தலைவனேநான் சீதையைக் கொண்டுவந்தநிமித்தம் இலங்கையிலே என்றுமில்லாத அநர்த்தம்வந்து தம்பிமார்களாகிய கும்பகர்னன் இந்திரசித்து முதலானவரும்போய் நானொருவனுமே நின்றேன் இனிமேலிருந்து துயரம் பொறுக்கப் போகிறதில்லையென்று வெகு விசனமாக அழுகிறபோது மந்திரி அந்த இராமலட்சுமணரை ஒருவராலும் வெல்லப்போகாது அந்த சீதையைக் கொண்டுபோய் இராமசுவாமி முன்னேவிட்டு சரணாகதியென்று சொன்னால் தயவுசெய்வார் என்றுசொன்ன மாத்திரத்திலே இராவணன் சொல்லுகிறான் வாரும்பிள்ளாய் பிரக

ஸ்தனே என்தம்பியாகிய விபீஷணனங்கே யிருந்துக்கொண்டு இத்
தனைபேரையுங் கொல்லச் சொல்லிக்கொண் டிருக்கிறான் அவனிரு
க்கிறவிடத்தே நான் சரணமென்று சொல்லப் போகிறதில்லை சீதை
யைவிடுகிறதுமில்லை அப்படிப்பட்ட தம்பிமார் போனபிற்பாடு இப்படி
ப்பட்டகாரியம் நடவாது அவர்களுக்கு யெந்தவழியாச்சுதோ அந்தவ
ழிநமக்கும் ஆகுது வேறே யோசனையில்லையென்று தன்னுடைய து
யரமெல்லாம் ஆற்றித் திட்டஞ்சொல்லி அழுது மூர்ச்சை தெளிந்து
எழுந்து சற்றுநேரம் சும்மாயிருந்தான் அப்படியிருந்த இராவணனைப்
பார்த்து மந்திரி சொல்லுகிறான் வாருமையா சுவாமி அவர்களை ஜெ
யிக்குமுபாயம் ஒன்றிருக்கிறது அதெப்படியென்றால் பாதாளயிலங்
கையிலே உம்முடைய தாயாதிவர்க்கத்திலே தம்பியாகிய மயில்ரா
வணனிருக்கிறான் அவனோ மாயாவினோதி கபடநாடகசூஸ்திரா
தாரி சதுர்வித்வுபாயி அவனை மூவராலுந் தேவராலும் யாவராலும்
ஜெயிக்கப்போகாது மகாசுத்தவீரன் சத்துருசம்மாரன் அப்பேர்ப்ப
ட்டவனிருக்க உமக்குயோசனையென்ன அவனை யழைப்பித்தால் அ
வனித்த எழுபதுவெள்ளஞ்சேனையையும் ஜெயிக்கவேண்டுமென்றாலு
ம்ஜெயிப்பான் அல்லது இராமலட்சுமண விருவரையும் பாதாளலங்
கையிலே காளிக்குப் பலியிடச்சொன்னாலும் பலியிடுவான் அப்படிப்
பட்ட பராக்கிரமசாலியாகிய தம்பியிருக்கும்போது என் துயரப்படுகி
றீர் சீக்கிரத்திலே மயில்ராவணனையழைத்து எந்தவிதத்திலேயும் இ
ராமலட்சுமணனை ஜெயிக்கவேண்டுமென்று பிரகஸ்தனென்னுமந்திரி
கூற இராவணன்செவியிலே ஈரமரத்தில் வயிரவாணி கடாவினாற்போ
லுமேறிற்று.

இராவணன் அதுமெய்தான் நல்லயோசனை சொன்னீரென்று
பிரகஸ்தனுக்கு வேண்டிய வெகுமதிகொடுத்து கனகாபிஷேகம் செ
ய்து பின்பு இராவணனானவன் சீக்கிரத்திலே மயில்ராவணன் வரத்
தக்கதாக மனதிலே நினைத்தான் அப்போது பாதாள யிலங்கையிலே
தேவேந்திரன்போல் கொலுவிலிருக்கிற மயில்ராவணனுக்குத் தெரிந்
தது உடனே மயில்ராவணனானவன் யோசனைசெய்து நம்தமயனார்
இலங்காபுரியை யாளுகிற இராவணேஸ்வரனுக்கு என்ன ஆபத்து
வந்ததோ தெரியாது அவன் நெடுநாளாக நம்மை நினைத்ததில்லை
ஆதலால் என்னவேலை யிருந்தபோதிலும் இப்போதே போய் உத
விசெய்யவேண்டுமென்று தன் மனதிலேயெண்ணி யோசனைபண்ணி
மந்திரிகளை யழைத்து அப்பாநான் இலங்கைக்குப் போய் வருகிறே
ன் நான்வருமளவும் நீங்கள் சாவதானமாகப் பாதுகாத்திருங்களே

ன்றுசொல்லிவிட்டு மயிலிராவணன் இலங்காபுரிபட்டணத்துக்கு வந்துவிட்டான் அந்த இலங்கையின் அதிசயமெல்லாம் பார்த்தான் எல்லாம் பாழாயிருப்பதைப் பார்த்துக்கொண்டு அந்தப்புரத்திலே போனான் இராவணன் ஒருவனாயிருக்கிறதைக் கண்டான் தமையனாகிய இராவணேஸ்வரனுக்கு சாஷ்டாங்க தெண்டனிட்டு ஒருவார்த்தை சொலலுகிறான் வாருமையாசுவாமி பட்டணமெல்லாம் பாழாய்க்கிடக்கிறதென்ன அதிகவிசாரத்தை அடைந்திருக்கிறதென்ன இதுவெல்லாம் உண்மையாகச் சொல்லவேண்டுமென்று அஞ்சலி செய்துக்கேட்க இராவணன் சொல்லுகிறான்.

வாரும்பிள்ளாய் தம்பி முன்னாலே தசரதமகாராசாவினுடைய பிள்ளை இராமலட்சுமணர் இருவரும் தண்டகாரண்ணிய வனத்திலே வந்திருந்தார்கள் அப்போது நமது தங்கை சூர்ப்பநகையினுடைய மூக்குமுலையைப் போக்கினார்கள் அவளிங்கேவந்து முறையிட்டாள் அப்போது நான்போய் அந்த ராமனுடைய தேவியாகிய சீதையை யெடுத்துக்கொண்டு வந்தேன் அன்றுமுதல் இலங்கையிலே அனர்த்தம்வந்தது அனுமாரென்கிற குரங்கு சீதையைப் பார்க்கவந்தவிடத்திலே பட்டணமெல்லாம் சுட்டுக் கோட்டைபரப்பி அக்ஷயகுமாரனையுங்கொன்று அநேக ராட்சதரையுங் கொன்றுவிட்டுப் போயிற்று பின்பு இராமசுவாமி அவர்தம்பி இலட்சுமணன் பின்னும் சுக்கிரீவன் அங்கதன் நீலன் நளன் குமுதன் சாம்புவனிப்படி எழுபதுவெள்ளஞ் சேனையுங்கூட்டிவந்து சேதுவை அணைகட்டி இலங்கையிலே வந்து யுத்தங்களாகிறபோது அதிகாயன் மகாமாயன் இந்திரசித்து கும்பகர்ணன் அநேகராட்சதர்களும் தட்டுக்கெட்டுப்பட்டுப்போனார்களென்று சொன்னமாத்திரத்திலே இந்தவசனங்களை மயிலிராவணன்கேட்டு அதிகதுயரப்பட்டு அநேகங்கிளைகளில் இலைகாய்களுடனே இருக்கப்பட்ட ஒருபெரியவிருட்சத்தை அடியோடே அறுத்துவிட்டாலெவ்வாறுவிழுமோ அவ்வாறுபோலக் கீழேவிழுந்து அழுது கடவுளைத் தொழுது அணிந்துபணிந்து கோபந்தணிந்து ஒருவாறு மனந்துணிந்து சொல்லுகிறான்.

வாருமையாசுவாமி நீர்சகலவல்லவரையுங் கொன்று சுவர்க்கத்துக்கு அனுப்பினபின்பு எம்மையழைப்பித்தீர் முன்னதாகவே உனக்கின்னவிதமென்று தெரியாமற்போயிற்றே இப்போது யான் செய்யவேண்டிய தென்னவென்று கேட்க இராவணேஸ்வரன் கூறுகிறான் கேளும்பிள்ளாய் தம்பி இராமலட்சுமணர் இரண்டுபேரும் மகா

பராக்கிரமசாலிகள் அவர்கள்வானரசேனைகளுடன் நம்முடையதம்பி விபீஷணனையும் அழைத்துக்கொண்டு இலங்கை நகரெல்லாம் சுட்டு அனர்த்தம்செய்துவிட்டார்கள் அந்த இராமலட்சுமணரை ஒருவனாலும் செயிக்கக்கூடாது நானும் அனேகமான யுத்தங்கள்செய்து இராமபாணத்தின்முன்பாக நிற்கக்கூடாமல் முறிந்தோடிவந்தேன் அவர்கள் மனிதனாக இருக்கவில்லை அவர்களை சம்மாரஞ்செய்ய எவ்விதவுபாயமுண்டோ அவ்விதவுபாயஞ் செய்யும்பிள்ளாயென்று இராவணன் சொல்ல மயிலிராவணன்சொல்லுகிறான் கேளுமையா சுவாமி இந்த எழுபதுவெள்ளஞ்சேனையும் இராமலட்சுமணர் இரண்டுபேரையும் ஆகாசமார்க்கமாய் அதிக வினோதத்துடன் கொண்டுபோய் பாதாளயிலங்கையிலே என்னுடைய காளிகாதேவிக்குப் பலிகொடுக்கிறேனென்றுசொல்லி உறுதிப்பாடுசெய்துக்கொண்டு தன்னரண்மனை வந்துசேர்ந்து மந்திரிமார்களோடு தான் இலங்கைக்குப்போனதும் அவ்விடத்தில் நடந்தவிபரமுந் தான் இராவணனுக்குச் சபதஞ்செய்துவந்ததும் இதுகளெல்லாம் சவிஸ்தாரமாகச்சொல்லி இனிமேல் எப்படி செயிப்போமென்று மந்திரிபிரதானிகளோடு ஆலோசனை செய்துக்கொண்டிருந்தான்.

இங்கே இப்படியிருக்கும்போது சீதாதேவியம்மனருகில் காத்துக்கொண்டிருக்கிற விபீஷணருடையபெண் திரிச்சடையானவள் மனதிற் கவலைகொண்டு மயிலிராவணன் வந்து இராவணனுடனே பிரதிக்கினை செய்துக்கொண்டுபோன விசேஷமெல்லாங் கேட்டினி நாமென்னசெய்யப் போகிறோமென்றெண்ணி நம்முடைய பிதாவாகிய விபீஷணருஞ் சுவாமியைச் சரணாகதியென்று அடைந்திருக்கிறாரே அவருடன் இந்த விசேஷமெல்லாம் யாவர் அறிவிக்கப்போகிறார்களென்று மனங்கசிந்து நசிந்து அதிக துக்கத்துடனே அழுதுக்கொண்டு அவன் மகாமாயாவினோதி கபடநாடக சூஸ்திராவதாரியென்று யோசனை செய்துக் கொண்டிருக்கிற சமயத்தில் வாயுபகவானானவர் அவ்விடம் வந்தார் அப்போது திரிசடையானவள் பார்த்து வாருமையா சுவாமி வாயுபகவானே நானொரு விசேடஞ் சொல்லுகிறேன் அதைக்கருத்துற்று சாவதானமாய்க்கேளும் அக்தென்னவெனில் அதிசயமான விசேஷம் அதை யாரொருவருக்கும் நீர்தெரிவிக்கக்கூடாது நீர் சர்வலோகரக்ஷகராகிய இராமசுவாமிக்கு உயிர்த்துணையானவர் ஆகையால் நானும்முடன் சொல்லுகிறேன் நீர் தவிர மற்றொருவரறியக்கூடாது அது விபீஷணருக்கு தெரிந்திருக்

ரும் ஆகையால் மயிலிராவணன் இராவணனுடன் பிரதிக்கினைசெய்துக்கொண்டுபோன விசேஷமென்னவென்றால் இன்றையயிரவில் பதினைந்துநாழிகைக்குமேல் இராமலட்சுமணர் இருவரையும் கொண்டுபோய் பாதாள இலங்கையிலிருக்கும் தன்னுடைய காளிகாதேவிக்குப்பலியிடுகிறேனென்று பிரதிக்கினைசெய்துக்கொண்டுபோனான் அவன்மாயோவினேறி ஒருவராலும் செயிக்கக்கூடாதவன் அவன் எந்த ரூபமெடுத்து மோசம்பண்ணுவானோ தெரியாது அவனுடைய கபடமெல்லாம் விபீஷணருக்குத் தெரியவரும் இதெல்லாம் அவருக்குச் சொல்லி எவ்விதசாக்கிரதையா யிருக்கவேணுமோ அவ்விதமாயிருக்கச்சொல்லி வரவேண்டுமென்று சொன்ன மாத்திரத்தில் வாயுபகவானும் அப்படியே சம்மதித்துப் போய்வருகிறேனென்று திரிசடையாளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு விபீஷணரைவந்து கண்டார் விபீஷணர் வாயுபகவானைப்பார்த்து அதிக வணக்கத்தோடு சொல்லுகிறார்.

வாருமையாசுவாமி வாயுபகவானே நீர் எங்கேவந்தீர் நான் உம்மைக்கண்டு வெகுநாளாச்சுது நீர்வந்த சங்கதியைத் தெரியப்படுத்துமையாவென்று கேட்க வாயுபகவானவர்சொல்லுகிறார் கேளும்விபூஷணரே மயிலிராவணனையழைப்பித்து தன்னுடைய துயரமெல்லாஞ் சொன்னபோது மயிலிராவணன் சொல்லிய தென்னவென்றால் யுத்தஞ்செய்வதற்குமுன் சொல்லாமல் இப்போது காரியமுடிந்தபிறகு என்னையழைப்பித்தீர் ஆகிலும்பெரிதல்ல உன் பிள்ளைகளாகிய அக்ஷயகுமாரன் அதிகாயன் மகாமாயன் இந்திரஜித்து கும்பகர்ணன்முதலான சேனைப்படைகளைக்கொன்றவர்கள் இராமலட்சுமணர்தானே அப்படிப்பட்ட பராக்கிரமசாலிகளான அவ்விருவரையும இன்றையத்தினம இரவில் பதினைந்துநாழிகைக்குப் பாதாள இலங்கைக்குக் கொண்டுபோய் என்னுடைய காளிகாதேவிக்குப் பலிகொடுக்கிறேனென்று சபதங்கூறித் தனக்குவேண்டிய திரவியங்களும் பெற்றுக்கொண்டுபோனானும் இந்தசமாச்சாரம திரிசடையாள் கேட்டுக்கொண்டிருந்து இவ்விடத்தில் ஒருவருமில்லையேயென்று துயரப்பட்டுக்கொண்டிருக்கிறசமயத்தில நான் அவ்விடத்திற்குப்போனேன அப்போது திரிசடையானவள் என்னையழைத்து சுவாமி உம்மாலே ஒரு காரியமாகவேண்டுமென்று இந்த விசேஷங்களை உமக்குச்சொல்லி ராமசுவாமிக்கு அறிக்கைசெய்யும்படி சொன்னாளென்றுசொல்லி வாயுபகவானும் தான் இருக்கிற விடத்துக்குப்போய்விட்டார்.

வாயுபகவான்போனபின்பு விபூஷணர் அதிகவிசாரத்தை அடைந்து இதற்கென்னசெய்யலாமென்று மனமிடைந்து அவன் மகாகபடநாடகசூஸ்திரவதாரி நானாவிதரூபாதிகாரி அவன் என்னைப்போலும் உருவெடுத்து மோசம்பண்ணுவான் பற்பலரூபங்களாகவும் நண்ணுவானென மிகவும் எண்ணி யோசனைபண்ணி சுவாமிசபையிலேஎவ்வாறுசொல்லுவோமெனக் கருத்திலிருத்தி சுக்ரீபன் அங்கதன் சாம்புவன் நீலன் அனுமாரிவ்விதயெழுபதுவெள்ளஞ்சேனையுடனே கொலுவிருக்கிறசமயத்திலே விபூஷணர்போனார் இராமசுவாமிகண்டு மகிழ்வுகொண்டு சொல்லுகிறார் வாரும் விபூஷணரே உம்முடையமுகம்பூரணச்சந்திரன்போலும் மலர்ந்ததாமரைமலர்போலும் இருக்குமே யாதுகாரணத்தினால் முகங்கறுத்து அகம்வெறுத்து மனங்கருக கண்ணீருருகி துயம்பெருகி அதிக விசாரமடைந்திருப்ப தேதென்றுசொல்ல விபூஷணனெழுந்து காலில்விழுந்து கைகட்டி வாய்புதைத்துச் சரீரம் படபடத்து மெள்ளமெள்ளக் கிட்டசென்று சுவாமியைப்பார்த்து நடந்தவிசேடங்கள்யாவு பொளியாமற்சொன்னார் அவைகள்யாவும் இராமசுவாமிகேட்டு ஆலோசனைசெய்து சாம்புவன் முதலியசகலரையும் அழைப்பித்து விபீஷணர்கூறியவிசேடமெல்லாஞ்சொல்லி இன்றிரவு பதினைந்துநாழிகையளவிலே மயிலிராவணன் நம்மையாவரையும் மோசம்பண்ணுகிறேனென்று கூறிப்போனானாம் அதற்கென்ன வுபாயமுண்டோ அவ்விதவுபாயம்செய்யுமென்ன சுக்கிரீவன்கேட்டு விபூஷணனைப்பார்த்துச் சொல்லுகிறான் வாருமையாவிபூஷணரேமயிலிராவணனென்பவன்யாவன் அவனிருப்பிடமெங்கே அவன் பூர்வோத்திரமென்ன அவன் இராவணனுக் கெவ்விதமாய் பாத்தியஞ் சொல்லுமென்றுகூற விபூஷணர்சொல்லுகிறார்.

கேளும் சுக்ரீபசற்பாத்திரனே அந்த மயிலிராவணன் என்பவன் பாதாள யிலங்கையிலேயிருக்கிறவன் இராவணனுக்குத்தாயாதிவக்கத்திலே தம்பியாகவேண்டும் அவன்மகா மாயாவினோதி கபடநாடகசூஸ்திரவதாரி நானாவிதரூபாதிகாரி அவனையொருவராலும் செயிக்கப்போகாதென்று விபீஷணர்சுக்ரீபனுக்குச்சொல்லஎல்லாரும்கேட்டுக்கொண்டிருந்து யோசனைசெய்து அனுமாராலே ஆகவேண்டுமென்று நிச்சயம்பண்ணி சுவாமிகிட்டபோய் சுக்ரீபன் அங்கதன் விபூஷணர் சாம்புவன இந்நாலும்பேரும் சுவாமியுடனே என்னசொல்லுகிறார்களென்றால் ஓ தசரதராசகுமாரா சானகிமனோகரா சுவாமி இந்தக் காரியமெல்லாம் அனுமார் ஒருவராலே யாகவேண்டுமேயொழிய மற்

றெருவராலே யாகாதென்றுசொன்னார்கள் இந்த விசேடமெல்லாம் அனுமார்கேட்டுத் தானொன்று மறியாதவர்போலே தலையைக்குனிந்துகொண்டிருந்தார் அப்போது சுவாமியானவர் வாரும் அனுமாரே விபூஷணர்கூறிய விசேடத்துக்கு என்னவுபாயமுண்டோ அவ்வுபாயங்களைச் செய்யுமென்று மறுமொழிகொடுக்க அனுமார்கேட்டு அச்சமென்பதை மண்ணிற்போட்டு ஆரவாரித்து மனம்பூரித்து சந்தோஷக்கடலிற்புகுந்து பெருமிதமிகுந்து சிங்கம்போலத்துள்ளி லங்கை ராவணனைத்தள்ளி மயில்ராவணன் சிரசைக்கிள்ளி அயனுதிரத்தைக் கையிலள்ளி தாகந்தீர்ந்து மகிழ்ச்சிகூர்ந்து வருகிறேன் வருகிறேனென்று சபதங்கூறி மமதையூறி சுவாமியைப் பணிந்து துணிந்து வந்தனையோடு சிந்தனைசெய்து கந்தபுஷ்பங்களை காலிற்பெய்து அஞ்சலிசெய்து வணங்கி இணங்கி ஒதுங்கி பதுங்கி ஆடிப் பாட்டுகள்பாடிப் பூமாலைசூடிக் கடவுளைநாடி அவர் திருவடி தேடி அன்போடே ஓடிவந்து நின்றார்.

அப்போது விபூஷணர் சுக்ரீவன் சாம்புவன் இந்தமூன்றுபேரும் அனுமாரைப்பார்த்து அதிசயமான ஒருவிசேடம் சொல்லுகிறார் நீர் மகாபராக்கிரமசாலியல்லவோ உமக்கு ஈடுசோடு ஒருவருமில்லை நீர் ஆகாயம் பூமி பாதாளத்துக்கு மொன்றாய் சரீரமெடுக்க வேண்டுமென்றாலும் எடுப்பீர் நீர்மகா புருஷசிங்கம் நாங்களென்ன சொல்லப்போகிறோம் இன்றையராத்திரிக்கு மாத்திரம் உம்முடைய வாலினாலே யிந்த எழுபதுவெள்ளஞ் சேனைகளுக்கும் கோட்டையிட்டுக் கொண்டிருந்து மகாசாக்கிரதையாகக் காக்கவேண்டுமென்று சொன்னமாத்திரத்திலே அனுமார்கேட்டு மகிழ்ந்து புகழ்ந்து அப்படியே ஆகட்டுமென்று சொன்னார் இப்படியிருக்கிற சமயத்திலே சூரியன அஸ்தமானமாச்சுது உடனே அனுமாரானவர் எழுபதுவெள்ளஞ் சேனையையும் ஒன்றாகச் சேர்த்து தமமுடையவாலினாலே கோட்டையிட்டார் கோட்டையானதெப்படியிருந்ததென்றால் ஆகாயம் பூமி பாதாளத்துக்கு மூடுருவத்தக்கதாயிருந்தது அக்கோட்டைக்குவாசலெங்கேயென்றால் அனுமாருடைய வாயிலேபுகுந்து செவியிலே புறப்படவேண்டும் மற்றபடி வாசலுமில்லைவழியுமில்லை ஒருஎறும்பு நுழையப்போகாது நுழையவேண்டுமென்றாலும் இடமில்லாமல் வாலுடனவால் நெருக்கமாகவும் அழுத்தமாகவும் கோட்டையிட்டுக்கொண்டிருக்கிற சமயத்திலே இராமர் இலட்சுமணரிரண்டுபேரும் ஓர்பர்ணகசாலையிலே பள்ளிகொண்டிருந்தார்கள். அத்தருணத்தில் விபூஷணரும்சுக்ரீபரும் யோசனைசெய்து இன்றிரவில்நாமெல்லாமும் மகாசாக்கிரதையாயிருக்கவேண்டுமெ

ன்றுசொல்லி அங்கதனை யழைப்பித்து அவனோடேகூட இலட்சுமண ரையுங்கூட்டி விருதுமணிகளையாட்டி சந்தடிகளைக்காட்டி சிங்கநாதங் களைமீட்டி நித்திரைவெண்பதைபோட்டி பற்பலவாத்திய முழங்கவும் தருமதானம்வழங்கவும் வேசைபாடவும் வித்துவர்பாடவும் இப்படி நானாவிதவேடிக்கைபோடு மகாசாக்கிரதையாய் விழித்திருக்கும்படி கட்டளையிட்டு இந்தக்காரியத்தில் அசட்டையாயிருந்தால் நம்முடைய ஆக்கினைதெரியுமே என்றுசொல்லி கட்டுதிட்டஞ்செய்து நளனையழை ப்பித்து அவனுக்கும் அவ்வாறேகட்டளையிட்டருளி சுக்ரீபன்-நீலன் இவர்களையழைப்பித்து தண்டம்-வேல்-வில்-வாள்முதலிய பலவித ஆ யுதங்களையுங்கொடுத்து இன்றிரவில் தென்திசைப்புறத்தில் பதனமா கக்காருங்களென்று கட்டளையிட்டருளி மகாவீரனான குமுதனையழை ப்பித்து அவனுக்குத்துணைக்கருவியாக இரண்டுலட்சம் வானரசேனை களைகூட்டி சிறிதுவாக்கியங்களைக்கொடுத்து அப்பா நீமேற்குத்திசை ப்புறத்திலே இராக்காலுசாமமும் சாக்கிரதையாகக்காருமென்று ஆ க்கினையோடு தாக்கீதுசெய்து சாம்புவனையழைப்பித்து அப்பா நீவட க்குதிசைப்புறத்திலே பதனமாகக்காருமென்று சட்டமோடு திட்டஞ் செய்து கிழக்கு திசைப்புறத்திலும் அவ்வாறே ஆவலோடு காவலாள னை சேவகஞ்செய்யத் திட்டமோடு கட்டளையிட்டருளி சாமசாமத் துக்கு அங்கதன் நீலன் குமுதன் சாம்புவன் முதலியவர்களைப்பார்த் து விபூஷணனானவர் அவரவருக்கு சாக்கிரதைசொல்லிக்கொண்டு அந் தக்கோட்டையைச் சுற்றிக்கொண்டுவந்தார் இப்படியிருக்கிற சமயத் திலே இராவில் பதினைந்து நாழிகையாச்சுது.

இனிமேல் மயிலிராவணன்கதையைக் கூறுகின்றது.

நாரதமகாமுனியானவர் சொல்லுகிறார் கேளுமையா கௌதம ரிஷியே இப்படி இவர்களிருக்கிற காலத்திலே பாதாள இலங்கையா ளுகின்ற மயிலிராவணன் அன்றிரவில் பதினைந்து நாழிகையில் ஆ லோசனைசெய்து தன்னுடைய அஞ்சன சாஸ்திரத்தை நெஞ்சில்நி னைத்துப் பிராமணரை யழைத்து சாஸ்திரங்கேட்டு தனமனம் திடச் சித்தனாகி மந்திரிகளையழைத்துக் கெட்டிக்காரனாக நான்குபேரை நே மித்தான் அவர்கள்யாரென்றால் சதுரனென்றும் சாத்தியனென்றும் சகலப்பிரவாணனென்றும் மகாமாயாவிநோதி யென்றும் நான்குபெ யரை யுடையவர்கள் இந்த நான்குபேர்களையுங் கூட்டிக் கொண்டு

மகாபுசபல பராக்கிரமத்துடன் புறப்பட்டான். வர்ணமாலிகையென்கிறவள் தன்னுடைய புருஷனாகிய மயிலிராவணன் கையைப்பிடித்துக்கொண்டு ஒருவிசேஷஞ் சொல்லுகிறாள் வாருமையாசுவாமி நீர் இத்தனைசேனையுடனே எங்கே பயணமென்றுகேட்க மயிலிராவணன் சொல்லுகிறான் கேளும்பெண்ணே வர்ணமாலிகை இலங்கையிலே இராமலட்சுமணனிரண்டுமனிதர்கள்வந்து எழுபது வெள்ளஞ் சேனையுடனே நமது தமையனாராகிய இராவணேஸ்வரனுடைய தம்பிகும்பகர்ணனையும் குமாரவர்க்கங்களையும் சகலதூத இராட்சதர்களையும் அதம்பண்ணிப்போட்டார்கள் அப்படிப்பட்ட மனிதர்களை காளிக்குப்பலியிடுகிறேனென்று சபதங்கூறிவந்தனன் அந்தச்சபதம் தப்பாமல் அவர்களிரண்டுபேரையும் கொண்டுவரப் போகிறேனென்றுகூற இதுகளைக்கேட்ட வர்ணமாலிகை சொல்லுகிறாள் வாருமையாசுவாமி நானொருவிசேஷஞ் சொல்லுகிறேன் கேளும் அந்தராமலட்சுமணனிரண்டுபேரும் மனிதரென்று எண்ணவேண்டாம் சாட்சாத் ஸ்ரீவைகுண்டவாசகராகிய மகாவிஷ்ணுவென்று எண்ணிக்கொள்ளும் அவர்களை ஒருவராலும் சயிக்கப்போகாது இராவணனுக்குக் கெட்டுப்போகக் காலம் வந்தபடியால் சீதையென்கிற அக்கினியைக் கொண்டுவந்து சிறையில் வைத்திருக்கிறான் இலங்கைக்கு அனர்த்தந்தேடிக்கொண்டான் புத்திரமித்திரர்களையுங் கொன்றுபோட்டுத் தானும் சாகவேண்டுமென்றிருக்கிறான் அவனும் செயிக்கப்போகிறதில்லை நீரும்செயிக்கப்போகிறதில்லை விபூஷணனென்பவர் தமையனாகிய இராவணனுக்குச்சொல்லத்தகுந்த புத்திகளையெல்லாம் சொன்னார் சொன்னவிடத்திலே அவர்புத்தியைக்கேளாதபடியினாலே இப்படிக்கெல்லாம் ஆயிற்று அவன் நல்ல புத்திமானானபடியினாலே நாமிங்கேயிருந்தால் அதமாய்ப் போவோமென்றெண்ணி அந்த இராமசுவாமியைச் சரணமென்றடைந்தான் அவனுக்கு இலங்கை இராச்சியத்தை பட்டாபிஷேகஞ் செய்யப்போகிறார் சுவாமி நீரும்போனால் உமது மேனியைப் பூப்போல வைத்துக்கொண்டிருப்பார் அடியாள் சொல்லுகிற காரியத்திற்கு விகாதஞ்செதுப்போனால் உம்முடைய காரியம்யாவும விபரீதமாகும் என்னையனே என்னுயிர்த்துணைவா நீர் இங்கேதானே இருந்தால் பாதாளலங்கையையாண்டுகொண்டு சுகமாயிருக்கலாம் அங்கேபோகிறதுசரியான நியாயமல்லவென்று அநேகவிதமான நன்மார்க்கங்கூறி அவனது இருகையும் பிடித்துக்கொண்டு அந்தப்புரம் போவோம் வாருமென்றுபலவாறாகத்தடுத்துநற்புத்தியெடுத்துக்கூறினள் இளவளதுவார்த்தையைக்கே

ட்டு அந்தமகாபாவியான மயிலிராவணன் சிறிகோபமீறி பதிவிரதாசிரோமணியான வர்ணமாலிகையைத் தள்ளிப்போவதே உத்தமமென்றுதுள்ளிவிழுந்து எழுந்து தனதுமந்திரிகளைக்கூட்டி சேனையோட்டி சவுரியங்களைக்காட்டி நகைத்தான்.

வர்ணமாலிகை மறுபடியும் புருஷனைப்பார்த்து தேகம்வேர்த்துஓ சுவாமி யான்வருவது சொன்னேன் நீர்படுகிற துன்பத்தை படுமென்றுகூறி அவள்புத்திமாறி அவனைத்தூறி அந்தப்புரமீறி பஞ்சணையே விற்றிருந்தான் மயிலிராவணன்-கரி-பரி-முதலிய சேனாதிபதிகளையழைத்துக்கொண்டு தன்னுடைய அரண்மனையைவிட்டு ஆயுதங்களைத்தொட்டு வாசல்கடந்து அக்கினிகோட்டைக்குவந்து யோசனைசெய்து அவ்விடம்விட்டு மேல் சமுத்திரக்கரையில் ஒருவிடத்திலே வந்திருந்து தனது நாலுமந்திரிகளையும் பார்த்து ஓர்விசேடஞ்சொல்லுகிறான் கேளும் மந்திரிகளே இனிமேலே இராமலட்சுமணர் இருவரையும் யாவர் பிடித்துக்கொண்டு வருவீர்களென்றுவினவ சதுரனென்று மந்திரியெழுந்து காலில்விழுந்து பயந்து நயந்து மயிலிராவணனைக்கண்டு அஞ்சலிகொண்டு சொல்லுகிறான் வாருமையாசுவாமி சன்னை அனுப்புவீரானால் அந்தஎழுபதுவெள்ளஞ் சேனைகளையுங் கொன்றுவென்று அங்கேநின்று தின்றுவருவேனென்று கூறி அவர்களிரண்டுபேரையும் கொண்டுவரச்சொன்னாலுங் கொண்டுவருகிறேன் என்றுமறுபடியும் சொன்னான் இவ்வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலே மயிலிராவணன் சதுரனுக்கு வெகுமதிசெய்து பாக்குவெற்றிலையுங் கொடுத்து சீக்கிரத்திலே அனுகூலஞ்செய்துவாருமென்று அனுப்பிவைத்தான் அந்தச்சதுரன் விடைபெற்றுக்கொண்டு இராவணனுடையசேனைகளிருக்குமிடமெங்கேயென்று வெகு துரிதமாகப்பார்த்துக்கொண்டுவந்து அனுமார்கோட்டையை எந்தராச்சியத்திலும் கண்டதுமில்லை கேட்டதுமில்லையெனனினைத்து நாலுமூலையும் சுற்றிப்பார்த்தான் வாசலெங்கேயென்றால் அனுமாருடைய வாயிலேபுகுந்து செவியிலேபுறப்படவேண்டும் அதுவேயொழிய வேரேயெங்குமவழியுமில்லை வாசலுமில்லை கோட்டையானது ஆகாயம் பூமிபாதாளத்துக்கும் ஒன்றாக இருக்கிறது ஒருவர்கையிலேயும் ஆகாது கோட்டையிலேயிருக்கிறபோ வெகு சாக்கிரதையாக யிருக்கிறார்கள் ஆனபடியினாலே நம்மாலேயும் பின்னையொருவராலேயும் கோட்டைக்குள்ளே நுழையமுடியாதென்று நினைத்து சதுரனானவன் திரும்பிப்போய் மயி

விராவணனைக்கண்டு தலைகுனிந்துநின்றான் அப்போதுமயிலிராவணன் சதுரனைப்பார்த்து வாரும்பிள்ளாய் சதுராநீ இங்கேயிருந்து மோகச்சே இருந்தமதமென்ன இப்போது தலையைக்குனிந்து நிற்கும் விதமென்னவென்றுகேட்க சதுரன் சொல்லுகிறான் வாருமையாசுவாமி நாம்வந்த காரியமாகிறதில்லை திரும்பிப்போவதே பெரியகாரியம் அது எப்படியென்றால் அனுமாரானவர் தம்முடைய வாலாலேகோட்டையிட்டுக் கொண்டிருக்கிறார் அந்தக்கோட்டைக்குள்நுழைய வாசற்படி எங்குங்காணோம் ஆகாயம் பூ பொதாளத்திற்கும் ஒன்றாகவிருக்கிறது கோட்டைக்குள்ளிருக்கிறபேர் வெகுசாக்கிரதையாயிருக்கிறார்கள் நம்மால்முடியாதென்றான் சாயத்தியனெழுந்துமயிலிராவணன்காலில்விழுந்து சாஷ்டாங்கமாக தெண்டஞ்சமர்ப்பித்து நமஸ்கரித்து சதுரங்கனானவன் உலகமெல்லாம் தன்னைப்போலெண்ணுவான் அவனாலேயாகாவிட்டாலும் என்னாலாகும் சுவாமிஎன்னையனுப்பினால்அந்தக்குரங்குவாலாலே யிட்டிருக்கிற கோட்டையை காலினாலுதைத்துத்தள்ளிப்போட்டு எழுபதுவெள்ளஞ்சேனையையும் சங்காரஞ்செய்து இராமலட்சுமணனிரண்டுபேரையும் சங்கரிக்கச்சொன்னாலும்போட்டுக்கொண்டுவருகிறேன் சீக்கிரம் அடியேனுக்கு விடைகொடுமையாவென்றுகேட்டான். அப்படிக்கேட்ட மந்திரியைப் பார்த்து மயிலிராவணன் அதிகசந்தோஷப்பட்டு அவனுக்கு அனேக வெகுமதிகளைச்செய்துஅனுப்பினான் சாயத்தியன் விடைபெற்றுக்கொண்டு இராமருடைய பாளையத்தில்வந்து அனுமார் கோட்டையிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு பிரமித்துநின்று நாம் என்னசபதம்செய்து வந்தோம் இதைப்பார்த்தால் வெகு கடினமாயிருக்கிறது சதுரனைப் போலே நாமும்சும்மாயிராமல் அனேகசபதங்களை செய்து வெகுமதிகளையும் பெற்றுவந்தோம் இப்போது திரும்பிப்போனால் நம்மைபரிகாசம் பண்ணுவார்கள் அதைவிடச்செத்தாலும்நல்லதென்று அனேக யோசனை செய்து கோட்டைக்குவழியுமில்லையே இதற்கென்ன செய்யலாமென்றெண்ணி பட்சிரூபமெடுத்துக்கொண்டு ஆகாயத்திலேபறந்து வாயுமண்டலம் மேகமண்டலம் சூரியமண்டலம் நட்சத்திரமண்டலம் இந்தநால்வகைமண்டலத்துக் கப்புறத்திலும் பறந்துபார்த்தான் பார்த்த அளவிலே வாலானது அப்புறம ஊடுருவிபோவதைக்கண்டு அதிகவிசாரங்கொண்டு இப்படியும் ஆகாதென்று பூமியிலே இறங்கி தன்சுவரூபமெடுத்து கோட்டைக்குட் போகவேண்டுமென்று மெள்ள மெள்ள வாலைக்கிளப்பி உள்ளே நுழையவிட்டான் அப்படி நுழையவி

ட்டமாத்திரத்திலே அநுமாருக்கு வால்அசைவுகொடுத்திருக்க அநு
மார் என்னமோவென்று வாலைக்கெட்டியாகநெருக்கினார் வலுவாகவும்
இருக்கினார் நெருக்கினமாத்திரத்தி லவனுதலையுள்ளே உடம்புவெ
ளியிலேயுமாக நசுங்கிதேய்ந்து நெருக்கி சீவன்போகத்தக்கதாகக் கடி
னமாச்சுது அப்போது தலையைக் கெட்டியாக இழுத்துப் பார்த்தான்
இழுத்தமாத்திரத்திலே வால்நெருக்கமதினாலே முகம் மூக்கு நாக்கு
கண் இவைகளெல்லாம் நசுங்கி தேய்ந்துபோய் இரத்தவெள்ளமெடு
த்துக்கொண்டு தலைவெளியிலே வந்தவுடனே மூர்ச்சையடைந்து சற்
றுநேரஞ்சென்றபின் மூர்ச்சைதெளிந்தெழுந்து அழுது கடவுளைத்
தொழுது மூக்கையும்முகத்தையும் மூடிக்கொண்டு வெட்கப்பட்டு ம
யிலிராவணன் முன்னேவந்து தலையைக் குனிந்துக்கொண்டு கும்பிட்
டுநின்றான் நின்றவனைப்பார்த்து மயிலிராவணன் நகைத்து நகைத்து
வாரும்பிள்ளாய் மந்திரிசிரோன்மணி சாவித்தியனென்னும் நவமணி
யே இங்கிருந்துசொல்லிப்போன விசேடமென்ன இப்போது முக
மும்மூக்கும்தேய்ந்து திரும்பிவந்தவண்ணமென்ன உன்னையிப்படி செ
ததாரென்றுகேட்க சாயத்தியன் மிகுந்தவிசனத்துடன் சொல்லுகி
றான் கேளுமையாசுவாமி நான் அவர்களை பாளையத்திற்குப்போய்கோ
ட்டையைச்சுற்றிப்பார்த்தேன் அக்கோட்டையானது ஆகாயம் பூமிபா
தாளத்திற்கும் ஒன்றாயிருந்ததைக்கண்டு ஆலோசித்து பறந்துபோகி
றபோது வாயுமண்டலம்-சந்திரமண்டலம்-சூரியமண்டலம்-நட்சத்தி
ரமண்டலம்வரையிலும் பறந்துபார்த்தேன்வால்கோட்டை நெருக்கமா
யுயர்ந்திருப்பதைக்கண்டு திரும்பிபூமியிலேயிறங்கிபெருச்சாளியாகி அ
றுத்துக்கொண்டுபோம்போது அதல விதல சுதலநிதல தராதல மகா
தலபாதாளமட்டும் வால்நெருக்கமாகவும் நீண்டுமிருப்பதைக்கண்டு மீ
ண்டும்வெளியிலேவந்து மெதுவாகவாலைகிளப்பி தலையைஉள்ளேபோ
கவிட்டேன் அந்தஅநுமாருக்கு வால்அசைவுகொடுத்தபடியால்வாலை
நெருக்கினார்என்னுடையதலை உள்ளேயுமுடல்வெளியிலேயுமாகத்தே
ய்ந்து சீவன்போவதாய்ப் பிராணனுக்கு அபாயம் வருவதுகண்டு தலை
யைபிழுத்துக்கொண்டே னிழுக்கிறபோது முகம் மூக்கு முதலான
வைகள் நசுங்கிப்போய் பிராணன் பிழைத்து வந்தேனென்று கரன்
சொன்னதைக்கேட்டு நாம் பரிகாசஞ்செய்தோமே அந்த அநுமார்
மகாபராக்கிரமசாலி அவரைச் செயிப்பது அரிது நாம் வந்தகாரியம்
அசாத்தியமாயிருக்கிறது அப்புறம் உமது சித்தத்துக்குத் தகுந்தயுத்

திப்படியே செய்யுமென்று மெத்தவும்வேண்டி சதுரனைத்தாண்டி த
னதுகாவலில் ஆவலோடு சேவகஞ்செய்திருந்தான்.

அப்பால் மயிலிராவணன் சயத்தியன்போனபின்பு மந்திரிகளை
ப்பார்த்து வாருங்கள்மந்திரிகளே நான்போய்வருகிறேன் உங்கள்கை
யினால் ஆக மற்போச்சுதே நீங்கள் இங்கேதானே நான்வருகிறபரியந்
தம்பத்திரமாகவிருங்களென்று சொல்லிவிட்டு மயிலிராவணனானவன்
விபூஷணரைப்போலே ரூபமெடுத்துக்கொண்டு மிகுந்த கோபாவேச
த்துடன் இராமலட்சுமணரெங்கேயென்றுபார்க்க அனுமார் வாலி
னால் கோட்டைகட்டிக்கொண்டிருப்பதைக்கண்டு ஐயா அனுமாரே எ
ச்சரிக்கையென்று சொல்லிக்கொண்டு கிட்டப்போய் கோட்டைக்கு
ள்ளே எல்லாம் எச்சரிக்கையாயிருக்கிறார்களா நான்போய்ப் பார்க்க
வேண்டுமென்றுசொல்ல அனுமார் வாயைத்திறந்தார் திறந்தமாத்திர
த்திலே மயிலிராவணன் அனுமாருடையவாயிலேபுகுந்து செவியிலே
புறப்பட்டுக் கோட்டைக்குள்ளேபோய் இராமலட்சுமணர் படுத்துக்
கொண்டிருக்குமிடத்தைத்தேடி அங்கேபோய் அவர்களைப் பார்த்து
மெதுவாக மயாவிநோதம்பண்ணி இரண்டுபேரையும் எடுத்து ஒரு
பெட்டியிலே போட்டுக் கெட்டியாய்க்கட்டி யெடுத்துக்கொண்டு ஒரு
வார்த்தைசொல்லுகிறான் ஓ அனுமாரே நாழிகைபதினைந்தாயிற்று இ
ன்னம் பதினைந்துநாழிகையிருக்கிறது எச்சரிக்கையாகயிரும் நான்வ
ருகிற கள்ளவழிகளையெல்லாம் பார்த்துவருகிறேன் மயிலிராவணன்
என்னைப்போலும் ரூபமெடுத்துக்கொண்டு வருவான் இதுகளையெல்
லாம் நன்றாகவாராய்ந்துபார்த்திருமென்று சொல்லிவிட்டு விபூஷணரை
ப்போலே அனுமாருடைய செவியிலேபுகுந்து வாயிலேபுறப்பட்டு த
ன்னுடைய மந்திரிமார்களிருக்கிற விடத்திலேபோய் அழைத்துகொ
ண்டு தமதுபாதாளவிலங்கையிலே பெட்டியைக் கொண்டுபோய்வைத்
து சிலஇராட்சசர்களையும் காவல்வைத்துவிட்டுத் திரும்பினான்.

அந்தச்சமயத்திலே ஆகாயவாணிபார்த்துச் சொல்லுகிறாள் அ
டாவாடாமயிலிராவணா இத்தமட்டுக்குந்தான் உனக்குப் பட்டம்பொறு
க்கும் இனிமேல் பட்டம்பொறுக்காது இந்தப் பெட்டியிலிருக்கிறவர்
சாட்சாத் ஸ்ரீவைகுண்டநாயகராகிய இராமலட்சுமணரை யெடுத்து
க்கொண்டுவந்தாயே அதனாலே உனக்கு அழிவுகாலம் வந்துவிட்டது
அனுமாரானவர் வந்து பட்டணமெல்லாஞ் சுட்டுக் கோட்டையைக்
கொளுத்தி இராட்சசர்களையும் கொன்றுவென்று உன்னுடற்பிறந்

தாளாகிய தூரதண்டிப்பிள்ளை நீலமேகனுக்குப் பட்டங்கட்டிவிட்டு
இராமலட்சுமணனை எடுத்துக்கொண்டு போவாரென்று ஆகாயவாணி
பலமுறை நற்புத்திகளெடுத்துகூறினாள் அந்தமகாபாவியான மயிலிரா
வணன்காதிலே நாராசங்காய்ச்சிவிட்டதுபோலும் ஈரமரத்திலேவயிர
வாணி கடாவினாற்போலும் எறிற்று மயிலிராவணன் பயந்து நயந்து
நடுங்கிஒடுங்கி அயர்ந்து வியர்ந்து நாணி மனதுகோணி உடனேதூர
தண்டிகையும் நீலமேகனையும் பிடித்துக்கட்டி கைவிலங்கு மெய்விலங்
கு கால்விலங்கு தோள்விலங்கு மார்விலங்கு இவைகளைப்பூட்டி ஒரு
குகையிலேமாட்டி அடைத்து தன்னுடையவரமனையிலே அம்சதூளி
காமஞ்சத்தில் நித்திரைசெய்யப்போனான்.

அங்கே விபூஷணரானவர் வால்கோட்டையிலே அவரவர்களுக்
கு எச்சரிக்கைகூறிவரும்போது அனுமார் சொல்லுகிறார் ஏன்விபூஷ
ணரே அரைநாழிகைக்குமுன்னேவந்து என்னைப்போலே உருவெடு
த்துவருவானென்றும் நான் அவன்வருகிற கள்ளவழியைப் பார்த்துவ
ருகிறேனென்றும் சொல்லிவிட்டுப்போனீரே என்னையறியாமல் கோ
ட்டைக்குள் எப்படிவந்தீரென்று அனுமார்கேட்டார் விபூஷணர்கே
ட்டு இடிவிழுந்தமரம்போலெரிந்துபொரிந்து கரிந்துசரிந்து குடலுஞ்
சரிந்து எடுத்துக்கொண்டு போய்விட்டானென்று தெரிந்து கழுமரம்
போலுமுறிந்துவிழுந்து எழுந்துவக்கித்து மனம்பேதித்து இயங்கிம
யங்கி அஞ்சித்துஞ்சி அனுமாரைக்கெஞ்சி விசாரமிஞ்சி ஐயையோ
கெடுத்தீர் வீண்பெயரெடுத்தீரேஎன்றுகூற அனுமார் கனிந்து முனிந்
து அகம்வெறுத்து முகங்கறுத்து க்ஷணப்போதிலே மூர்ச்சையடை
ந்தார் மூர்ச்சைதெளிந்து விபூஷணரைப்பார்த்து நீர்சொன்னதுபொ
ய்யல்ல மெய்யே எனக்குமதிமயங்கி ஒன்றுந்தெரியாமற் போயிற்று
இதற்கென்னசெய்வோமென்றுகேட்க விபூஷணர்சொல்லுகிறார்.

வாருமையா அனுமாரே யான் என்தமையனாகிய இராவணனைப்
பகைத்துக்கொண்டு வழிபடுகடவுளாகிய இராமசுவாமியைச் சரண
மென்றடைந்தேன் அப்படிப்பட்ட சுவாமியையும் மயிலிராவணன்
கையில் ஒப்பித்துவிட்டேன் என்னைப்போலொருபாவி இவ்வுலகிலுண்
டோவென்று பலவாறழுது கடவுளைத்தொழுது துயரப்பட அனுமா
ரும் மனதுகலங்கி துயரம்விலங்கிச் சொல்லுகிறார் கேளும் விபூஷ
ணரே நமதுசுவாமி படுத்துக்கொண்டிருக்கிற விடத்திலேபோய் பார்
ப்போம் வாருமென்று அழைக்க நல்லதென்று இருவரும் சுவாமி
படுத்துக்கொண்டிருக்கிற விடத்திலேபார்க்க அவ்விடத்தில் சுவாமி

யைக் காணுகபடியினாலே விபூஷணர்கூறுகிறார் இனிப்பொழுதுவிடிந்
தால் சுக்ரீபர்வருவாரே சுவாமி எங்கேயென்று கேட்பாரே அவருக்
கென்னசொல்லுகிறது இத்தனை பேரிருக்கும் சுவாமியை ஒப்பித்து
விடலாமேயென்று வைவாரே ஆக்கினையும்செய்வாரே எழுபதுவெ
ள்ளஞ்சேனையும் அவரிருப்பிடம்போய்விடுமே நான்சுவாமியை நம்பி
வந்தேனல்லவா நானெங்கேபோவேன் எனக்கோரிடமுமில்லையே அ
னாதிபட்சிபோலானேனே அபகீர்த்தியும் ஆயிற்றே தீரவீரம்போயி
ற்றே சுவாமியை எந்தக்காலத்திலே காண்பேனென்று வெகுவாய்வி
சாரப்படுகிறபோது அனுமார் ஒருவிசேஷஞ் சொல்லுகிறார் ஐயா
விபூஷணரே மயில்ராவணன் உம்மைப்போல உருவமெடுத்தது தெரி
யாமற்போயிற்று இப்படி கபடஞ்செய்வானென்றுதெரிந்தேனாகில் மகா
ஜாக்கிரதையாக இருப்பேன் அப்படிப்பட்ட துன்மார்க்கனைக் கொன்
றுவிட்டு ராமலட்சுமணாளிரண்டுபேரையு மெடுத்துக்கொண்டு வருகி
றேன் நீர்யாதொன்றுக்கு மஞ்சவேண்டாம் அந்தப் பாதாளவிலங்கை
க்குப்போகிறவழி யெப்படியென்றுகேட்க விபூஷணர் சொல்லுகிறார்
கேளுமையா பாதாளவிலங்கைக்கு நீராவதுபோவதேது பாதாளவில
ங்கையோ வெகுகடினம் ஒருவராலேயுமாகாது அஃதெப்படியென்றா
ல் நடுச்சமுத்திரத்திலே பெரியகடற்றாமரை படர்ந்திருக்கும் அதி
லொருதாமரைநீண்டு ஒருபுட்பம் அகலமாயுமிருக்கும் அந்தபுட்பத்தி
ன்தண்டிலே துவாரமாயிருக்கும் அந்ததுவாரத்திலே சரீரத்தையொ
டுக்கி நுட்பமானபுகையைப்போல் போகவேண்டும் அப்படிப்போனால்
அங்ஙனம் பாதாளலங்கை அக்கினிக்கோட்டை யொன்றுதோன்றும்
அக்கோட்டையின்சிகரத்திலே மச்சவல்லபனென்று ஒரு ராட்சசனு
ண்டு அவன்மகாபராக்கிரமசாலி அவனை ஒருவராலேயுஞ் செயிக்கப்ப
டாது அவனோடுகூட ஏவலாளிகள் இரண்டுலட்சம் இராட்சசர்களு
ண்டு ஒருவரைப்பார்க்கிலும் ஒருவர் மகாபராக்கிரமசாலிகள் அங்ஙன
ம்விட்டு மற்றொருபக்கம்போனால் அங்கொருகற்பகத்திருக்குளம் ஒன்
றுண்டு அத்திருக்குளத்திலே அந்தப்பட்டணத்திலுள்ளஜெனங்களும்
இராட்சசஜனங்களும்வந்து தண்ணீர்மொள்ளுவதும பூசைசெய்வது
மாகயிருப்பார்கள் தண்ணீரெடுத்துக்கொண்டு போகிறபோது கோட்
டைவாசலிலே இருக்கிறபேர் தண்ணீர் முதலானதும் துலாபாரத்தி
லேவைத்துநிறுத்துச் சோதித்துக்கொள்ளுவார்கள் அதிலே யாதா
மொரு அத்தாட்சிகாணப்படுவராயின் அங்ஙனமே ஆக்கினையோடுதா
க்கிதுசெய்வார்கள் அப்படிப்பட்ட கடுங்காவலுமாகயிருக்கும் அப்புற

ம்போகையில் அந்தப்பட்டணம் மாடமாளிகை கூடகோபுரம் அரண்மனையோடுதோன்றும் பாதாளவிலங்கையின் பெருமையும் அருமையும் மூவராலும் தேவராலும் யாவராலுஞ்சொல்லப்படாதுஎன்று விபூஷணர் கூற அனுமார்கேட்டு இனிமேல் அரைக்ஷணமிருக்கிறதில்லை நாம்வழிபடுதெய்வமாகிய இராமலட்சுமணரிரண்டுபேரையு மெடுத்துக் கொண்டுவராவிட்டால் பாதாளயிலங்கையிலே என்சீவனை விட்டுவிடுகிறேன் இனி ஒருவருக்கும் என்முகத்தைக் காட்டுகிறதில்லையென்று சொல்லிப்புறப்பட்டார் மறுபடியும் விபூஷணர் சொல்லுகிறார்.

வாருமையாவனுமாரே எந்தவிதத்திலே போய்வரவேண்டுமோ அந்தவிதத்திலேபோய்வாரும் நீர் ஜெயமாகவந்தாலச்சுது இல்லாவிட்டால் இவ்விடத்திலேதானே நான்பிராணத்தியாகம் செய்துக்கொள்ளுகிறேன் அதுநிச்சயமாய் எண்ணிக்கொள்ளும் இராமசுவாமியார்கிருபையினாலே நீர்ஜெயமாய்வருவீர் சீக்கிரத்திலே நமது காரியத்தை ஜெயம்செய்துவாருமென்று விடைகொடுத்தார் அனுமார் பாதாளவிலங்கைக்குப் புறப்பட்டுப்போகிறபோது நடுச்சமுத்திரத்திலேதாமரை விசேஷமாகப்படர்ந்திருந்தன அதிலே ஒரு பெரியதாமரை புட்பமிருந்தன அந்தப்புட்பத்தின் தண்டிலே தனது சரீரத்தையொடுக்கி புகைபோலேபுகுந்துபாதாளயிலங்கைக்குப்போய் அக்கினிக்கோட்டையைக்கண்டு அதனருகேபோகிறபோது அப்பட்டணத்திலுள்ளவர் அனுமாரைக்கண்டுசொல்லுகிறார்கள் அதற்குள்ளே அனுமாருங்கிட்டேவந்துவிட்டார் சனங்கள்பார்த்து இந்தக்குரங்கைப் பிடிக்கவேண்டுமென்றுவந்து நாலுபுறமும் வளைத்துக்கொண்டதை அனுமார் பார்த்து சற்றும்அஞ்சாமல் உடனே தமது விசுவரூபத்தையெடுத்து இராட்சதரைத்தடுத்து வாலாலேவளைத்துச்சுற்றி நிலத்திலேஉளைத்து குரங்கைப்போல்முளைத்து விசுவரூபங்கிளைத்து அடியடியென்றடித்து இடியிடியென்றிடித்துபுடைத்து வாலைத்துடித்துதுள்ளுகிற இராட்சதர்தலையைக்கிள்ளி இரத்தநீரை அள்ளியருந்தி மனதுகனிந்து வீரம்பொருந்திநிற்க மற்றும் இராட்சசர்வந்து எதிர்க்க அவர்களையும் அவ்வாறு கால்மாடு தலைமாடு தலைமாடு கால்மாடாகப்பிடித்து அடித்து இடித்து மீசைதுடித்துப் பற்களை நறநறவென்றுகடித்து யுத்தங்கள் பண்ணுகிறபோது மச்சவல்லபன்கேட்டு மனம்பதைத்து அனேக இராட்சசக்கூட்டமுந் தானுமாக அனுமாரிடத்திலே வந்துநினைந்து சண்டைக்குமுனைந்து வீரமணிகளையாட்டி சவுரியங்களைக்காட்டி வானரசேனையைமாட்டி அரக்கர்கூட்டங்களை நாட்டி சிங்கநாதங்களை மீட்டி

வெற்றிவெற்றியென்று விருதுபடைகளைக்கட்டி யுத்தவாயுதமணிந்து சித்தமாகத் துணிந்துநோக்கி அனுமாரோடுதாக்கி தோர்வையென்பதைநீக்கி வெற்றியென்பதையாக்கி மகாவீரனாகவும் தீரனாகவும் அனுமாரைக்கொல்லவும் அதிசுமெல்லவுமாகவந்து எதிர்த்தனன் அனுமாரும் மச்சவல்லபனும் ஒருவர்க்கொருவர் தாக்கி சண்டைகளாக்கி அவனசுக்க இவரிடிக்க மச்சவல்லபனுவி துடிக்க சற்றும்இளையாமலும்சளையாமலும் தேகம்பதைக்கவும் இராட்சதனுடல்சிதைக்கவும் அனுமார்வதைக்கவும் பூமியில்தள்ளிவுதைக்கவும் இராட்சசன் கோபமீறி அனுமாரைத்தூறி பாம்பைப்போல்சீறி சிங்கம்போல்வீறி அஞ்சாமலும் வீராதீரந்துஞ்சாமலும் அவனோடுகூட சரிசமானமாகச் சண்டைசெய்துவந்தான் அனுமாருக்குக் கைகாலசைந்து தோர்ப்படைந்தார் அப்படித் தோர்ப்படைந்தவனுமார் ஆலோசித்து ஒருவார்த்தை சொல்லுகிறார் கேளும்பிள்ளாய் நீயாருடைய குமாரன் உன்தகப்பன் பேரென்ன உன்தாய்பேரென்ன உன்பெயரென்ன அதையெனக்குத் தெரியும்படியாகச் சொல்லென்றுகேட்க மச்சவல்லபன்கூறுகிறான் அடா வாடாவானரா நீஎன்னகேட்கிறது நானென்னசொல்லுகிறது சண்டைசெய்பவந்தநிபுணன் திறமில்லாமல் சாதிகுலம் கேட்கவந்த நீதிகெட்டவனே எழுந்திருசண்டைசெய்வோம் உன்சமர்த்தும் என்சமர்த்துமறியலாம் சற்றெழுந்திருவென்று வலுவந்தமாகஅழைக்க அனுமார்சொல்லுகிறார் கேளும்பிள்ளாய் இராட்சசசிகாமணியே உன்குலமும் நலமும்-பலமும்-சாதியும்-நீதியும் கேட்பதென்னவென்று கேட்பாயேயானால் சொல்லுகிறேன்.

கேளும்பிள்ளாய் நான் அனேகசீமையிலேயோடி அனேகம்பேருடனேகூடி சண்டைகளாடினேன் சகலரையுஞ்சாடினேன் வெற்றியில்நீடினேன் எனக்குமிஞ்சினபலசாலிகள் இந்தமூன்று மண்டலத்திலுமில்லை அப்படிப்பட்ட மகாசுத்தவீரனாகியநான் உனக்குத் துஞ்சினேன் அஞ்சினேன் ஆனபடியினாலேஎன்னுடையசீவன் உன்கையினாலே போகும்படியாகத்தோன்றுது இதற்குமுன்னமே எல்லாமறிந்து சாவோம் அல்லதுதிரும்பிப்போவோம் என்றுஎண்ணியும் யோசனைபண்ணியும்சொன்னேன் இவ்வளவுபராக்கிரமசாலியாகிய உன்னைபெற்றமாதாயாரோ அவளைச்சேர்ந்தசுத்தவீரன் எத்தனைபராக்கிரமசாலியாகவிருப்பானோவறியேன் எவ்வளவுதபசுசெய்து பெற்றார்களோ அதையுங்குறியேன் இப்பேர்ப்பட்டபெலத்துடன்கூடி ஒருவனிடத்திலேசேவிப்பானேன் நீஇந்தப்பதினாலுலோகங்களுஞ் செயிப்பாயேடா

யிலிராவணனிடத்திலே சேவிக்கிற காரணமென்ன நான்கேட்கிறே
னென்று கோபித்துக்கொள்ளவேண்டாம் என்னைச்சண்டைக்கு அழை
யாதே நான்உன்னோடேசண்டைசெய்யவெனக்குப்பலனில்லை என்பே
ரில் தயவுசெய்யுமையாவென்றழுதார் பலமுறையுந்தொழுதார்.

மச்சவல்லபன் மனதிரங்கி தஞ்சமென்றவரைக் கொல்லக்கூடா
தென்று நெஞ்சில்நினைத்து கேளும்வானரசிகாமணியே என்னுடைய
தாய்தகப்பன்பேர் சொல்லுகிறேன் கேளும் கேட்டபின்புசண்டைக்
குவாரீரோஎன்ன அப்படியேயல்லதென்று அனுமார்கூறமச்சவல்லப
ன் சொல்லுகிறான் ஐயாவானரோத்தமா என்தகப்பன்யாரென்றால் அ
ஷ்டதிக்குப்பாலகரையும் வெல்லுவான் மும்மூர்த்தியையுங் கொல்லு
வான்மகாசமர்த்தன் சுத்தவீரன் சத்துருசம்மாரன் சாவில்லாமல்சிரஞ்
சீவிபெற்றவன் சாட்சாத் சிவசங்கற்பமாயிருக்கிறானே அவன்தான்
என்தகப்பன் அவரதுநாமதேயம் அனுமாரென்று சொல்லப்படும் எ
ன்தாயார் திமிதிஎன்னும்மச்சம் என்தகப்பனைப்பெற்றவன் வாயுபக
வான் என்பெயர்மச்சவல்லபன் என்றுசொல்ல அனுமார்கேட்டுத்திடு
க்கிட்டு மச்சவல்லபனைப்பார்த்து அங்ஙனேயோசித்து ஏதடாஎன்னை
தவிர வேறொருஅனுமாருண்டோ இல்லைநான்ஒருவன்தானேஅனுமா
ர்இதென்னவிசித்திரமாயிருக்கிறது எனக்குஸ்திரீகளில்லையே நாம்நித்
தியபிரமசாரியாயிற்றே ஆனால்முன்னம் இலங்கைக்குப்போய்சீதை
யைத்தேட இராவணனுடையபுட்பகவிமானத்தில் ஸ்திரீகள்தானுமா
றுக்கிடந்தார்களே அவர்களை நாம்பார்த்துச்சாபல்லியப்பட்டோமே
ஐயையோ என்னையறியாமல்பிள்ளைவந்தகாரணமேது என்னமோபுது
மையாகத்தோன்றுது மற்றும்கேட்டறிவோமென்று கேட்கிறார்.

வாருமையா மச்சவல்லபா மறுபடியுங்கேட்கிறேனென்று கோப
ஞ்செய்துகொள்ளாதே என்வார்த்தையைத்தள்ளாதே இன்னம்ஒருவி
சேடம்கேட்கிறேனென்று சொல்லுகிறார் அனுமாரென்று சொன்னீ
ரே அவன்எங்கேயிருக்கிறவன் யாரிடத்திலேசேவிக்கிறவன்சொல்லு
மென்றுவினவ மறுபடியும் மச்சவல்லபன் அனுமாரைப் பார்த்துச்
சொல்லுகிறான் அடாவாடாவானராதிபதி என்தகப்பன் அரிராமலட்சு
மணனுக்குச்சேவகன் அவனுக்குத்துரைசுக்ரீபன் அந்தசுக்ரீபன்மந்தி
ரியென்தகப்பன்வாலியினாலே ஓடப்பட்டுவனாந்தரத்திலிருக்கஅப்போ
துஇராமலட்சுமணனுள் நட்புக்கொண்டு அவர்களால்யாவும் திட்டப்படு
த்திகிஷ்கிந்தையைப் பட்டங்கட்டிவைத்தமகானுபாவன் அவரேஎனது
தகப்பனென்றுகூற அனுமார்சந்தோஷித் திருதயமகிழ்ந்து புகழ்ந்து

சொல்லுகிறான் உன்தாய்தகப்பன்பேர்கேட்டால் இப்படிபரிகாசஞ்செய்யலாமோ பொய்சொல்லலாமோ நான் அந்த அனுமாரையறியேனே அவ்வனுமார் நித்தியப்பிரம்மசாரியாயிற்றே அவருக்குஸ்திரீ உண்டோ பொய்சொல்லாமற் சொல்லுமென்றவனை மச்சவல்லபன் சொல்லுகிறான் வாராய்வானராதிபதியே என்தகப்பன் அனுமார் இராமலட்சுமணருடனே சுக்கிரீபன் அங்கதன் நீலன்நளன்குமுதன் கேசன்தேவாட்சன் முதலானபேர்களுடனே சீதையைக்காணமல் நாலுமூலைக்கும் வானரரை அனுப்பும்போது என்தகப்பன் தெற்குபாரிசத்திலே வந்துசமுத்திரக்கரையிலேவந்து சீதை இலங்கையிலே இருக்கிறாளென்றறிந்து அங்ஙனமிருந்தபடியாக ஆகாயத்திலேபறந்துசமுத்திரம் நூறுயோசனைதாண்டிபோகும்போது அந்தசமுத்திரத்திலே லச்சை என்கிறஇராட்சசி அனுமாருடையசாயல்நிழலைக் கண்டுபிடித்துக்கொண்டுவிழுங்க என்தகப்பனாகிய அனுமார் அந்தஇராட்சசிவாயிலேபுகுந்து உள்ளேபோய்வயிற்றைக் கிழித்துக்கொண்டு போகிறபோதுமகா இளைப்பாக உடம்புவேர்வைவேர்க்க அவ்வேர்வையைப்பிழிய சமுத்திரத்திலே வாசஞ்செய்கிற திமிதிஎன்கிற பெண்மச்சம்வாயிலே விழுந்தது அந்தவேர்வையை மீன்விழுங்கினவுடனேகருப்பந்தரித்து என்னைப்பெற்றாள் அத்தட்சணமேநான் சமுத்திரக்கரையிலே குளிர்நடுக்கஉடம்புசிலிர்க்கஉட்கார்ந்தேன் அப்போது இருந்தாற்போலிருந்தொருதிவ்யபுருஷன்வந்து என்னையெடுத்து மடியின்பேரில் வைத்துக்கொண்டு உள்ளங்கால்முதல் உச்சந்தலைவரையிலும்தடவிநொடுத்துஎன்னைமூகந்துகொண்டு முத்தமிட்டுக்கொண்டார் அப்போதுநான் திவ்வியபுருஷனைப்பார்த்து வாருமையா நீர் ஆரையாஎன்பேரிலேவெகுபிரீதியாக உற்றார்பெற்றார்போல் என்னைபட்சமேடெடுத்து முத்தமிட்டுக்கொள்ளுவ தென்னவென்றுகேட்க அத்திவ்வியபுருடன் சொல்லுகிறான் ஓஒகுழந்தாய் நானுமக்குப்பாட்டனென்றுகூறி எனக்குப்பேருமிட்டார் நான்மச்சத்தின்வயிற்றிலே பிறந்தபடியால் மச்சவல்லபனென்று நாமதேயமிட்டார் இப்படியிருக்க நான்பாட்டனாகியவாயுபகவானைப்பார்த்து பாட்டாஎன்தகப்பன்எங்கே என்றுகேட்டேன் அவர் சொன்னது வாருங்குழந்தாய் உன்தகப்பன்பேர் ஆஞ்சனேயனென்றும் அனுமாரென்றுங்கூறி அவருக்கு அனேகவரங்கொடுத்து முப்பத்துமுக்கோடி தேவர்களாலும் செயிக்கப்படாது (௰௮) அஸ்திரத்தினாலேயுஞ்சாவில்லையென்றுகூற அப்போதுநான் என்தகப்பன் இப்போ

துளங்கேளென்றுகூற வாயுபகவான்சொன்னது அதோ அனுமார் சீதையைக்கண்டுபேசி இலங்காபுரிபட்டணத்தைக் கொளுத்தினாரென்றார் வாரும்பாட்டா எனக்குவரந்தரவேண்டுமென்றுகேட்டேன் அவர் சும்மாவரந்தரலாகாதென்ன ஒருநாழிகைதன்னைக்குறித்து தவஞ்செய்யென்றுசொல்ல நான் அப்படியேதவஞ்செய்ய அவர்சந்தோஷப்பட்டு தவசைநிறுத்தி என்னவேணுமென்றுகேட்க நான்வரம் ஒன்றுயிருக்கவேண்டும் என் தகப்பன்வரத்திலும் அதிகமாகஇருக்கவேண்டுமென்றுகேட்டேன் நல்லதென்றுவரங்கொடுத்துப்போனார் இப்படியாகஎன்னுடையபூர்வோத்திரம்கேட்டீரோ வானரனேஎன்றுசொன்னான்.

இந்தவசனங்களையெல்லாம் அனுமார்கேட்டு சந்தோஷித்து நயப்போடும்வியப்போடும் மெய்யென்று ஒத்துக்கொண்டுசரீரத்தை அநியாயமாய் மடிக்கபார்த்தோம் நமக்குபுத்திரசிகாமணி கிடைத்தது நமதுபாக்கியந்தான் என்றெண்ணியோசனைபண்ணி ஆஆ புத்திரசிகாமணியே நான்தான் அனுமாரென்றுசொல்ல மச்சவல்லபனானவன் உடனேபயந்து நயந்துநடுங்கி யொடுங்கி அடிபணிந்து தகப்பனென்றெண்ணி நமஸ்காரம்பண்ணி ஆடிப்பாடி காலிலேஓடிவிழுந்தெழுந்துநிற்க அனுமார்மச்சவல்லபனையெடுத்து முத்திகொடுத்து மடிமேலேவைத்துக்கொண்டு உச்சியைமுகந்து சரீரமெல்லாந்தடவி அப்பாகுமாரா மச்சவல்லபா நானுன்னையடித்தேன் மகாபாவியானேனென்று மறுபடியுஞ்சொல்லுகிறார்.

கேளுமையா மச்சவல்லபா நானொருகாரியமாகவந்தேன் எனக்கு அந்தகாரியம் சாதித்துதரவேண்டுமென்ன மச்சவல்லபன் சொல்லுகிறான் வாருமையா நீரென்னகாரியமாக வந்தீர் நானே அந்தகாரியத்தை முடித்துக்கொடுக்கிறேன் சொல்லுமையாவென்று வினவ அனுமார்சொல்லுகிறார் கேளுமப்பா மச்சவல்லபா திசைகண்டராவணனோடே இராமலட்சுமணனும் வானரசேனைகளும்கூடி சண்டைபண்ணி மூலபலத்தையும் அதஞ்செய்த பின்பு திசைகண்டராவணனானவன் இந்த மயிலிராவணனை யழைப்பித்து இராம லட்சுமணனைக்கொண்டுபோய் உன்னுடைய பாதாள யிலங்கையிலே கொன்றுபோடுமென்றான். அவ்வாறே மயிலிராவணன் இராத்திரிவந்து என்னைமோசம்செய்து இராமலட்சுமணனை யெடுத்துவந்தான் அதன்பின்பு நான்

பத்துடனே மயிலிராவணனைச் சங்கரிக்கிறேனென்று பிரதிக்கினை செய்து நான் அவனைத்தேடிவந்தேன் அவ்விராமலட்சுமணரெங்கேயிருக்கிறார்கள் உளவுகள் உனக்கு ஏதாகிலுந் தெரியுமல்லவா சொல்லுமென்ன மச்சவல்லபன் சொல்லுகிறான் ஐயா நான் முன்னம் குழந்தையாயிருக்கிறபோது வாயுபகவான் எனக்கு வரங்கொடுத்துப்போனாரே அப்போது நான் ஒருயோசனைசெந்திருந்தேன் அதாவது இந்தப்பதினாலுலோகமும் ஜெயிக்கவேண்டுமென்று கருதியிருந்தேனே அப்போதந்தமயிலிராவணன் வேட்டைமார்க்கமாகப் புறப்பட்டு நானிருக்குமிடத்திலேவந்து என்னுடைய முகங்களையும் பராக்கிரமத்தையுங்கண்டு மகிழ்ச்சிகொண்டு மயிலிராவணன் சாஷ்டாங்கமாகக் காலிலவிழுந்து பணிந்து துணிந்து ஒருவரம் வேண்டுமென்று கேட்டான் நானவனைப்பார்த்து சந்தோஷப்பட்டு இப்படிப்பட்ட இராஜாவானவன் சிறுபிள்ளையாகிய என்காலில்விழுந்து கேட்டானென்று மகிழ்ந்து மயிலிராவணனைப்பார்த்து உனக்கு என்னசெய்யவேண்டுமென்று கேட்டேன் மயிலிராவணன்சொன்னது வாரும்பிள்ளாய் மச்சவல்லபா நானாளுகிற பாதாளயிலங்கையைக் காத்துக்கொண்டு வரவேண்டுமென்று அழைத்துவந்து தன்னிடத்தில் வைத்துக்கொண்டான் அன்றுமுதலின்றையவரையிலும் நான் காத்துவருகிறேன் இப்போதெப்படியும்மைவிடுவேன் நீர் தர்மசாஸ்திரமியாவுமறிவீரே உம்முடையமனதுக்குத்தக்கபடி நடவுமையாவென்று வணங்கிச்சொல்ல அனுமார் மச்சவல்லபனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

கேளும்குமாரகா ஆனால் நான்செய்யவேண்டியதென்ன அபஜெயப்பட்டால் அந்தவபகீர்த்தி உனக்கில்லையா உன்னுடையதல்லவா என்று இவர்பலமுறையாகச்சொல்ல மச்சவல்லபன் சொல்லுகிறான் வாரும்பிதாவே நான் உயிரோடிருந்து மயிலிராவணனுக்குத் துரோகம்பண்ணமாட்டேன் உம்மைச்செயித்து உலகத்திலே அபகீர்த்தியுமடையமாட்டேன் உமக்கு அந்தரங்கமான வார்த்தைகளைச் சொல்லுவதுதருமமல்ல ஆனாலும் உம்முடைய விவரத்தை யறிந்து சொல்லுகிறேன் நீவரும்போது தாமரைக் கமலத்திலே இரண்டாயிரம் இராசாகளிருந்தார்களே அவர்களைக் கொன்றெறிந்து வந்தீரோ சொல்லுமையாவென்றுகேட்க அந்த இரண்டாயிரம் இராட்சதரையும் கொன்றுவந்தேனென்றுசொல்ல மச்சவல்லபன் சொல்லுகிறான் ஆனால் ஜெயமடைவீர் நானும்மை சும்மாவிடக்கூடாது ஒருதந்திரஞ்

சொல்லுகிறேன் அதெங்ஙனமெனில் என்னைநடுமார்பில்குத்துவீராகில் நான்மூர்ச்சையாய்விழுவேன் என்னுயிர்நிலையறுதான் அவ்விதஞ்செய்து அப்புறம் நீர்உள்ளேபோம் என்றுசொல்ல அனுமாரானவர் அங்ஙனேயோசித்து சுவாமியைப்பூசித்து துயரப்பட அதைக்கண்டமச்சவல்லபன ஓஒபிதாவே நான் இப்படியிருந்தால் உள்ளேபோகமாட்டீர் நாழிகையதிகமாகுது இப்படியிருக்கக்கூடாது முன்பின்யோசியாமல் உமதுபலமெல்லாம் சேர்த்து ஓங்கிக்குத்துமையாவென்று தனதுமார்பைக்காட்டிநிற்க அப்போது மனவருத்தத்துடனே ஐந்துவிரலையு முஷ்டியாகப்பிடித்து மச்சவல்லபன் மார்பிலேகுத்தினார் அந்தக்குத்தினாலே மச்சவல்லபன் கீழேவிழுந்து மூர்ச்சையடைந்தான் அனுமார் தனதுகுமாரனுக்கு வலித்ததோவென்று விசாரத்துடன்மூர்ச்சையாய்விழுந்த மச்சவல்லபனைத் தடவிக்கொடுத்து சுகமாயிருக்கும்படி ஆசீர்வதித்து இராமசுவாமியைத் துதித்து பாதாளவிலங்கையைமிதித்து இராட்சதா எங்கேயென்றுமதித்து உள்ளேசென்று அங்ஙனம்நின்று மற்றோர்பக்கம் பிரவேசித்தார்.

அப்படிபோகிறபோது அவ்விடத்தில் முதற்கோட்டை கல்லினாலே கட்டப்பட்டிருந்தது அதைப்பார்த்து அப்பால் போம்போது நாலாயிரலட்சம் இராட்சதர்கள் ஆயுதத்துடனே காவலிருக்கிறார்கள் அவர்களை அனுமார்பார்த்து தேகம்வேர்த்து இவர்களை எவ்வாறு சங்கரிப்போமென்றுகருதி மயங்கிச்சொல்லுகிறபோது அங்கே ஒருமரமானது பிரமாண்டமாக இருக்கப்பார்த்து அந்தப்பெருமரத்தை வேரோடுபிடுங்கிக்கொண்டு குபீரென்று இடிவிழுந்தாற்போற் பாய்ந்து அந்த செங்கற்கோட்டையின் வாசற்படியை மூக்கினால் படல்கட்டி மூடி முத்திரிகைபோட்டுக்கொண்டு உள்நுழைந்து இராட்சதர்களைப் பார்த்து கோபநகைசெய்து அனுமாரானவர் மரத்திலே சூரையடிப்பதுபோல இராட்சசர்களை அடிக்கிறகாலத்தில் இராட்சசர்களெல்லாம் கத்திகளையும் வாள்களையும் உருவிப் புறப்பட்டு அனுமானைக் கொல்லும்படியாக எதிர்த்து ஆயுதங்களை யெறிந்தார்கள் அதைக்கண்டவனுமார் சற்றுமஞ்சாமல் அவ்வித அரக்கரையெல்லாம் நோக்கி ஒருவரோடொருவரைத் தாக்கி யுத்தஞ்செய்கிறபோது சத்தசமுத்திரமுழக்கம்போல் சக்ராயுதமும் சுக்குமாந்தடியும் கண்டகோடாலியும் தெண்டாயுதமும் அஸ்திரசஸ்திரமுங்கொண்டு சிலராக்ஷதர்கள் வர சிலர்கண்டு வாள் வேல் வில்முதலியவைகளைக்கொண்டு நாற்புறத்திலுஞ் சூழ்ந்தார்கள் சிலர் மல்யுத்தத்திற்குச் சேர்ந்தார்கள் யா

னை-௯௰-லக்ஷம் குதிரை-௯௰-லக்ஷம் தேர்-௲-லக்ஷம் ராட்சசர் நூறாயிரம்லக்ஷம் இப்படிப்பட்ட சேனைசைனியங்களுடனே வந்தெதிர்த்தார்கள் அப்போது அனுமாரானவர் கையிலிருந்தவிருக்ஷத்தினால் நாகாசிதமாகச்சாடினார் அக்கணத்தி இராட்சசர்கள் யாவரும் கால்மடிதலையாடு தலையோடு கால்பாடாக கைவேறு மெய்வேறு தோள்வேறு தாள்வேறு உடல்வேறாகச் சிதைந்துமடிந்தார்கள் ஆயுள்காலமுடிந்தார்கள் நரகலோகசத்துருபயிற்படிந்தார்கள் இப்படி நிர்மூலமாகவடித்து இராட்சசர்களைப்பிடித்து தரையிலறைந்து அனுமார் வெற்றியிறசிறந்து துறந்து வீரமோடுதீரமாக அப்புறம்போம்போது அவன் ஆளப்பட்ட பித்தளைக்கோட்டையானது மகாகுண்டலசிகரமோடி பகரமாகத்தோன்றிற்று அதிலே (அ௱௩) இலட்சம் இராட்சசர் கூட்டங்கள் நிறைநிறையாக இருப்பதைக்கண்டு களிப்புக்கொண்டு நம்முடைய அதிஷ்டம் தெய்வாதீனமிப்படியாக யிருந்தது இன்றுபிழைத்தோம் இலைபோல தழைத்தோம் மூலக்கொருவனாக இராமல் ஒன்றாகயிருந்தது நன்றாகமுடிந்தது நாம்கொண்ட கோட்பாடு தெண்டம்வராது இனியாவரையுமுறக்கி இறக்கி நெருக்கி நொறுக்கிவிடுவதேயோக்கியம் இதுவேசில சுகியம்இராமர்கொடுத்ததேபாக்கியம் நல்லவாக்கியமாகவெண்ணி மகிழ்ந்துபுகழ்ந்து அண்ணார்ந்து இறுமாந்து விடைந்து பூரித்து ஆரவாரித்து யுத்தத்துக்குப் பிரயத்தனமானார்

அப்போது அனுமாரானவர் சரீரத்தைப்பெருக்கி விஸ்வரூபம்புதுக்கி அண்டகோளம்வரைக்கும் பிரம்மாண்டமாகவளர்ந்து நிமிர்ந்து இருகையையும் குவித்துத் தவித்துக்கூட்டி அபிநயங்கூட்டி விழிமலர்த்து அரிந்து குபீல்குபீலென்று பறந்து மெய்மறந்து அநதபாடசதரையடித்து வாயினாலேகடித்து ஒருவரோடொருவரைத் தள்ளிச்சிக்கப்போலத்துள்ளி யாவரையும் விடாமலும் ஆயுதமெடாமலும் தொடாமலும் காயப்படாமலுமாகப் போர்புரிகிறபோது அங்கே ஆண்டாயிரம் ராட்சதர்கள்மடிந்தார்கள் இவ்வாறாக அனுமாராலவடித்து மடித்துவிட்டுப் போகிறபோது செப்புக்கோட்டையானது மடமாளிகை கூடகோபுரமும் அரண்மனையோடு தோன்றிற்று.

அந்தச் செப்புக்கோட்டை யானதைப் பார்க்கு மிடத்திலே ௨௰-லட்சம் இராட்சதர் ஆவலோடு காவலாளிகள் சேவகஞ் செய்துக்கொண்டு இருப்பதைப் பார்த்து சீக்கிரமாக சாக்கிரதையோடு குபீரென்றகுதித்து ராட்சசரென்று மதித்து இராமரைத் துதித்து

அரக்கரைமிதித்துக் கொன்றுவென்று நின்று இறுமார்ந்து அப்பால் வெங்கலக்கோட்டை தோன்றிற்று அதிலேகாவல் (உஅ)லட்சம் இராட்சசரிருப்பதைப் பார்த்து கொல்லுவோமென்று தீர்த்துச் சீக்கிரமாக அந்தவெங்கலக் கோட்டையின் கதவை மூடிக்கொண்டு தாப்பாளைப்போட்டுக்கொண்டு சாப்பாக ஒருவரைவெளிவிடாமல் எல்லாரையும் அதமாகவடித்து இடித்துநெருக்கி இறுக்கி அவரவரெலும்புகளைப்பொருக்கி கடலிலேபோட்டுவிட்டார் அரக்கர்களெல்லாம் யமபுரஞ்சேர்ந்தார்.

அனுமாரானவர் அப்பால்போகிறபோது பொன்கோட்டைதோன்றிற்று அங்ஙனம (கூகூ) லட்சம் இராட்சசர் இருக்கக்கண்டு மகிழ்ச்சிகொண்டுகளித்து ஆனந்தக்கடலிற்குளித்து அங்குமப்படியேஅற்பமாகவெண்ணி அதமாகப்பண்ணி அப்பால் நடக்கிறபோது பவளக்கோட்டைதோன்றிற்று அதிலே (அய) லட்சம் இராட்சசரிருப்பதையறிந்து கையினலேயெறிந்தறைகிறபோது அங்ஙனே ஒருகொடிக்கம்பமானது நவரத்தினகசிதமாய் நூறுயோசனை விஸ்தாரமாயிருக்க அதைப்பிடுங்கிக்கொண்டு அரக்கர்படையிலே விழுந்து அதம்பண்ணிவிட்டு அப்பால் புறப்பட்டுபோகிறபோது சரீரமானது சிறுக ஒரு அணுவளவாக எடுத்துக்கொண்டு கோட்டையின்மேலே துலாயெந்திரங்கூடியிருப்பதைப்பார்த்து அங்கேயிருக்கிற இராட்சதரைக்கண்டு எண்ணியோசனைபண்ணி உள்ளேபோகிறபோது தங்கக்கோட்டைகாவற்காரர் புறப்பட்டு வாரார்கள் பத்துலட்சம் இராட்சசர்கள் மேளம் தாளம் வெடி தடி கொடி தமுறு சப்பட்டை எக்காளம் முதலிய வாத்தியத்துடனே பாதாளலோகம கிடுகிடுவென்று அதிர வருவதைக்கண்டு பயங்கொண்டு அங்ஙனே யோசனைசெய்து என்னசெய்வோம் எங்கேபோயொளிப்போமென்று நாலுபக்கமு மிடம்பார்த்த மிடமில்லாமல் அந்த முத்துக்கோட்டைக்கு உத்தரபாரிசத்திலே ஒருதோப்பானது சிறிது உத்தியானவனமும் சிறிதுவிருட்சசாதிகளும் சிலநந்தவனமுஞ் சாலையுமிருப்பதைப் பார்த்து அந்தத்தோப்பிலேமறைந்திருக்க வேண்டுமென்றுபோய் ஒருமரத்தின மறைவிலே ஒளித்திருந்தார்.

அப்போது நகரிசோதனைக்குப் புறப்பட்ட இராட்சதர் மேலண்டைக்குப் போய்விட்டார் அனுமாரந்தமரத்திலே இருந்தபடியாக நாலுதிவும்பார்த்து ஒருவருமில்லையென்று மனதிலேமதித்து கீழிறங்கி அந்த நந்தவனமிருக்கிற அழகைப் பார்த்து இது யாருடைய

வனமோ இத்தனை அழகாகப் பொருந்தியிருக்கிறதென்று நினைத்து மனதில் நினைத்து நாலாபுறமுஞ் சுத்திவரும்போது அவ்விடத்திலே ஒரு மண்டபமானது மயிலிராவணன் பரதநாட்டியம் பார்க்க நடனஞ்செய்கிறமண்டபம் ஒருவராலு மமையாத அழகோடு கட்டியிருப்பதை அநுமார்பார்த்து வெகுவேடிக்கை விநோதமோடு பார்த்துவந்தார் இதுபார்கட்டிவைத்த மண்டபமோ அல்லவென்றும் மயிலிராவணன் சிங்காதனமண்டபமோ என்று அதிலே உட்கார்ந்துக்கொண்டிருந்தார்.

இந்தக்கதை யிப்படியிருக்க கேளும் கௌதமமகாரிஷியேயென்று நாரதரிஷிசொல்லுகிறார் அப்பால் அந்தப்புரத்திலேயிருந்தமயிலிராவணன் மாதங்கியுடன் கூடி சரசசல்லாபமாடி மன்மதன்போலநீடி குங்குமகதம்பஞ்சூடி சம்போகபாக்கியங்களை அனுபவித்துநித்திரைசெய்துக்கொண்டிருந்தவன் திடீரென்று எழுந்து கண்விழித்து வெளியேவந்து எத்தனைநாழிகை ஆயிற்றென்று நக்ஷத்திர உச்சமானதைப் பார்த்து நாழிகை (௨௨) ஆய்விட்டது இனிசும்மாயிருக்கக்கூடாதென்றுநினைத்து பாதாள இலங்கைக்குப் பத்தினியாகிய பத்திரகாளிக்கு ராமலட்சுமணனை பலிகொடுக்கவேண்டும் இன்னம் பொழுதுவிடிய எட்டுநாழிகையல்லவோ இருக்கிறது இதற்குள்ளே சுருக்காயபிஷேகத்திற்கு ஜலங்கொண்டுவரச் சொல்லவேண்டுமே யாரையனுப்புவோமென்று உடனே யோசனைசெய்து தன்னுடன் பிறந்தாளாகியதூரதண்டிகையை யழைத்து அடிதூரதண்டியே இப்போது நீயென்னுடை யுத்தியானவனத்தில் தண்ணீர்கொண்டுவாவென்றுசொல்லி தங்கக்குடமெடுத்துக்கொண்டு சீக்கிரங்கொண்டுவா போடியென்று கட்டளையிட்டான்.

அந்தத் தூரதண்டியானவள் தானுந்தன்மகனும் (௬௧) வருஷம் விலங்கிலேயடைப்பட்டிருந்தோமே இப்போதென்னமோ நம்மைக்கொல்லநினைத்து தண்ணீர்க்குப் போகசொல்லுகிறானென்றுசருதி மயிலிராவணனைப்பார்த்து சொல்லுகிறாள் வாடா அப்பாமயிலிராவணா என்னையும் விலங்குபோட்டு காவலாளிகளைக் காவல் வைத்தாயே இப்போதுதண்ணீர்கொண்டுவந்தால் என்னையு மென்மகனையும் வெட்ட யோசனைசெய்கிறது உண்மையானால் எங்களிருவரையுமிங்கேதானே வெட்டிப்போடுமப்பாவென்று வருந்திச்சொல்ல மயிலிராவணன் தூரதண்டியைப்பார்த்துச் சொல்லுகிறான் அடிதூரதண்டி அப்படியுங்களி

ரண்டுபேரையும் வெட்டுகிறதானுல் எனக்கென்னபயம் இங்கேயே
வெட்டமாட்டேனே வேறேயொருகாரியமிருக்கிறது உங்களைவெட்ட
வில்லை அஞ்சாதே நீ தண்ணீருக்குப்போடியென்றுசொல்ல தூரதண்
டிசொல்லுகிறுள் அடா அண்ணே யிந்த அர்த்தராத்திரியிலேதண்ணீ
ரென்னத்துக்கென்று வினவமயிலிராவணன்சொல்லுகிறுன் வாடிதூர
தண்டி திசைகண்டராவணனுக்குச்சத்துருவான இராமலட்சுமணனை
நமதுபத்திரகாளிக்குப் பலிகொடுக்கவேண்டும் வெளியேஒருவரோடு
ஞ்சொல்லாதேபோடியம்மா சமுத்திலே தண்ணீர் கொண்டுவாவென்
றுசொல்ல தூரதண்டி மனதுகசிந்துநசிந்து ஆதெய்வமே நானென்ன
பாவஞ்செய்தேனே பூர்வத்தில்செய்தவினை யிந்தச்சமயத்தில் லிவ்வா
றுநானும்என்மகனும் காலிலேவிலங்குமாட்டிக்கொண்டு புருஷனைப்ப
றிகொடுத்து இப்படியிருக்கின்றேனே இந்தப்பாவமனுபவித்தால் அந்
தத்தருமபுருஷர்களானராமலட்சுமணனை பலிகொடுக்கும்போது நாம
ஜலங்கொண்டுவருவதுதருமமா ஐயோபாவம்வந்து விதித்ததேயென்
றுமயிலிராவணனைப்பார்த்து நான் தண்ணீருக்குப் போகமாட்டேன்
அண்ணேயென்றுசொன்னுள் அப்போதுமயிலிராவணன் கோபத்தோ
டுபார்த்து அடிதூரதண்டியே இதை ஒருவரோடுசொல்லாதே என்
று நானுன்னைத்தண்ணீருக்குப் போகச்சொன்னுல் இராமலட்சுமண
னை கூப்பிட்டழைக்கிறுயே எனவடியென்று தனது உரையிலேயிருந்
த கத்தியையுருவி இதோஉன்னை வெட்டுகிறேனென்று பயமுறுத்தின
ன் தூரதண்டி நடுங்கி அவர்ந்து இதோநான் தண்ணீர் கொண்டுவருகி
றேன் என்றுகூறித் தங்கக்குடத்தை யெடுத்துக்கொண்டு புறப்பட்டு
ப்போனுள் அந்தத்தங்கக்கோட்டையுங் கலாவேந்திரத்தையுந் தாண்
டிமயிலிராவணனுடைய உத்தியாவனத்துக்கு வந்துவிட்டாள் அந்த
சமயத்திலே அனுமார்கண்டு அங்கேயேயிருந்துசரேலென்று சரீரத்
தை அணுவைப்போலக்குறுக்கி அந்தமண்டபத்திலிருந்தோடி ஒரும
ரத்தின்கிளையிலேறிக்கொண்டு இலைமறைவிலே மறைந்திருந்தார்.

தூரதண்டியானவள் உத்தியாவனத்துக் கதவைத்திறந்து உள்
ளேவுட்கார்ந்துக்கொண்டு தாப்பாளைபோட்டுவிட்டு உட்கார்ந்துக்கொ
ண்டு தன்னுடைய விசனத்தினுலே அழுது ஆதெய்வமே நானென்ன
செய்வேன் இந்தப்பாதகன் என்தலையிலே விடிந்ததோ இராமலட்சு
மணனுடைய சிவன்போகமுடிந்ததோ அந்தப்பாதகனுக்கு துர்ப்புத்தி
படிந்ததோ பார்த்தாயா புண்ணியபுருஷரானவருக்கிப்படிவருமோ எ

ந்தராச்சியத்திற் பிறந்தார்களோ இந்தராச்சியத்திற்சிவன்போகப்பிர
மதேவனெழுதினுனோ நாலுமென்மகனு மிந்தச்சண்டாளனுனதின்
டோளன் காலிலே விலங்குதரிக்கத் தெய்வம் விதித்ததோ இராமல
ட்சமணுளுக்கு மிப்படிலபித்ததோ இதுபாரசபித்ததோ நமக்கு மவர்
களுக்கும் ஒன்றாகஆச்சுதோ ஆயனெழுத்தும்போச்சுதோ ஆதெய்வ
மே பரமசிவமாகியகைதவமேஎன்று நொந்து தன்பவார்த்தைகளைத்
தந்து வாயில்வந்தபடியுளரிஆபாதகவிபூஷணனுகிலுமிராமலட்சுமணு
ளை வந்து எடுத்துக்கொண்டு போகலாகாதோ இல்லாவிடிலரோஅநு
மாரென்கிறபுண்ணியவான் கோட்டையிட்டுக் காப்பாற்றினுரே அவ
ருக்காகிலும்வழி துரைசொல்லியனுப்பலாகாதோ அடாவிபீஷணுகெ
டுத்தாயே இராமலட்சுமணுள் அனியாயமாகப்போகிருர்களேயென்று
பலவாருக அழுகிருள் மணலில்விழுகிருள் மறுபடியழுகிருள் சுவாமி
யைத்தொழுகிருள் பூமியையறைவாள் மீறைவாள் இராமனைநினைத்து
த்துணிவாள் இதுஎன்னவிதியென்பாள் தெய்வமேகதியென்பாள்இப்
படிபலவாருகச் சிந்திப்பதை அநுமார்கண்டு மகிழ்ந்துகொண்டுபூரித்
துஆலவரித்து யோசித்து இவளாரோகன்னிகை ராமகாரியம்விசுவ
சிக்கிருள் பூசிக்கிருள் அழுகிருள்விழுகிருள் தெரியவில்லைவிட்டப்போ
னல் பயந்தோடிப்போவாளோ அறியோம் அல்லது மயிலிராவணன்
தானே பூருவேடம் போட்டுக்கொண்டு இப்படி கபடுசெய்கிருனே
யாதொன்றுந்தெரியோம் என்றுநினைத்துகனைத்துஅந்தமரத்தின்மே
லிருந்து ஆகாயவாணிசொல்வதுபோல் அநுமார்சொல்லுகிருர்.

கேளும்பெண்ணே உன்மனதுக்கு ஒருவரும்திக்கில்லாமற்போ
னதென்ன இராமலட்சுமணுனுக்கும் அப்படிப் போனதென்ன நீ
சொல்லென அதுதனைக்கேட்க இதது மனிதர்பேசுகிற குரலாயிரு
க்கிறது மயிலிராவணன் ஒருவேளைசொல்லாதேயென்று போகச்
சொன்னுனே காமிகுவந்தோமே இப்படி அழுதோமே அந்தமயிலி
ராவணன்வந்தானே அல்லதுயாரையாகிலுங் கூட்டியனுப்பினுனே இது
தேதா பேச்சுக்குரலாயிருக்கிறதென்று பயந்து நயந்து அழுகையை
நிறுத்தி எழுந்திருந்து குளத்திலே தண்ணீர்மெள்ள இறங்கிருள்.
அதை அநுமார்பார்த்து இனிசும்மாயிருக்கலாகாது இவளண்டைக்
குப்போய் பேசவேண்டுமென்று அந்தட்சணமே அந்தகுளத்தின்
படிகட்டினபேரில் நின்றுகொண்டு சொல்லுகிருர் வாரும்பெண்ணே
மாதுசிரோன்மணி இராமலட்சுமணுளுக்கும் உனக்கும் கதியில்லை
யென்றுயே அந்தவிபீஷணனையும் நிந்தித்தாயே அந்த மகானுபா

வன் சொல்லியனுப்ப நான் இதோவந்தேன் இராம லட்சுமணருக்
கும் உனக்கும் உன்மகனுக்கும் அனுமந்தனாகியநான் கதியாக்கிக்கொ
டுக்கவந்தேன் அந்த இராமலட்சுமணர் என்கிற வழிபடுகடவுள்எங்
கேயிருக்கிறார்கள் அறிந்தால் தயவுசெய்து சொல்லுமம்மாவென்று
அனுமார்கேட்டவிளினார் அப்போது தூரதண்டி அனுமாரைப்பார்த்
துபயந்தெளிந்து சொல்லுகிறாள் ஐயா அனுமாரே நீர் என்னருகில்
வாருமென்றழைக்க அனுமார் சந்தோஷித்து அவளருகிற்போய்
நிற்க தூரதண்டி சொல்லுகிறாள் அடாவாடா அப்பா அனுமாரே நீ
அனுமானென்று சொல்லுகிறாயே குரங்குசாதியல்லவா மனுஷனைப்
போல நீபேசுகிறாயே உன்னைநானெப்படி நம்புவேன் என்றுசொல்ல
அனுமார்சொல்லுகிறார் வாரும்பெண்ணே தூரதண்டியென்னும் ரா
ட்சசஸ்திரீயே அப்படியேன் பயப்படுகிறாய் எனக்கு அறுபத்துநாலு
பாஷையும் சகலசாஸ்திரமும் நீதிநூலும் சாதாரணமாய் விளங்கும்
எறும்பு முதலிய சிற்றறிவுயிர்களின் நயனபாஷையுந்தெரியும்சந்தே
கப்படவேண்டியதில்லை சும்மாசொல்லடி யம்மாவென்றுகேட்க தூர
தண்டி சொல்லுகிறாள் வாரும்ஆஞ்சனேயா அரிராமருடையசகாயா
அரவிந்தமாயா அருண்மிகுதூயா களங்கவுபாயா அரனுடைய அ
ருணனாகியவாயுவின்சேயா நான்சொல்லுவதைக் கேளும்பிள்ளாய் பு
ஜபலபராக்கிரமம் பண்ணுகிறபோது ஒருகையினாலே இராக்ஷசக்கூட்
டங்களைபடித்தால் பதினெட்டக்ரோணி தண்டு தளம் மாண்டுவிட்ட
தென்றார்களே அப்படிப்பட்ட புஜபலபராக்கிரமசாலியாகிய நீயிப்படி
குழந்தைப்பிள்ளை போலிருந்தால் எனக்குச்சம்மதிபடாதுஆனபடியினா
லே உன்னுடைய விஸ்வரூபத்தை எனக்குக் காண்பிக்கவேண்டும் அ
தன்பின்பு நான் சகலகர்மங்களையுஞ் சொல்லுகிறேன் என்றுசொல்ல
அனுமார் தூரதண்டியைப் பார்த்து காமே நீ அந்த சொரூபத்தைப்
பார்த்தால் பயப்படுவாயே யென்றுசொல்ல அதற்குத் தூரதண்டி
சொல்லுகிறாள்.

கேளும் ஆஞ்சனேயரே நீர் எவ்வித சொரூபமெடுத்துக்காட்டி
னாலும் பயப்படமாட்டேன் மயிலிராவணனுடைய மாயைகளைக் கண்
டுபயந்தெளிந்தவள் என்முன் நீ எவ்விதரூபமெடுத்தாலும் பயந்தோ
ற்றுமோ துரிதத்தில் உம்முடைய விஸ்வரூபத்தை யெடுத்துக்காட்
டுமையாவென்று தூரதண்டி சொல்ல அனுமார் பாரும் பெண்ணே
யென்றுசொல்லி மேகமண்டலம் - வாயுமண்டலம் - சந்திரமண்டலம்
சூரியமண்டலம் - நட்சத்திர மண்டலம் - அளாவும்படி வளர்ந்தார்

தூரதண்டி பார்த்து பயந்து வியந்து நடுங்கி ஒடுங்கி கிடுகிடுத்து ஆஞ்சநேயனைப் பார்த்துச் சொல்லுகிறாள் அனுமாரே உம்முடைய சொரூபத்தைப் பார்க்கத்தக்கவளல்ல போதுமையாவென்று ஆடிப்பாடி அவரைநாடி அவர்பாதந்தேடி எழுந்து அணிந்து பணிந்து அனுமாரென்று துணிந்து விசாரந்தணிந்து சிரமேற்கரங்குவித்து தீர்க்கதண்டஞ் சமர்ப்பித்தாள் உடனே அனுமார் அந்த சொரூபத்தைவிட்டு எப்போதும்போலே சுருங்கி தூரதண்டி பக்கலில் நெருங்கிவந்து மிகவு பயப்படாதேயென்று தைரியஞ்சொல்லி பெண்ணே உன்காலிலே விலங்கேது என்னகாரணத்தினாலே உனக்கு விலங்குபோட்டார்கள் எங்கேதிருடினாய் அல்லது என்ன அடாதகாரியஞ்செய்தாய் நீ என்ன அமங்கிலியோ உன்னைப்பார்த்தால் சகலாபரணபூஷணாங்கிர்தையாயிருக்கிறாய் கழுத்திலே மங்கிலியத்தைக்காணேனும் உன்புருஷன் இருக்கிறானோ இல்லையோ இராமலட்சுமணர் உயிரோடு சுகமாயிருக்கிறார்களோ இல்லையோ உனக்கு இந்தவிலங்குவந்தகாரணார்த்தமென்ன சொல்லுமம்மாவென்றுகேட்டார்.

இந்தவார்த்தைகளைக்கேட்ட தூரதண்டி அனுமாரைப்பார்த்து அன்னேரமும் இன்போடும் ஆசித்து பூசித்து நேசித்து யோசித்துச் சொல்லுகிறாள் கேளுமையா அனுமாரே இந்தமயிலிராவணன் மகாபாவியானதிஷ்டோளன் வெகுசண்டாளன் என்னையும் என்மகனையும் விலங்கிலேபோட்டான் நாங்கள்திருடவில்லை அள்ளவில்லை அந்த பாதகன் அங்காரத்தினாலே என்புருஷனைக் கொன்றதுமன்றி என்னையும் என்மகனையும் அநியாயமாய் நாலாயிரவருஷகாலமாய் (௪௲) பாரம் எழுகினாலே மிருதியோடு கையிலும் மெய்யிலும் தோளிலுந் தாளிலும் விலங்குபூட்டி விட்டானென்றுகூற அவ்வசனத்தைக் கேட்ட அனுமார் நல்லதுபெண்ணே அந்தச் சண்டாளனிட்ட விலங்கோவென்றுவினவி ஆக்கிரித்துப்பற்கடித்து மீசைதுடித்துக் கரத்தை மண்ணின்மீது அடித்து காலையும்பிடித்து கையையும்பிடித்து நயந்து வியந்து அனுமாரென்றுபயந்து அபாந்து கைகட்டி வாய்பொத்தி தூரதண்டி புன்னகையோடுநிற்க அனுமார்பார்த்து வாராய் தூரதண்டியே உனக்கு இந்தவிலங்குபோட்ட காரணமென்ன உன்புருஷனாகிய புண்ணியவான்பெயரென்ன உன்மகன் விலங்கிலே கிடக்கிறானென்றழுதாயே அந்தக்காரணமென்ன எல்லாச்சங்கதிகளையும் சவிஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்று கூறினார்.

அந்தவசனத்தைக்கேட்ட தூரதண்டி சொல்லுகிறாள் கேளும்
அனுமாரே என்பெயர் தூரதண்டி என்புருஷன்பெயர் காலநேத்தன்
என் குமாரன்பெயர் நீலமேகன் கேட்டீரே அனுமரூபா என்புருஷ
னைக்கொல்லவந்தகாரணம் மயில்ராவணன் எனக்கு அண்ணன் அவ
னந்தப் பாதாளவிலங்கையை அரசாட்சி செய்துக்கொண்டிருந்தவன்
என்புருஷனையுந் தன்னோடுகூட வைத்துக்கொண்டு சகலகாருபாரு
விசாரணைகளையும் விசாரித்து வரச்சொல்லி உத்தியோகக்கட்டளை
திட்டமாகயிட்டிருந்தான் நானும் என்புருஷனும் சுகமாகச் சிறிது
காலம் வாழ்ந்திருக்கும்போது எனக்குக் கருப்பந்தரித்து ஒருபிள்ளை
யைப்பெற்றேன் அந்தப்பிள்ளைக்கு என்புருஷன் நீலமேகனென்று
பெயரிட்டார் அதற்குபின்பு மயில்ராவணன்மனைவி மாதங்கி என்பவ
ளுடையவயிற்றிலே ஒருபெண்பிறந்தது அந்தப்பெண்ணுக்கு ரூபவ
தியென்றுபெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமா
க வளர்த்துவந்தார்கள்.

அப்படிவளர்த்துவந்த சிறிதுகாலத்திற்குப்பின் என்புருஷனானவன்
மகனையெடுத்து முத்தங்கொடுத்து மடிமேலே வைத்துக்கொண்
டு கொலுக்கூடமண்டபத்திலே இருந்தார் அப்போது மயில்ராவண
னும் தன்னுடையகுமாரத்தியாகிய ரூபவதிக்குச் சகல ஆபரணமுந்
தரித்து தனதுமடியின்மீது வைத்துக்கொண்டிருந்தான். இப்படி
யாக ஏகசிங்காதனத்தின்மீதிலே இருக்கும்போது மயில்ராவணனா
னவன் என்புருஷனைப்பார்த்து வாரும்பிள்ளாய் காலநேத்தா உன்
மகனுக்கு இச்சரூபவதியென்கிற என்பெண்ணைக்கொடுத்துக் கலியா
ணம் பண்ணிவிடுகிறேனென்றுசொன்னான் அந்தக்ஷணமே இடியிடி
த்ததுபோல ஆகாயவாணி சொன்னதாவது அடாவடா மயில்ராவ
ணா இந்தரூபவதியை யாருக்குக்கொடுத்து விவாகஞ்செய்துவைத்திரு
யோ அந்தப்புருஷன்பெயர் நீலமேகனாகும் அவனுக்கே இந்த பாதா
ளலங்கையும் முடிபொறுக்கும் முடிபொறுக்கும் முடிபொறுக்கும்
என்று முக்காலும்சொல்ல அப்போது சபையிலிருந்தவர்களெல்லாம்
ஆதியந்தமோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள் உடனே மயில்ராவண
ன் திடீரென்று தனது சிங்காதனத்தைவிட்டு கீழேகுதித்து கோபங்
கதித்து அந்தச்சபையை மதித்துச்சொல்லுகிறான் கேளுங்கள்சபை
யோர்களே யான்விளையாட்டுக்குச்சொன்னதை நீலமேகனுக்கு ஸ்தா
பிதமாக அந்தஆகாயவாணிவரும் உறுதிசெய்யலாமா நீலமேகனுக்
கு என்குமாரத்தியான ரூபவதியைக் கொடுக்கிறேனென்று சும்மா
சொன்னேனேயொழிய நிட்சயமாகச் சொல்லவில்லையே எனக்குச்

சரீரபான பலசாலியானவன் எவனோ அவனுக்கல்லவோ கொடுப்பேன் இந்தசொற்பமுள்ள அற்பனான நீலமேகனுக்கு எனதுவிற்பனமுள்ள கற்புள்ளமானைக்கொடுப்பேனோ இவ்வசனம் அடாது இனிவிட்டுவிடாமல் காலதத்தனையும் அவன் பெண்சாதியையும் பிள்ளையையும் கொல்லாமல் விட்டுவிட்டால் பின்னால் நமக்குக் கேடுவருமென்றெண்ணி யோசனைபண்ணி இதோ இந்தக்கத்தியினாலே வெட்டுகிறேனென்று என்புருஷனைப் பிடித்துக்கொண்டான் அப்போதென்மகன் ஓட்டமாக ஓடிவந்து இப்படிசெய்கிறதென்று என்னோடே சொன்னான் அப்போது நானென்மகனாகிய நீலமேகனை வீட்டிலேபோட்டுக் கதவை மூடி ஒளித்துவைத்துவிட்டுப் புருஷனை அழைத்துவர மீண்டும் திரும்பிச்சென்றேன் அதற்குமுன்னமே காலதத்தனான என்புருஷனை வெட்டிப்போட்டு எனக்கெதிராக அந்தக்கத்தியையும் பிடித்துக்கொண்டு ஓடிவந்து அடிதூரதண்டி உன்மகன் ஓடிவந்தானே அவனெங்கேயென்று என்தலைமயிரைச்சுருட்டிக்கீழேதள்ளி அவன்கையினாலே ஓங்கிக் குத்தும்வேளையிலே நான் அப்பா உனக்கார் ஒப்பா அண்ணா என்னிருகண்ணே ஐயா இருபதுகையா ஆண்டவனே முடிகளைப் பூண்டவனே என்னையேனவெட்டுகிறாயென்று இரக்கமோடு வேண்டினேன் அவன்மனமிரங்கி பெருவிலங்காகிய ஒருவிலங்கு என்காலில் மாட்டிவிட்டான் பதினாயிரம்பாரமுள்ள இந்த எருவினாலே பண்ணின விலங்குடனே என்மகனானநீலமேகன் காவற்கூடத்திலே யிருக்கிறானென்று அடிமுதல் அந்தமவரை தன்வரலாற்றைக்கூறிப் பின்னும் அநுமாரே நீ எனக்குதேவனாகவந்து (௬௰) வருஷகாலமாய் போட்டிருந்த பெருவிலங்கைத் தரித்துவிட்டீரே வானரசேனாபதியே வழிபடுந்தெய்வக்கதியே மாயன்புகழுரிதியே மன்னர்மகிக்குத்துதியே ஆஞ்சநேயா ஆபன்சகாயா அருமதத்துபா அடியார்களுக்குநேயா அநுமந்தா எனமுன்வந்தாய் ஐயனே மெய்யனே வீரனே தீரனே சீலா அன்பர்க்கநுகூலா சரணம் சரணம் என்னையரண்டருளத் தருணம் தருணம் என்று பற்பலவாறு புகழ்ந்து புந்திமகிழ்ந்து அஞ்சலிசெய்து இருகைகளையுமநீட்டி திருமுகங்காட்டி அபயஸ்தாதாவென்றழைத்திட்டாள்.

அநுமார் சந்தோஷித்துத் தூரதண்டியைப் பார்த்து அவள் கையைப்பிடித்து உள்ளங்கையிலடித்து அபயங்கொடுத்துச் சொல்லுகிறார் வாருமபெண்ணே உனது சேதியெல்லாங்கேட்டுத் திருவுளங்களித்தேன் ஆனந்தக்கடலிற் குளித்தேன் எனது பராக்கிரமம அறியப்போகிறாய் நானே அந்தமயில்ராவணனை வதம்பண்ணிப்போ

டுகிறேன் உன்குமாரனை நீலமேகனுக்கு அவனது பாதாளலங்கை யாகிய இந்தநகரத்துக்கு ஒருபெரியதுரையாகப் பட்டங்கட்டி அந்த ரூபவதிபொன்னுமாதை அவனுக்கு மணஞ்செய்வித்துப் போவதுமன் றி நாடுநகரமுதலியவற்றைச் சீர்திருத்தி அரக்கர்படைகளை நீக்கிவி ட்டுப்போவேன் அஞ்சாதேயென்று பற்பலதைரியஞ்சொல்லினார் அ னுமார் மற்றுஞ்சொல்லுகிறார், கேளுமம்மாதே தூரதண்டி நமதுவழி படுதெய்வமான இராமலட்சுமணரெங்கேயிருக்கிறார்கள் மயிலிராவ ணன் எங்கேயிருக்கிறான் அவன புஜபலசவுரியமென்ன பராக்கிரம வீரதீரமென்ன எல்லாமறிவாயே சொல்லவேண்டுமென்று வினவி னார் வாரும் அனுமாரே என்னசொல்லப்போறேன் நிட்கள-நிரஞ் சன-நிற்மல-நிர்விஷய சுத்தசைதன்னியமாயும் பார்வதாசமேதனாகி யும் அகிலபுவனரட்சகனாகியும் ஆதியந்தமில்லாததாகியும் விளங்கி யிருக்கப்பட்ட சாக்ஷாத்பகவானாகிய பரமேஸ்வரனிடத்திலே மூவே ழுதலைமுறைக்கும் அழியாதவரம்பெற்றவன் மாயாவித்தைகள் கற் றவன் இராட்சதரிற் கொற்றவன் புண்ணியமற்றவன் அவனை தேவ ராலும் மூவராலும ஜெயிக்கப்படாது. இந்தமண்ணுலகத்திலும் விண் ணுலகத்திலும் அவனைப்போலொத்த பராக்கிரமசாலிகள ஒருவரு மில்லை நீரசக்கிரதையாகச் சண்டைபண்ணிச் செயிக்கவேண்டுமெ ன்று தூரதண்டிசொல்லினாள்.

அனுமார்சொல்லுவார் நல்லது அவன்சமர்த்தனென்று சொன் னாயல்லவோ நல்லதாகட்டும அவனை நானொருவனுமே ஏகாங்கித வீரதீர சண்டையாய் யுத்தத்தில் மடித்துவிடுகிறேன் என்பலத்தையறி யப்போகிறாய் எதோ இங்கே இருக்கிற தங்கக்கோட்டை வாசலிலே துலாயெந்திரமொன்று இருக்கிறதாம அதிலேசிறுது இராட்சசிருக் கிறாராம அதென்னவயணம எவ்விதபலவான் இருக்கிறான் விரைவி லே சொல்லென தூரதண்டி சொல்லுகிறாள் கேளும் வானரசிகாம ணியே அந்தா பாரும் அந்தத் தங்கக்கோட்டைவாசலில் துலாயெந் திரங்கட்டியிருக்குது அதிலே மயிலிராவணனுக்குச் சத்துரு எவ ன்வருவானோ அவன்தலையைக் கண்டிப்பதும் துண்டிப்பதுமாக நி றைகோல் நிறுப்பார்கள் அந்நிறைகோல் மூன்றுதரஞ் சாயுமாயின் இவன்சத்துரு இவன்மித்துரு இவன் இஷ்டன் இவன் துஷ்டன் இ வன் நேசன் இவன் விசுவாசன என்று அறிந்துகொள்ளுவார்கள் அ வர்கள் சத்துருவென்று கண்டுகொண்டால் அந்தனம காவலாகவி ருக்கும் (௨௰) லட்சம் இராட்சசர்வந்து மூண்டு யுத்தவாயுதம புனைந்து சண்டைக்கு நினைத்து கோபக்கனலகனைத்து சினைத்து கு

தித்து கொதித்து மதித்து துதித்து பிடித்து அடித்து நசுக்கி நசுக்கி சிதைத்து வதைத்துப் பதைத்து மண்ணிற் புதைத்து விடுவார்கள் என்றுகூறினான்.

பின்னும் அனுமாரானவர் சொல்லுகிறார் வாரும்பெண்ணே இக்கோட்டைவாசலிலுள்ள அவரவரை யான் தப்பாதுகொல்லுவேன வெல்லுவேன் நீயெனக்கோருபகாரம் செய்யவேண்டுமெனத் தூரகண்டி அனுமாருக்குச் சொல்லுகின்றனள் வீரதீரரே ஆவேசபராக்கிரமசாலியான அனுமானே என்னாலாகும் காரணார்த்தம்யாவை அவைகளைச்சொல்லுமையா அடியேன் சிரமேற்கொண்டுநடக்கப் பிரியமுற்றிருக்கிறேன் என்றுமயில்போலுஞ்சாயலும் கயல்போலும்விழியுங்குயில்போலுமொழியும் அன்னத்தின் ஒயில்போலும் நடையுமுடைய பெண்பாலாகிய தூரகண்டியென்று கூறத்தக்க மாதுசிரோண்மணியேகேளும் மாதர்க்கரசியே அந்தத் தங்கக்கோட்டை வாசலுக்கப்பாதே என்னைக்கொண்டுபோய் விட்டால் நான் அத்தனைபேரையும்ஆலையிலெடுக்குங்கரும்பு எவ்வண்ணஞ் சிதையுமோ அவ்வண்ணம்போலே யாவரையுமுரித்துத்தரித்து படுகளஞ்செய்துவிடுவேன் இந்தவுபகாரஞ்செய்தால் போதுமானது என்ன தூரகண்டிகேட்டு நடுநடுங்கி ஆஞ்சனேயரோடு சொல்லுகிறாள் ஐயனேவானரத்துய்யனே யான் எவ்வாறுபோவேன் விலங்குமுறிபட்டுந் தறிபட்டும்போச்சே யினிஎவ்வாறுசெல்ல நியாயம் என்னவுபாயம் நீர்செய்ததுசகாயம் அங்ஙனம்போனால் அபாயம்வருமே என்னசெய்கிறது இதுவுமன்றி உம்மை அவ்விடம் அழைத்துப்போனால் தராசுமுள்ளாகியநிறைகோல்சாயுமே உடனே காரியம்கெட்டுப்போய்விடும் சரிகட்டிப்போடுவாரே இராமமூர்த்திதேடுவாரே இதற்கென்னசெய்கிறது என்னாலாகாதென்று வருத்தமடைந்து மனமிடைந்துசொன்னாள்.

அனுமார்நோக்கி மனதைத்திடமாக்கி கவலையென்பதைநீக்கிகளங்கமென்பதைப் போக்கி யாதொருவிசேடஞ்சொற்றனர் சமீபத்திலுற்றனர் கேளும்பெண்ணே நீ கூறியவாறே அந்தராசாகிய நிறைகோல்சாயுமாயினும் உன்னை எவனொருவன்கண்ணெடுக்கிப்பார்ப்பானாகில் உடனே கண்டிக்கவுந் தெண்டிக்கவும் பார்த்துவருகிறேன் பயப்படாதே இந்தவுபகாரம் பண்ணவேண்டுமென்று உறுதிகூற அப்போதுசொல்லுகிறாள் ஆனாலும் எப்படிகொண்டுபோவேன் இவ்வளவுப்ரம்ரபிரமாண ரூபமாயிருக்கிறீரே என்றுசொல்ல அனுமார் சொல்லுகிறார் வாரும்பெண்ணே இதோ என்னுடைய விசித்திரத்தைப் பாருமென்றுகூறி சந்தோஷமீறிச்சரீரத்தைஉருவி கால்கையுருவி இராட்

சசரைக்கருவித்திரணமாத்திரத்தில் சிறுதேகவுருவமமைந்து தூரதண்டியைப்பார்த்து தண்ணீர்க்குடத்தை யெடுத்துத் தலைமீது வைத்துக் கொள்ளச்சொல்லி அந்தத் தண்ணீர்குடத்தின் மீதிலே மாங்கொததை ஒடித்து உள்ளேபுகவைத்து அந்நீர்க்குடத்துள் போட்டமாவிலைக்கொத்திலே ஈபோலமறைந்திருந்தார் தூரதண்டி மகிழ்ந்து புகழ்ந்து அநுமாரிருக்கிற மாவிலைக்கொத்தினைப் பிடுங்கிக் குடத்தின்மீது வைத்து மெல்லமெல்ல நடந்துசெல்ல தங்கக்கோட்டை வாசலிலேயிருக்கிற இராட்சதரைப் பார்த்து எவ்வாறு போவோம் என்ன அனர்த்தமாகும் என்று வீங்கி ஏங்கி வாடி வழிகூடி நடுங்கி ஒடுங்கி நடந்து தங்கக்கோட்டையைக் கடந்து துலாயந்திரமான தராசென்கிற நிலைகோலுக் கப்பாலேபோனாள், உடனே அந்தத்தராசுக்கோல்முனையானது தலைமேலாகபெருக்க பெருக்க விழுந்தவுடனே இராட்சதர் திடுக்கென்றுபயந்து நயந்து வியந்து அயர்ந்து அண்ணாந்து இருமாந்து பார்க்குமிடத்தில் சத்துருவைக் கண்டதில்லை தூரதண்டியைக் கண்டார்கள் கோபங்கொண்டார்கள் யாரையோஒருவரை அழைத்துவந்தனள்போற் றோன்றுகிறது என்றுஐயுற்று அங்ஙனமிருந்த (ஐந்த) லட்சம் இராட்சசர்களுக்கு அதிகாரியானவன்ரத்தாக்ஷன் அதிசீக்கிரமாய் வலதுபாரிசத்திலிருந்தகத்தியையுருவிக்கருவி தூரதண்டிக்குமுன்னேசென்று நின்று அடிவாடி தூரதண்டியென்னுந்திருடி எங்கேபோகிறாய் எவளை அழைத்துவந்தாய் சோதனைகொடடி இதோஉன்னைவெட்டுகிறேன் குத்துகிறேன் கழுவேற்றுகிறேன் கள்ளமில்லாமல் உள்ளபடி சொல்லடி யிங்கேநில்லடி என்று சொல்ல திடுகிடென்றுபயந்து அயர்ந்துநிற்கலுற்றாள்.

அனுமார் அச்சமயத்திலே மாவிலைகொத்தி லிருந்தவண்ணமாகஜனித்தவர் மனதுகளித்து உடலைநிமிர்த்து திடீரென்று கோடையிலிடித்ததுபோல் குமுறி அமறி ஆகாயம்பூமி பாதாளம் வரையில் ஏகசொரூபமான விசுவரூபமெடுத்து கீழே குதித்து இராட்சசரென்று மதித்துகொதித்து கோபங்கொதித்து அந்த இராட்சசன் உருவினகத்தியைப் பிடுங்கிக்கொண்டு அரக்கரோடு எதிர்த்து சண்டை செய்கிறபோது அரக்கர்கள் கண்டு அவரவர் வில்லை வளைத்து பூரிகொடை-ஆலம்-பூட்டு-சிஞ்சினி - நம்பு - நாரி-வடம்-குணமுதலிய நாணேற்றி-சரம்-வாளி-கணை-பல்லம்-வண்டு-கதிரம - கங்கருகதிரம்-அத்திரம-கோல்-என்று பேர்பெற்ற அம்புகளையும்-விசிகம் - பூதை-பதத்திரி-எவுபங்கம்-தோணி - பகழி - கோடை - சிலீமுகம் என்று நாமகர

ணம்பெற்ற பாணங்களையும் சரவேக சரவேக உரனேகமாக வில்லிற்
புகவைத்து குணத்தொனிபண்ணி ஆகாயம் பூமி அண்டகடாகம் எ
ண்டிசையும் வெடிக்கும்படியாகக் கார்மழைபோலப் பொழிந்தார்கள்
அனுமார் அதுகளைக்கண்டு மகிழ்ச்சிகொண்டு இடதுகைக்கேடத்தினு
லே ஒங்கிபளீர்பளீரென்று அடிக்கிறபோது அவ்வடியானது கோடை
காலத்திலே இடியிடித்ததுபோலே திமர்திமரென்று கர்ப்பங்கலங்கும்
படி இடித்து அடித்துப்புடைத்து வாலைத்துடைத்து தலைமாடுகால்மா
டுகால்மாடு தலைமாடாகவெட்டி புஜங்களைதட்டி பிணமலைபோலக்குவித்
துதாகம் தாகமென்று சிலர்தவிக்க அனுமாரானவர் சந்து பிளையாது
களையாது பாளைக்கூட்டத்திலே போய்விழுந்தவீரசிங்கம் போல் ஒரு
மணிநேரம் முன்னும் பின்னும்பாராமல் சாடுகிறபோதுசிலர் ஏங்கிஞ
ர்கள்பலர்தூங்கினார்கள் சிலர் ஆவிவிட்டு நீங்கினார்கள் சிலர் ஆயுதங்க
ளைக்கையில்வாங்கினார்கள் சிலர்மூர்ச்சைபட்டுத்தேங்கினார்கள்சிலர் இ
ருந்தார்கள் சிலர் மெய்மறந்தார்கள் அவரவர்-மனது நிலைகலங்கிக் கதறுவா
ர்கள் சிலர்பதறுவார்கள்குத்துயிராக வுதறுவார்கள்பலர்சிற்றுயிரோடு
சிதறுவார்கள் இப்படி நாசிதமாக அனுமார் நிர்த்தூளிசெய்துவிட்டார்.

அந்த அரக்கர் படையிலே பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் ம
ன்னர்-மண்டலீகர்-பாளைத்தலைவர் - சேனைத்தலைவர் - குதிரைத்தலைவ
ர்-ஒட்டைத்தலைவர்-படைத்தலைவர்-யூகத்தலைவர் - தண்டத்தலைவர்முத
லிய இராட்சதர்படைகளெல்லாம்-ஈட்டி - பாங்கு-சாங்கு-பாலா-எரிய
ம்பு-பொரியம்பு - தரியம்பு-நெரியம்பு - வில்லுகள் - சக்கரம் கதாகட்க
கோதண்டம்-பிண்டி-பாலம்-கோமேரம்-தோமேரம்-பமேரம் - விடுமே
ம்-எடுமேரம்-மழுப்படை-கொழுப்படை-எழுப்படை-வேலாயுதம்-சூலா
யுதம்-அஸ்திரம் சஸ்திரம்-வச்சிராயுதம் - கிந்தம்-தோத்தம்-தந்தம்
கூர்வாள்-குறுந்தடி - பெருந்தடி - இவ்வாறு நானாவிதஆயுதங்களையெ
டுத்து முகங்கடுத்து-இராட்சசரெல்லாம் பற்களைநறநறவென்று கடித்
து மீசைதுடித்து அனுமாரோடுகைகலக்கினகாலத்தில் அந்தஆஞ்ச
னேயப்பெருமான் சீக்கிரமாக ஜாக்கிரதையோடு ஆக்ரமித்து பராக்கி
ரமங்காட்டி வியாக்கிரமம்போலச்சீறி கோபமிறி அவனை இவனடிக்க
இவனை அவனடிக்க அவன்மார்பில் இவன்குத்த இவன்மார்பில் அவ
ன்குத்த அவன்தோளில்இவன்குத்த இவன்தோளில்அவன்குத்தவல
மிடமாக இடம்வலமாக கிறு-கிறு-கிறு - கிறுகென்று சின்றுசென்று-

சுழன்று-அழன்று-உழன்று - தழன்று - விழன்று-குழன்று ஒருவருக்கொருவர் சரிசமானமாகச் சண்டைசெய்தார்கள்.

அப்படி அவர்கள்சண்டைசெய்கிறதை ஆகாயத்திலுள்ளவர்கள் யாவரும்பார்த்து ஆச்சரியப்பட்டு ஆதிகாலத்திலேசாட்சாத பிரமனைத் தன்னிபராயும் தந்தைக்குபதேசம் வந்தித்தகுருவாயும் இருக்கப்பட்ட கந்தன்-கடம்பன்-காங்கேயன் - வேலுடைக்கடவுள் - தேவர் சேனாதிபதி-மயிலேறுசேவகன் - கோழிக்கொடியான் - சாந்தன்சேந்தன் குறிஞ்சிவேந்தன் வள்ளிகாந்தன் என்று சொல்லத்தக்க சிவசுப்பிரமணியக்கடவுளோடு எதிர்த்த சூரபத்மாவும் அவனுடையபுத்திரமித்திரர் களத்திரசதுரிராதி-தானை-பானை-சேனை-எவ்வாறு அழுந்தினவோ அவ்வாறு சிவசுப்பிரமணியக்கடவுள்போல் இந்த அனுமாரானவர் ஒருவராகவேயிருந்து அந்தத்தங்கக்கோட்டைவாசலிற் காவலிருந்த மயிலீராவணனுடைய ராட்சதப் படைகளைப் பெருவிருட்சத்திலே அச்சுவேர் நச்சுவேர் சிறுவேர் பெருவேர் பக்கவேர்பழுவேர் ஜல்லிவேர் மூலவேர் தனிவேர் துணிவேர் இப்படிச் சொல்லத்தக்க வேர்களைக்களைந்து மரத்தைவெட்டித் தள்ளுவதுபோலே அரக்கர் படைகளைத் தலைகாட்ட வொட்டாமல் முறித்து தலைகளைத் தறித்து நிமைப்பொழுதிலே படுசூரணம்பண்ணினர் அதன்றிஒருகதைச்சொல்லுகிறேன் அதாவது வானத்தில் மாலைப்பொழுதில் செவ்வானமிடுகிறது அதைஆகாயவாணி பூமாதேவியை நோக்கி அடிமண்ணுக்கரசியே என்னைப்பார் நான் சிவப்புபுடவை கட்டிக்கொண்டேன் என்று இலங்கைக்கு முன்னே சொல்லியிருந்தாள் மனதில் வைத்திருந்த இந்தப்பூமிதேவியும் இன்றையுத்தகாலத்திலே ரத்தவெள்ளம்ஓடினதைப் பூமாதேவிகண்டு ஆகாயவாணியை நோக்கிச் சொல்லுகிறாள் அடிவிண்ணுக்கரசியே நீசிவப்புபுடவை கட்டிக்கொண்டதுபோல் நானுங்கட்டிக்கொண்டேன் பாரடி பாரடி என்றுசொல்லுமாப்போல் அனுமார் மாபோர்செய்தனர் இதுபுராணிகர் கூற்று அதாவது இக்கதையெழுதினவர் கருத்தாம்.

அனுமார்சொல்லுகிறார் கேளும்பெண்ணே தூரதண்டியே இப்போதுடைந்த யுத்தகளரியைப் பார்த்தனையா எமது பராக்கிரமவீரதீர சூரத்துவத்தையென்றுசொல்ல தூரதண்டிசந்தோஷித்து அனுமாருக்கு வலம் இடமாக இலம்வலமாகவந்து வணக்கந் தந்து மனத்

ன்புகூர்ந்து ஆர்க்குசொல்லுகிறாள் ஓஒ அனுமாரே நீர்வல்லவர் யாவருக்கும தலைவர் உம்மைப்போல பராக்கிரமசாலி உலகத்திலில்லையென்று துதித்தாள் மனதில மதித்தாள் நீர்க்குமிழிபோலக் குதித்தாள் இவரே அதிவீரனென்று கட்டளைவிதித்தாள் எரிகிற எண்ணெயில் விழுந்த அதிரசம்போலக் கொதித்தாள் மதித்தாள் புகழ்ந்தாள் மயிலிராவணனை அவன்கெட்டான் போவென்று இகழ்ந்தாள் அச்சமயம் நோக்கி ஆஞ்சநேயர் சொல்லுகின்றனர் மாதர்க்கரசியே கடகராஜன் வீடெங்கே கேடிங்கேவந்தது எனறுகூற ஐயா அனுமந்தனையா ராஞ்சிவிமெய்யா சொல்லுகிறேன் இதோயிருக்கின்றதே அதுகடகன்வீடு அதற்கப்பால் விட்சிமுகன்வீடு அதற்கப்புறம் பத்திரகாளியம்மன்வீடாகியகோயில் அதைப்போலழகுடையது ஈரேழுலகத்திலும் இல்லையென்றுசொல்லினள் அதை அனுமார்கேட்டு அப்படியாமென்று சொல்லிப்போட்டு கடகன் வாசலிலேசென்று அங்ஙனம் நின்றுசொல்லுவோமென்று தனது அழகியவாலை உள்ளே நுழைய பஞ்சுபோற் குழையவிட்டனர்.

அங்ஙனம் கடகனும் அவன்பெண்சாதியும் மன்மதனும் இரதியும்போல பஞ்சணைமீது சரசசல்லாப உல்லாச விலாசகுலாச அமளிசெய்து நித்திரைசெய்துக்கொண்டிருக்கிற சமயத்தில் அனுமாரானவர் வாலால் இருவரையும் மடவிறுகக் கட்டிச்சுருட்டி உருட்டிப்புரட்டித்திரட்டித் தெருவில்விழுக்கக்கடகன்கண்டு பயங்கொண்டு சிரமேற்கரங்குவித்து ஆண்டவனே நான் முன்னமேவந்து உமது அழகிய வாலுக்கு எனது பற்களைப்பலிகொடுத்து புறமுதுகுகாட்டி ஓடிவந்துவிட்ட என்னை ஏனைய பிழுக்கிறீர் உமது வார்த்தைக்குவரவில்லை அதோ அந்தமகாபாவியாயும் எங்களரசனுகவுமிருக்கிற மயிலிராவணனைக்கொல்லுமையா சரணம்சரணம் காக்க விதுநல்லதருணம் விட்டுவிடுமென்றுவணங்கி இணங்கிச்சொல்ல அனுமார் மனமிரங்கி புருஷனையும் பெண்சாதியையும் விட்டுவிட்டார் அதன்பின்பு விட்சிமுகன்வீட்டிலும் அவ்வாறு தமதுவாலைப்புகவிட்டு அந்த அசுரனையும் மடவிருகச் சுருட்டிக்கட்டி இழுத்து சரசரவென்று சுழற்றி நிலத்திலே மோதியடித்துவிட்டார் அவன் யமபுரம்போய்ச்சேர்ந்தான்.

அப்பால் மந்திரிபிரதானி தண்டத்தலைவர் பூதத்தலைவர் அணித்தலைவர் முதலியபேரையும் அவ்வண்ணமே தமதுவாலை ஒழுங்காகப் புகும்படிசெய்து அத்தப் பத்துவீடையும் இடிவிழுந்த மரத்தைப்போல அதம்பண்ணி யாவரையுங் கொன்று நசுக்கி நசுக்கித் தீயிற்

பொசிக்கிய தூளனம்போல்செய்து தூரதண்டியை நோக்கிச் சொல்லுகின்றனர் பார்த்தையவா மாதுசிரோன்மணியே எனது பராக்கிரமத்தை யென்றுசொல்ல அதற்கவள்சொல்லுகிறாள் வானரசிரோன்மணியே என்மகனானவன் அந்தவீட்டில் விலங்குடனேயிருக்கிறான் தயவுசெய்து அவன்விலங்கைத் தரித்துவிடுமென்று நமஸ்கரித்தாள் அனுமார் அதேது நானிந்தப்பாதாள இலங்கைக்குப் பட்டங்கட்டி ராசதுரையாக வைக்கயிருக்கும்போது இன்னம் விலங்கா என்மணங்கலங்கா நீலமேகதுரங்கா பாதாளயிலங்கா புரந்தரா துரந்தரா நிரந்தரா வரந்தராவென்று கூறுமாப்போற்கூறி அவனிருக்கிறவீட்டின்கதவை நொறுக்கி உள்ளேபோய் விலங்குகளை நறுக்கிவிட நுழைந்தார் நீலமேகன்பார்த்து இவனெவனோ புதிதாய்த் தோன்றுது நம்மைக்கொல்லவந்தவனென்றுகருதி நிருதிமூலையில் நடுங்கி ஒடுங்கி ஒளித்தான் அவனைப்பார்த்து அடாநீலமேகா வெளியிலே புறப்படடா வென்று சொல்லக்கேட்டுத் திரும்பவும் கதவுமூலையி லொளித்தான் அனுமார் கிட்டப்போய் இழுப்போமாயி லவன்மிகவும்பயந்து மூத்திரம்பெய்ந்துகொண்டு சிவனைப்போக்குவானோ வென்றுகருதி தூரதண்டியையழைத்து பெண்ணே உன்மகன் என்னைக்கண்டு பயங்கொண்டு மூலையிலே பதுங்குகிறான் நீவந்து அழையென்ன தூரதண்டி அவ்வாறே காவற்கூட்டத்திலேசென்று நீலமேகனைப்பார்த்து அடாநீலமேகா என் மூலையிலே பதுங்குகிறாய் வெளியிலேவாடா குமாரகாவென்றழைக்க அவன் பயந்தெளிந்து தாயாரிடத்தில் வந்துவாடி தாயே உன்காலிலேயிருந்த விலங்கெங்கே யார்முறித்தார்கள் யார்தரித்தார்கள் சொல்லுமம்மாவென்று நயத்தோடும் பயத்தோடும் கேட்கத் தாய்சொல்லுகின்றனள்.

அடா குமாரகா நீலமேகா நான் இந்த வானரசிரோன்மணியான அனுமார் காலிலேவிழுந்தேன் இவர் தயவுசெய்து என்விலங்கை வாங்கிவிட்டார் என்று மகனையும் அனுமாருடைய காலிலே விழுந்து கும்பிடச்செய்து அடாபயப்படாதே இவர் ரட்சிக்கவந்தவாண்டவனடாவென்றுகூறி அனுமாரைநோக்கி எங்களைரட்சியும் ஐயாவென்றுசொல்லினள் ஆஞ்சநேயர்களிப்புகூர்ந்து உங்களிருவரையும் இரட்சிக்கவும் மயிலிராவணனைப்பட்சிக்கவும் வந்துதோன்றினேன் நீலமேகனுக்கும் பட்டங்கட்டி அந்த ரூபவதியையும் மணஞ்செய்துவிட்டுப்போகிறே னிதோ அபயஸ்தம் பிடிபிடியென்று தூரதண்டி கையிலேபோட நீலமேகன்கூட சந்தோஷமெய்தினன் அனுமார் நீலமேகனைக் கிட்டவழைத்து அப்பா இந்த ராமலட்சுமணனை இங்கிருக்கா

நின்ற பத்திரகாளிகோயிலுக்குப் பலியிடப்போகிறானும் அந்த மாகாளிகோயி லெங்கேயிருக்கிறது காண்பியுமென்றுகூற நீலமேகன் சொல்லுகிறான் கேளும் ஆஞ்சனேயா அந்தபத்திரகாளிகோயிலிலே அவர்களிருவருமிருக்கிறார்கள் அந்தக் கோயிற்கோபுரமானதுமகாஉன்னதமாயிருக்கும் அதோபார்த்தீரா தோணுகிறது அதிலே இராமலட்சுமணாளிருக்கிறார்களென்றுகூறிப் பின்னுஞ்சொல்லுகிறான் ஐயா அவர்களைப்போய் நீர்பார்த்தவுடனே நீர் இராமலட்சுமணாளகப்பட்டார்களென்று சந்தோஷித்து இனி மயில்ராவணனெப்படி போனாலென்ன நீலமேகனும் தூரதண்டி இவர்களெப்படிப்போனாலென்ன நமக்கு இராமலட்சுமணாள் அகப்பட்டு விட்டனரென்று களிப்பெய்தி சும்மாபோய் விட்டாலெப்படி விலங்கு தரித்துவிட்டு எங்களைப்பரதேசியாக்கிவிட்டுப் போனாலெப்படி அப்புறம் மயில்ராவணன் எங்களிரண்டுபேரையும் வெட்டிப்போடுவானே அனுமந்தா ஆனபடிசொல்லுகிறேன் கோபஞ்செய்துகொள்ளவேண்டாம் நீர் பட்டங்கட்டுகிறேனென்றீரே எனக்குப்பட்டமும் வேண்டாம் இதோ யிந்தமயில்ராவணனை முன்னே சங்காரம்பண்ணிவிட்டு அப்பால் இராமலட்சுமணாளையெடுத்துக்கொண்டு உமக்குச் சமீபமானவனுக்கு இந்தப்பாதாளவிலங்கையைப்பட்டங்கட்டிவிட்டு அப்பால் நீர்போகலாமென்று கூறினான்.

அப்பால் அனுமார்சொல்லுகிறார் தம்பிநீலமேகா நீ இப்படி சம்சயப்படவேண்டாம் நானுனக்கு அபயஹஸ்தங்கொடுத்துத்தப்புவேனா தப்பத்தக்கதில்லை இந்தாவுனக்கு நம்பிக்கைசொல்லுகிறேன் இதோ யிருக்கிற ஆகாயவாணி பூமிதேவிசாட்சியாக நானுனக்கு தப்பாமல் பட்டங்கட்டி விவாகஞ்செய்துபின்பு உன்னிடத்தில்விடைபெற்றுக்கொண்டு போகிறேனென்றுகூற நீலமேகனும் தூரதண்டியுமதைரியத்துடனேயிருந்து பின்னும் சொல்லுகிறார்கள் யாரும் ஆஞ்சனேயா எங்களுக்கு மயில்ராவணனுடையபீதி இப்படி சொல்லத்தக்கதாகவிருக்கின்றது அனுமந்தசுவாமியென்று கூறிவிட்டு இனிமேல் சுகமாகப் பத்திரகாளிகோயிலுக்குப் போங்கள் நாங்களும் கூடவருகிறோமென்றுகூற அனுமார் இருவரையும்பார்த்து நீங்களிரண்டுபேருமென்கூடவரவேண்டாம் ஏனென்றால் யுத்தகளத்திலே நான்சண்டைசெய்யும்போது பயப்படுவீர்களானபடியினாலே இந்தமண்டபத்திலேதானே பத்திரமாயிருங்களென்றுகூறினர் நீலமேகனும் தூரதண்டியும் அனுமாரைநோக்கிச்சொல்லுகிறார் கேளும்அனுமந்தா நீபத்திரகாளிகோயிலுக்குப் போயிருக்கிறசமயத்திலே மயில்ராவணன் ஆள்களையனுப்பி யெங்களைப்பிடித்து அடித்துவெட்டிப்போட்டாலெப்படி

எங்களுக்கு ஆதரவில்லையே நீர்போயவிட்டால் இவ்விடத்தில் நாங்களெப்படி யிருப்பமென்று சொல்லினார்கள்.

அவ்வார்த்தைகளை அனுமார்கேட்டு இருவரையும் பார்த்துச் சொல்லுகிறார் வாருமபிள்ளாய் நீலமேகா அவ்வாறே இங்ஙனம யாராகிலும்வந்து உங்களைப்பிடிக்கவந்தால் என்னை நினைத்தகணத்திக்கூப்பிடுங்கள் நான்வந்து அதைப்பண்ணிப் போடுகிறேனென்றார் ஆனால் அவ்வாறே நல்லதும்பாமென்று சொன்னார்கள் அனுமான் விடைபெற்றுக்கொண்டு அதிகசீக்கிரமாகப் பத்திரகாளி கோயிலுக்குவந்தார் அங்ஙனம அம்மாளிகையிற் கதவு சாத்தப்பட்டிருப்பதைப் பார்த்து ஐந்துவிரல்குவித்து இறுகக் கெட்டியாகப் பிடித்திழுத்து ஓங்கி ஒருகுத்து குத்தினார் அங்கிருந்த பதினாயிரஞ் சூலைண்டியிழுக்கத்தக்கதான கதவானது பொடிப்பொடியாகத் போய்விட்டது படுசூரணமாய்விட்டது உடனே உளளேபிரவேசித்தார் அங்கிருக்கிற அதிசயத்தைச்சொல்லுகிறேன் வினாவாகக் கேட்டருளுங்களென்று நாரதர் கௌதமருக்குச் சொல்லுகிறார் அந்த மாகாளிகோயிலிலே ஆயிரக்கால்மண்டபம் அபிஷேகமண்டபம் எண்ணெயாடுமண்டபம் பளிங்குமண்டபம் முத்துமண்டபம் இரத்தினமண்டபம் பொன்மண்டபம வெள்ளிமண்டபம் தங்கமண்டபம் கங்கணமண்டபம் வசந்தமண்டபம் உசந்தமண்டபம் நீராடுமண்டபம் சுவாமியோடு போராடுமண்டபம வண்ணமண்டபம் திண்ணமண்டபம் கன்மண்டபம நன்மண்டபம மாணிக்கமண்டபம் மரககமண்டபம் கோமேதகமண்டபம் வச்சிரமண்டபம் பச்சைமண்டபம் புஷ்பமண்டபம் வயிரமண்டபம் தாளமண்டபம் பதுமமண்டபம் புதுமைமண் பம் வதுவைமண்டபம் பிரகாசங்கள் யாகசாலைகள் துஜஸ்தம்பம் கொடிக்கம்பம் இப்படிநானாவித அதிசயத்தைப்பார்த்து வோத்து ஆர்த்து புன்சிரிப்புசெய்து நீராலட்சுமணனோடி ஓடி தேடி மனதுவாடி மூலஸ்தானக் கதவைமூடி இருப்ப தால் கோபமீறி உடனே தமது கையினால் சாடி உடைத்துவிட்டார் அப்படி உடைத்துப் பார்க்குமளவில் அங்கணம் அந்தரி சுந்தரி ஆரணி பூரணி இடாகினி யோகினி ஈஸ்வரி பரமேஸ்வரி உலகமாயன சோதரி நமையாளி மாதரி எண்டோளி சங்காளி ஐயை ஓங்காரி ரீங்காரி அமலை விமலை யாமளை சாமளை சபரி குமரி சண்டிகை சாமுண்டி சக்கரபாணி நித்யகல்யாணி சூலி நீலி சூரி வீரி மாயையுற்றுள மயேட்டுச்செண்டுள காரணி நாரணியென்று பெயர்படைத்த பத்திரகாளியானவள் யானைக்கோடுபோலே நீண்ட பல்லும் சன்னற்பின்னற் சடையும் மழுப்படையும் புலித்தோலுடையும அகோரசொரூபமாக விருந்தாள் சந்தமின் வஞ்சப்பெண் முதலிய பேர்கள் ஊழியப்பண்ணுகிறதையும்பார்த்து கிட்டச்சென்று அவளருகில் வைத்திருக்கிற பெட்டியைக்கண்டு மகிழ்ச்சிகொண்டுதிறந்துபா

ர்க்க மகிழ்வெய்தி இப்படியா செய்தியென்று கருதி அந்தப் பெட்டியை மெல்ல அசையாமலெடுத்து மேல்மூடியைத் திறந்துபார்த்துஇராமலட்சுமணாள் நிர்ச்சேஷ்டையாக மயில்ராவணன் மந்திரித்த கட்டினாலும் மாயாசூரணத்தினாலும் கால்கை அசையாதிருப்பதைப் பார்த்து அருகிற்சென்று அந்த இருவர் உடம்பெல்லாம் தடவிப்பார்த்துத் தட்டி எழுப்பலாகாதென்றுகருதி இராமலட்சுமணாள் மயக்கந்தெளிந்து விழித்துப்பார்க்க வேண்டுமென்றுகருதி அனுமார் தோத்திரம்பண்ணுகிறார்.

ஓ அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயக அனாதரட்சகா ஆபத்பாந்தவா திருப்பாற்கடல் வாசகா சீதா சமேதா பக்தவச்சலா பரந்தாமா பன்னகசயனா பதுமநாபா பங்கயப்பாதா ஆதிவராகா அச்சுதா கோவிந்தா கோபாலா இராமச்சந்திரா சோம சுந்தராயென்று துதித்தார் மதித்தார் நித்திரையோ ஏழைபங்காளா இருபுயத்தோளா இலக்குமிபாலா என்வகைக்குணாளா வென்று கூப்பிடும்போது அங்ஙனே சற்று இராமச்சந்திரக்கடவுள் குவளைக்கண் விழிகளைத் திறந்து சொல்லுகிறார் வாரும் அனுமாரே நாம் எங்கேவந்தோம் இதேதுபிள்ளாய் அனுமந்தா கோயிலுங் கோபுரமுமண்டபமுமாயிருக்கிறதே இது எவ்விடம் இதுயாருடையதேசம் இது என்னஸ்தலம் இங்குயேன் வந்தோம் விவரமாகச் சொல்லுமென்றுகேட்க அனுமார் சொல்லுகிறார் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியே சகத்குருவே இந்த மயில்ராவணன் பாவி எனவால்கோட்டையை யாதோ உபாயம்பண்ணி ஏமாத்தி உம்மையெடுத்து வந்துவிட்டான் அதனாலே நானும்மைச் சேவித்து அழைத்துப்போகவந்தேன் என்று சொல்லினார் இவைகளை யெல்லாங் கேட்டு இராமமூர்த்தி கண்திறந்தவர் மறுபடியும் மயில்ராவணன அபிமந்திரோச்சாடனத்தின் மாயையினாலே இவர்கள் கண்களைத் திறக்கப்படாமல் மூடிக்கொண்டு மறுபடியும் நித்திரை செய்யலானார்கள் அதை அனுமார்பார்த்து விசாரப்பட்டு இனி நாம் சும்மாயிருக்கப்படாதென்று எண்ணித் தீர்க்கயோசனைபண்ணி இப்போது பதினைந்து நாழிகை ஆயிற்று இனி தாமதஞ் செய்தால் கெடுதி நேரும் இராமலட்சுமணாளை இவ்விடத்தில் வைக்கக் கூடாது முன்செய்தவாறுபோல இப்போது மயில்ராவணன் மதிமயங்கத் தியக்க மோசம் பண்ணுவான் இவர்களை ஒருவிடத்திலே பத்திரப்படுத்திவிட்டு பின்பு இராட்சதர்களோடு சண்டைபண்ணவேண்டுமென்று நினைத்துத் திடமென்று இராமலட்சுமணாளை மூன்று பிரதட்சணம்பண்ணி நமஸ்கரித்துக்கும்பிட்டுப் பெட்டியைமூடி யிருகையினாலும் அசையாம லெடுத்

து அந்த மயிலிராவணன் பட்டணத்தைவிட்டு எண்பது கோட்டைகளையுந் தாண்டி அப்பாலேபோய் அஞ்சனம் இருதகமலமென்ற ஒரு மலையிருக்கின்றது அந்த மலையினுள்ளே ஒருமண்டபமிருக்கின்றது அம்மண்டபத்தினுள்ளே ஒரு பெரிய குகையிருக்கின்றது அந்தக்குகையிலே இராமலட்சுமணனைக் கொண்டுபோய் வைத்து பூமியைப் பார்த்து அநுமார் சொல்லுகிறார் கேளும் மாதே பூமாதே உன்னுடைய புருஷனானவர் இதோ யிருக்கிறார் இவர் மயிலிராவணன் கையிலே அகப்பட்டபடியினாலே நானெடுத்துவந்தேன் உனது மாப்பிள்ளையிப்படி யிருக்கலாமா உனதங்கை யிலங்கையிலே அசோகவனத்தி லிருக்கிறாள் இனிமேல் இராமலட்சுமணனைபோய் ராவணசம்மாரஞ்செய்து உனதங்கையை விடுக்கப்போகிறார்கள்.

ஆனபடியால் நானே மயிலிராவணனுடனே யுத்தம்பண்ணி அந்தச் சண்டாளனைக்கொன்று பின்புவந்து இராமலட்சுமணனை யெடுத்துக்கொண்டுபோகிறேன் அந்தமட்டும் நீ வைத்திருந்து காப்பாற்றி என்கையில் ஒப்புவிக்கவேண்டுமென்று சொல்ல பூமிதேவி அநுமாரைப்பார்த்து வாரும் ஆஞ்சனேயப்பெருமானே இவ்விடத்தில் வையும பத்திரமாகப் பாதுகாக்கிறேனென்று சொல்லுமப்போல் பூமியானது டளீரென்று வெடித்தது அநுமார் புகழ்ந்து அந்த வெடிப்புக்குகையிலே வைத்துவிட்டுப் பத்திரமென்று சொல்லி மயிலிராவணனை பட்டணத்திற்கு வந்துவிட்டார் உடனே பூமிதேவியும் நாமிப்படி யிருந்தால் கெடுதி நேரிடும் இராமலட்சுமணனைக் காண்பித்துக் கொடுக்கலாகாதென்று வெடிப்புக் குகையை மூடிக்கொண்டாள் இந்தக்கதை யிவ்வாறிருந்தது.

அங்கே கடகன் என்கிற இராட்சசனும் அவன் பெண்சாதியும் அநுமார்வாலில் கட்டுப்பட்டு சரணம் பண்ணி விடுவித்துக் கொண்டு வீடுவந்துசேர்ந்து மறுபடியும் பெண்சாதியும் தானுமாக மன்மதகிரீடை நடாத்தி வருகிறப்போது கடகனைப்பார்த்துச் சொல்லுகிறாள் வாரும் பிராணநாயகா அறிவுகுறைவா நீர் மயிலிராவணனுடைய உப்புஞ்சோறும் தின்று அவனுக்கு யிரண்டகந் தேடலாமா சத்துராதியான குரங்குக்குப்பயந்து ஓடலாமா இனி உமது அரசனிடத்தில் நாடலாமா வீரமில்லாத நீர் என்னிடத்தில்வந்து கூடலாமா அன்னமிட்டவர் பெண்சாதியை கன்னமிட்டவாறுபோல் செய்துவிட்டீர் அல்லாமலும் நீர் அவனோடேபோய் சொல்லாமலுமிருப்பது தரும சாஸ்திரநெறிக்குக் கதியல்லவென் றந்தப்பெண்டாள் நற்புத்தி விளங்கக் கூறினாள் கடகனுங்கேட்டு இதோ அப்படிபோய்ச்சொல்லுகிறேனென்று வீதிவிட்டுபுறப்பட்டு சீக்கிரமாகத் தோட்டத்துவழியாலே அநுமாருக்குத்

தெரியாதவராகத் திரும்பிப் பார்த்துக்கொண்டு மயிலிராவணனுடைய ஆசாரவாசலில் நுழைந்தான் அவ்விடத்தில் பன்னீராயிரங்கோடி ராட்சதர்கள் சத்துருபயமில்லாமல் ஆயுதங்களைத் தலைக்குபரமாக வைத்து நித்திரைபண்ணுகிறார்கள் அவர்களைக் கடகன்கண்டு கையினால் தட்டி என்னதூங்குகிறீர்கள் மயிலிராவணனுடனே இந்தச்செய்தியை சொல்லுங்களென்று சகலமானபேருக்குஞ்சொல்லி அசாகனென்பவனையழைத்துமயிலிராவணனுக்கு இந்தச் சங்கதியைச் சொல்லென்று கடகன்சொல்லியனுப்ப அப்போதந்தச்சேதியை அவசரக்காரனான அசாகன் மயிலிராவணனுக்குச்சொல்லும்படி உள்ளேபோனான்.

அப்போது மயிலிராவணனும் அவன்பெண்சாதியும் சப்பிரகூடமஞ்சத்திலேசரச அமளி நடாத்தும்போது பெண்சாதிநாயகனைநோக்கி ஆண்டவரே உமதுமார்புபோல உலகத்தில்ஒருவருக்குமில்லையென்றாள் நாயகன்சொல்லுகிறான் பெண்ணே உனதுகிளிமுகம்போல ஒருவருக்குமில்லையென்று கட்டிபிணைந்துமடவிதனைச்சேர்ந்துதழுவி சரசசல்லாப அமளிநடாத்தி இருக்கிறசமயத்தில் மயிலிராவணன் காதிலே நாராசங்காய்ச்சிவிட்டதுபோலும் பச்சைமரத்திலேயிராவாணிகடாவினாற்போலும் அசாகனென்பவன்சொல்ல மயிலிராவணன் கேட்டுகிருஷ்ணசர்ப்பம்போலச்சீறி சீக்கிரமாகவெழுந்துவிழுந்துகொலுக்கூட்டத்தில் வந்துட்கார்ந்து அப்பா கடகா வாருமய அனுமானென்றுபேர் துலாயந்திரத்திலிருந்த பூதபதியான ராட்சதர்கள் எப்படி அனுமாரைவிட்டார்கள் அவர்களை ஒரேவெட்டாக வெட்டிவிடுகிறேனென்றான் கடகன்சொல்லுகிறான் வாரும் எங்களரசனே வெற்றிமுரசனே இலங்கைக்கதிபதியே நீர் வெட்டுகிற பரியந்தம் இருந்தாலல்லவோ அவர்களை அனுமானென்னுங் குரங்கு அடித்துக் கொன்றுவிட்டதென்றான் மயிலிராவணன் வாசிமுகன் முதலிய மந்திரிகளைக்கூப்பிட்டு யோசனைசெய்யவேண்டுமென்றுசொல்ல கடகன்சொல்லுகிறான் ஐயா ராவணேந்திரன் தவிர வாசிமுகன்முதலியபேர்களும் இறந்தாரகளென்றுசொல்ல மயிலிராவணன் அப்படியாவென்று கருவி வலையுறுவி மந்திரிகளிடம்கருவி சற்றுவெருவி இனிமேல் நடக்கத்தக்கதான காரியமென்னவென்றுகேட்டு கடகனைப்பார்த்துச்சொல்லுகிறான்.

கேளும்பிள்ளாய் கடகா என்தங்கையான துரதண்டிகை தண்ணீர்க்குப்போகவனுப்பினேன் அந்தபாவி அழைத்து வந்தாற்போல் காண்கிறது இல்லாவிட்டால் அனுமாரிக்குவாத திறமுண்டா நல்லது எல்லாவற்றிற்கும் அந்தத்துரதண்டியையும் நீலமேகனையும்போட்ட கூடத்தைத்தாவற்கிடங்கிலே யிருக்கிறார்களோ இல்லையோ அதைச்சற்றே பார்த்துவாவென்றனுப்பினான் கடகன் அதிசீக்கிரமாய்போடி அக்கக் காவற்காவடியைப்பார்த்தான் அப்படி பார்க்கும்போது கதவு படுசூரணமாய்ப் போயிருப்பதையும் விலங்குதூளாயிருப்பதையும்பா

ர்த்துச்சீக்கிரமாக ஓடிவந்து மயிலிராவணனுக்கு நமஸ்காரஞ்செய்து
சொல்லுகிறான் கேளுமையாசுவாமிஉமது காவற்கூடச்சாலைபோயிற்
று விலங்குமுறிந்துகிடைக்கிறது நீலமேகன் தூாதண்டியிருவரும் அவ்
விடத்திலில்லையென்றுசொன்னான் அதைக்கேட்டமயிலிராவணன் ஆ
வென்றுசீக்கிறமாக அக்கிரமித்துப் பராக்கிரமமீறி வியாக்கிரமம்
போலச்சீறி கடகனைக்கண்டு அந்த இருவரையும் இப்போதேவெட்டி
ப்போடுவாயென்று கடகனுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு தா
னுமெழுந்திருந்து இராமலட்சுமணரை பத்திரகாளி கோவிலிலே
வைத்தோமேயென்று அந்தப்பெட்டியைப் பார்க்கவந்தான் அங்கே
பெட்டியில்லாதபடியினால் யேங்கித்தியங்கி என்னசெய்கிறதென்று
ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

இவனிப்படியிருக்க கடகன் அதிசீக்கிரமாகப் பட்டாக்கத்தியை
யுருவிக்கொண்டு நீலமேகனையும் தூாதண்டியையும் வெட்டவேண்டி
அவர்களெங்கேயிருக்கிறார்களென்று கோட்டைகளைத்தாண்டி ஓடிமூ
லைக்குமூலைதேடி இராசமார்க்கத்து வீதியிலே வரும்போது அவனுக்
கெதிராக அனுமார்வரக்கண்டு பயங்கொண்டு கடகன் கிடுகிடுவென்று
நடுங்கியொடுங்கி இனியெப்படி தப்பித்தோடுகிறதென்று அதிகவிசா
த்துடனே பட்டாக்கத்தியை தெருவிலே யெறிந்துவிட்டு ஒருசந்தி
லே நுழைந்து குட்டிச் சுவர்களின் வெளியைத்தாண்டி விழுந்து எழு
ந்து நான்குமூலையும்பார்த்து அனுமார்கண்ணி லகப்படப் போகிறோ
மென்றுபயந்து அயர்ந்து போரிற் புறமுதுகுகாட்டி யோடுவதுபோல
யோடி மயிலிராவணனைத்தேடி அரண்மனை வந்துசேர்ந்தான் அங்கே
மயிலிராவணன் கோயிலுக்குச்சென்று பார்க்கக் கதவு இடிந்து முறி
ந்து மண்ணாய்ப்படிந்து படுசூரணமானதைப்பார்த்து இதேது மோச
ம்வந்தது அதிசயமாயிருக்கிறது பெட்டியையும் அனுமாரென்னுங் கு
ரங்கு எடுத்துக்கொண்டுபோய்விட்டது.

இனியென்னசெய்வோம் பத்திரகாளியும் அவன் அழைத்த இ
டத்துக்குப் போனாளோவென்று சந்தேகித்து அந்தமகாகாளி முகத்
தைப் பார்த்தான் பார்த்தவிடத்தில் பத்திரகாளிக்கு அகப்பாணி முக
ம்கோணி விசனமுற்றிருப்பதைப்பார்த்துச் சரிதான் பத்திரகாளியு
ம் அனுமரோடு போய்விட்டாளென்று எண்ணியோசனைபண்ணி இ
னி அரண்மனைக்குப் போகவேண்டும் அனுமாரெனவர் எவ்விடத்திலா
வது ஒளித்திருந்துவந்து வழிமறித்துக்கொண்டு அவப்பண்ணுவாரோ
வென்று நான்குமூலையையும் பார்த்து வாயுவேகமனோவேகமாய்ப்ப
றந்து அரண்மனைக்கு ஓடிவந்துவிட்டான் மயிலிராவணன் கடகனைப்
பார்த்துச்சொல்லுகிறான் அடாவடா கடகா நீ போன காரியமெப்படி
யாயிற்றென்று கேட்டு உடனே அவசரக்காரரை அழைத்துச்சொல்
லுகிறான்.

அப்பாவேவுகாரர்களே நீங்கள் சீக்கிரமாகப்போய் அந்தத்தூரதண்டி நீலமேகன் இருவரும் எங்கேயிருக்கிறார்கள் அதிசீக்கிரமாகப்பார்த்துவாருங்களென்று சொல்லியனுப்ப அவர்களவ்வாறே அரசன்சொற்படி பாதாளவிலங்கைநகரம் நூறுதெருவிலே தேடிவரும்போது நீலமேகனும் தூரதண்டியும் அனுமாரும் பேசிக்கொண்டிருப்பதைப்பார்த்துவிட்டுப்பயந்து நடுநடுங்கிக்கொண்டோடி மயிலிராவணன்சபையிலே வந்துசேர்ந்து சொல்லுகிறார்கள் வாரும்பாதாளவிலங்கேஸ்வராகேளும் அதோ அனுமாரும் நீலமேகனும் தூரதண்டியும் பேசிக்கொண்டு வெகு அன்னியோன்னியமாயிருக்கிறார்களென்று சொன்னார்கள் அப்போது மயிலிராவணன் வெகுகோபத்துடனே ஆறாயிரம் ராட்சதப்படைகளைக்கூட்டி நீலமேகன் தூரதண்டி யிரண்டுபேரையும் பின்கட்டாய் கட்டியிழுத்துவாருங்களென்று சொன்னான் அப்படிசொல்லியஅரசன்சொல்லை தவறாது அந்தஆறாயிரம்பேரும் ஏககாலத்தில் கடல்பொங்கிய வாறுபோலத் திரண்டுகொண்டு அவரவராயுதங்களை எடுத்து அணிந்து வில்லுகளைக்கையிற்றாங்கி அம்புறாத்தூணியைமுதுகிலேவாங்கி ஆயுதபாணிகளாகி அந்தஆறாயிரம்பேரும் தெருவிலேவரும்போது அனுமார் ஒருமூலையிலேயொளித்திருக்க இராட்சசர்கள் வந்துவிட்டார்கள்நீலமேகனும் தூரதண்டியும்இந்தராட்சசர்கள் என்னசெய்யப்போகிறார்கள் பார்ப்போமென்றிருமாந்துநிற்க உடனே அரக்கர்வந்து இரண்டுபேரைப்பிடிக்க அருகிற்சென்று அடிமாடிகள்ளி தூரதண்டி அடாநீலமேகா சத்துருவைக்கொண்டுவந்து கோட்டைக்குள் விட்டுவிட்டீர்களாவென்று அதட்டிஅறுகி தறுகிவெறுகி முகங்கள்கருகி கோபம்பெருகி கடுகிப்பிடியுங்கள் முடுகி அடியுங்கள் சேர்த்துகட்டுங்கள் குறிபார்த்துத்தட்டுங்கள் தலையைவெட்டுங்கள் என்றுகாணாதவார்த்தையாடினார்கள் இதுகளைக்கேட்டநீலமேகனும் தூரதண்டியும கிடுகிடுத்துப்பயமெடுத்து அஞ்சிமனந்துஞ்சி அரிகரிஆஞ்சநேயா அனுமந்தராயா ஆபத்பாந்தவா அச்சதனோடுசேர்ந்தனா சத்துருக்களிடத்தில்காட்டிக்கொடுத்துவிட்டீரே இப்படியுஞ்செய்யலாமாவானரசம்மவடிவுறுசோமா கெடிபெறுராமா காக்கக்கடவீர் காக்கக்கடவீர் ஏழைபங்காளாஎன்னையாளாவென்று முறையிடஅவ்வார்த்தைகளை அனுமார்கேட்டு அதிசீக்கிரமாகஆகாயத்திலேயெழும்பிக்குபீரென்று அரக்கர்படைமேல்விழுந்துயானைக்கூட்டத்திலே ஒருசிங்கம் புகுந்தவாறுபோல ஆறாயிரம்ராட்சசசேனைகளையும ஒவ்வொருவராகக்கால்களைப்பிடித்துகரகரவென்று சுழற்றி ஆகாயத்தைநோக்க மண்ணிற்றுக்க தேவர்கள்பார்க்கத்தனது வஞ்சந்தீர்க்கயாவருங்கசங்கி நசுங்கியமபுரம்போய்ச்சேர்ந்தார்கள்.

மாண்ட அரக்கர்களி லொருவன் பிழைத்து மயிலிராவணனிடத்
தோடி ஓஒவென்று இரைந்துகரைந்துசொல்லுகிறான் ஆண்டவனே ம
குடாபிஷேகம்பூண்டவனே இலங்காதிபதியே இன்று ஆறுபிரம்பேர்
போனோமே அத்தனைபேரையும் அனுமார்சரிபடுத்தி விட்டாரென்று
கூற மயிலிராவணன் தீர்க்காலோசனைசெய்து அதிககோபத்துடன் ச
கலராணுவங்களையுங்கூட்டி கடகனைநோக்கி அடாவடா கடகா உக்கிர
சேனையனுப்ப ஆயிரங்கோடிகுதிரைவீரர் ஒட்டகைவீரர்களையும்
அவரவராயுதங்களுடனேவரும்படி ஆக்கியாபித்து (௨௧) ரதங்களைப்
பூட்டிபோர்க்களத்தில் ஓட்டுஎன்றுசொல்லியனுப்பகடகன் அப்படியே
நல்லதென்றோடி அந்தந்த சேனாதிபதிகளுக்குச்சொல்லி பின்புமயிலி
ராவணன் தனதுரதத்தை சிங்காரித்துக்கொண்டுவா ஆயுதபாணியாகத்
தேரின்மேலேறினான் அனேக சேனாதிபதிகளாகிய உக்கிரசேனன்-த
சவீரன்-கசவீரன்-காலதெட்சகன்விந்தியசம்பன் விக்கிரன் சக்கரன்
இருமாலி அக்கினிகேதுவீராலன் கடகராட்சசன் அகம்பன்நிகும்ப
ன மந்தரன்முதலான சத்தவீரர்புடைசூழ சத்துருக்கள்தாழ முத்து
க்குடைகள்கவிய சிங்கக்கொடிபறக்க மயிலிராவணனானவன் சகலராட்
சதர்களும் புடைசூழும்படி பாளயம்விட்டிறங்கினான்.

இப்படியிருப்பதை அனுமார்பார்த்து மகாகோபத்துடனே விஸ்
வரூபமெடுத்துக்கொண்டு இராட்சசக்கூட்டத்திலேவந்துவிழுந்து தா
றுமாறுபறக்கடிக்க அப்போது இராட்சசர்களெல்லாம் அனுமா
ரைச்சுற்றிக்கொண்டு ஈட்டிஎறியம்புபாலாமுதலிய ஆயுதங்களைஎறிந்
தார்கள் இருபதினாயிரங்கோடி தேரின்பேரிலேயிருக்கிற மகாப்பிர
தானிசேனாதிபதிகள் தங்கள்தங்கள் வில்லுகளை வளைத்து ஆயுதங்க
ளைத்தொட்டு அனுமார்பேரிலே சரவருஷம்பொழிந்தார்கள் ஆயிரங்
கோடிபுரவிமேலிருந்தார்கள் ஆயிரங்கோடிபாணம்வருஷித்தார்கள நூ
றுகோடிமதயானைகளும் இருப்புலக்கைகளைத் துதிக்கரத்திற்பிடித்த
க்காரகரவென்றுசுழற்றிவிட்டோடிய ஒருவெள்ளம் இராட்சசர்கள்சகல
ஆயுதங்களினாலேயும்அடிக்க அப்போது அனுமாரானவர்பார்த்துதனது
வாலை விஸ்தீரணமாய்வளைத்து வால்கோட்டையாகத் தன்னைச்சுற்றி
லுங்கட்டிக்கொண்டு அக்கோட்டைக்குள்ளே சட்டதிட்டமாய் காலை
மடித்துப்போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார் அப்போது சகலராட்
சசர்களும் ரதகஜதுரகபதாதிகளும் ஏககாலத்தி லனுமாருடையவால்
கோட்டையின்பேரில் முப்பத்திரண்டாயுதங்களையும் பிரயோகஞ்செ
ய்து சின்னபின்னமாயடிக்க அனுமாரானவர் யோசனை செய்துநாமஇப்
படி உட்கார்ந்திருந்தால் பத்துநாளாகிலும் இவ்வண்ணமே இராட்சசர்
கள் ஒன்றுக்குமஞ்சாமல் சண்டைசெய்துக்கொண்டிருப்பார்கள் ஆ

T. 18389

கையால் எழுந்திருந்து சண்டை பண்ணவேண்டுமென்று தனதுவாலை பிரமாண்டமாகவளைத்து இராட்சதர்களைவாயினாலும் காலினாலும்மெய்யாலும் பல்லாலும் கல்லாலும் அடித்துக்கடித்து உதிரத்தைக் குடித்தும் ஆத்துமத்தைகுடித்தும் கரடிகள்புலிகள் யாவற்றையும் அதமாக்கிப் பொடிப்பொடியாபொடித்தும் துவம்சப்படுத்த பிரளயகாலாக்கினிருத்திரனைப்போல ஆஞ்சனேயரடிக்க சகலசேனையும் அடிப்பட்டு மூலைக்குமூலை யோடுவதைக்கண்ட சதாசிங்கனென்கிறபேரைத்தரித்த ஆஞ்சனேயனைக்கொல்லுகிறேனென் கேளையப்பாயவிருந்து கோடிக்கை பாருங்களென்றுசொல்லி ஆஞ்சனேயர்பேரில் சகல சனங்களும் வந்து அனேகபாணங்களைப்பொழிந்தார்கள்.

அப்போது ஆஞ்சனேயர் தனதுவாலைசதாசிங்கனுடைய இரண்டுகாலையுங்கீழ்பூணிட்டுசுற்றிக்கொண்டு இழுத்துக்கீழேபோட்டு நடுபோர்பில்மிதித்தார் மிதித்தமாத்திரத்தில் அந்தச்சதாசிங்கன் நாலுநாக்கும் பிதுங்கி குடல்நசுங்கி எலும்புகள்முறிந்து யமபுரத்தையடைந்தான் அப்போது விந்தியசிம்மனென்பவன் மனம்பதைத்து அடா ஆஞ்சனேயா அனுமக்குரங்கா நில்லுநில்லு சதாசிம்மனை அடித்துமாய்த்தது வீரமோமென்று கர்வங்கொள்ளாதே வீணாய்த்திரியாதே துர்ச்சினமாய்ப்போதிசுமக்குமா என் முன்சண்டைக்குவாடா உன்னைப்போதேசங்கரிக்கிறேனென்று ஆண்மைகூற அப்போது அனுமார் விந்தியசிம்மன்பேரில்எதிர்த்தார் வில்லைவளைத்து அனேகபாணங்களைப்பிரயோகஞ்செய்தான் அந்தபாணங்கள் ஆஞ்சனேயர்பேரில் படமாத்திரத்தில் அதிககோபமுடன் வெகுதுரிதமாய்போய் தேரின்பேரிலிருக்கிறவிந்தியசிம்மனைப்பிடித்து தமதுகையினால் ஓங்கியறைய விந்தியசிம்மன் மூர்ச்சையாய்த் தேரின்பேரிலிருந்து கீழேவிழுந்து விரையவெழுந்து ஓட்டம்பிடித்தான் அம்முறைவதைக்கண்ட கடகரோமனென்கிறவன் ஆஞ்சனேயரோடெதிர்த்துயுத்தஞ்செய்ய அவனையும் தனதுடையகையிலணைந்தார் அந்தஅறையினால் கடகரோமன் இரத்தங்களைக்கக்கிக்கொண்டுகீழேவிழுந்து யமபுரத்தையடைந்தான்.

பின்புநான்காம்வீட்டிலே பிரவேசிக்க அவ்விடத்தில் காலாட்சனனென்பவன் அதிசீக்கிரமாய் வில்லிலனேகபாணங்களைப்பூட்டிப் பிரயோகஞ்செய்தனப்போது ஆஞ்சனேயர் அனேகஆயுதங்களால் யுத்தஞ்செய்துபின்பு தமதுகாலைகீழேபுகவிட்டு தேரின்பேரிலிருக்கிற காலதட்சனைத்தூக்கியெடுத்து ஆகாசத்திலேதூக்கி சரசரவென்றுசுழற்றி நிலத்திலேயடிக்க அவனும் யமபுரத்தையடைந்தான் அதைக்கண்டு ஐந்தாம்வீட்டிலிருக்கிற உக்கிரசேனன் வக்கிரசேனன் இவ்விரண்டுபேருமக்கண்களில் தீப்பொறிபறக்கக்கோபித்து வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்தார்கள். அப்போது அதிசீக்கிரமாயெழும்பி குபீரென்

றுஉக்கிரசேனனுடைய தேரின்பேரி லொருகாலும் வச்சிரசேனனுடையதேரின்பேரில் ஒருகாலுமாகவைத்து வீராவேசத்துடன்மிதித்துக்கொண்டு இருவர்கழுத்தையும் இரண்டுகையினாலே பிடித்து அங்குமிங்குமசையாமலழுத்தி ராட்சதர்களெல்லாரும்பார்த்து மனங்கலங்க அவ்விருவர்கழுத்தையும் இறுக்கிப்பிடித்து இரத்தம்வீறிட கண்பிதுங்க நாக்குத்தள்ள அடித்து நாசப்படுத்தி இருவரையும்யமபுரஞ்சேர்ப்பித்துப் பின்பு ஆறாம்வீட்டில்போக கடகனென்பவன் ஆஞ்சநேயரைப்பார்த்துநடுநடுங்கி பயமுற்றிருக்க ஆஞ்சநேயர் கடகன்பேரில் விழுந்து ஒருதரமறைந்து யமபுரஞ்சேர்ப்பித்து பின்புஏழாம்வீட்டில்போகிறபோது நிரசிம்மனென்பவன் ஆஞ்சநேயரைப்பார்த்து அட்டகாசஞ்செய்து அடாவானரா உனக்கு யாரிருக்கிறதென்றல்லவோ கர்வமடைந்திருக்கிறாய் இதோபார் உன்னைப்போல்நாயானது அதிகபெரிதாயிருக்கின்றது இந்நாயினாலே உன்னைக் கட்டிப்பிடித்து விழுங்கிவிடுகிறேனென்று ஆண்மைகூறி இருவரும் மல்யுத்தஞ்செய்ய அப்போது ஆஞ்சநேயர்பின்னிடைய நிரசிம்மனென்பவன் ஆஞ்சநேயரைப்பிடிக்கவேணுமென்று தனதுநாயைப்பதிப்படுத்த ஆஞ்சநேயர் அதிசீக்கிரமாயெழும்பி அந்தநாயை தன்னுடையகையாலே ஐந்துசுற்றுமிழுத்து எரகாவென்று ஆகாயத்திலேசுழற்ற நிரசிம்மன்நாயானது அடிக்கட்டோடே அறுந்துவிழுந்து யமபதிக்குப்போய்ச்சேர்ந்தான்.

பின்பு ஆஞ்சநேயர் எட்டாம்வீட்டில்போகிறபோது சம்புமாலியானவன் அதிகக்கோபத்துடனே ஆஞ்சநேயர்பேரில் பாணப்பிரயோகஞ்செய்ய ஆஞ்சநேயரதிக தனதுவாலை கிழேவிட்டு சம்புமாலிக்குத்தெரியாமல் பின்பக்கமாய்வாலைவிட்டு அவனுடைய கழுத்தைச்சுற்றியிழுத்து அழுத்திப்பிடிக்க சம்புமாலியானவன் வாலையுதைத்துக்கொண்டு இரண்டுவிழியும்பிதுங்கப் பூமியில்விழுந்து காலன்பதியையடைந்தான் அதைவிட்டுப்போகிறபோது அக்கினிக்கண்ணனென்பவன் அநேகபாணங்களினாலே துன்பப்படுத்த ஆஞ்சநேயர் தனதுவாலினால் அவன்கழுத்தைநெரிக்கப்பிடித்துயமபுரஞ்சேரும்படி செய்துவிட்டு அப்பால்போகிறபோது ஆஞ்சநேயரோடு எதிர்த்து யுத்தஞ்செய்ய நிருவாகமில்லாமல் மூலைக்குமூலையாய்விழுந்து அலைச்சல்பட்டுவந்த இராட்சதர்கள் மயிலிராவணனண்டையிலேபோயுரைக்க மயிலிராவணன் தனக்குள்ளேயோசனைசெய்து ஓ இராட்சதர்களே மாதங்கிசொன்னபடியே ஆசகுனபாத்தையா இதென்னவதிசயம் முன் ஆகாயவாணி நீலமேகன் இந்தப்பாதாளவிலங்கையைப் பட்டங்கட்டிக்கொள்வானென்றுரைத்தாளே அவளுடைய திருவாக்குக்கெதிர்வாக்கில்லாமல் முடியுமாப்போற்றோன்றுதென்றுமனதில்நினைத்து விசாரத்துடனே தன்மனதுதாளாமல்கோபம்பெருகி மனதுகருகி இராட்சசர்களைப் பார்த்துச்சொல்லுகிறான்.

ஓ இராட்சசர்களே வானரங்கள் உங்களை லாங்கூரையிற் பருங்கள் மூலைக்குமூலை பேல் ஓடுகிறீர்கள் நானிருக்கச்சே உங்களுக்குஎன்னபயம் நானே அந்த அனுமந்தனைச் சங்காரஞ்செய்வேன் என்னுடைய மாயையினாலே அவனை அதம்பண்ணுவேன் அவனாலே என்னுடையமாயையைக் கண்டுபிடிக்கக்கூடுமோ அல்லது அவன்புத்தி அதில் நாடுமோ நாடாது ஒருசமயம் கண்டுபிடித்தாலும் என்னுடைய சீவனிருக்குமிடம் அவனுக்குத்தெரியுமோ அவனுக்கு என்னைச் சங்கரிக்கும்படியான வல்லமையுண்டோ இல்லை நானே அந்த அனுமந்தனைக் கொல்லுகிறேன் வீப்படையைவெல்லுகிறேன் இதோபார் என்னுடைய விரணயாகத்தைச்செய்து மகாபிரளயகால பூதத்தை அழைத்துக்கொண்டுபோய் அவனை அதம்பண்ணுகிறேனென்று பராக்கிரமங்கூறி இராட்சதர்களைப்பார்த்து ஆஞ்சநேயர்பேரில் ரதத்தைவிடச்சொல்ல அப்போது சாரதியானவன் ஆஞ்சநேயர்பேரில் ரதத்தையேவ ஆஞ்சநேயர் சகலராட்சதர்களும் திரணமென்றுநினைத்து விந்தியசிம்மன் கடகரோமன் காலதட்சன் உக்கிரசேனன் வக்கிரனுசன் கடகமுகன் திரகடச்சிம்மன் சம்புமாலி அக்கினிகேதுமுதலான சேனாதிபதிகளை அதஞ்செய்து இனியாவன் சண்டைக்கு வருவானென்று யோசனைசெய்து இடுப்பில் இரண்டு கையையும் ஊன்றிக்கொண்டு இறுமாந்து கொடூரமுகத்தோடு கண்களில் நெருப்புப்பொறிகள்பறக்க உறும்பிப்பார்த்திருக்கும்போது அங்ஙனம் ஒருரதம் வரக்கண்டு இதுயாருடையரதம் இவன் எந்தசேனாதிபதியாவனோ வென்றுநோக்கிப்பார்த்துக்கொண்டிருக்க அந்தரதத்தில் திவ்வியபுரவிகள் பூட்டியிருக்க இருபுறத்திலும் இராட்சதர்கள் சூழ்ந்துநிற்க வச்சிரத்தினாற்செய்த வெள்ளைக்குடையானது பிடிக்க தாரைகளுமேளமடிக்க வீரர்கள்பளபள வென்றுகுதிக்க குதிரைகள் தடதடவென்று பூமியில்நடக்க இருபுறத்திலும் சாமரைவீச சகலஜெனங்களும் கோஷ்டமிட்டுவர இப்படிநாலுவித அலங்காரத்துடனே பாணங்கள்சொரிய மகா ஆயுதபாணியாய் வருவதைக்கண்டு ஆஞ்சநேயர் பார்த்துச்சொல்லுகிறார்.

அடாவடா மயிலிராவணா உன்னுடைய இராட்சதர்களும் நீயும் எங்குஒளித்தாலும் உன்னையும் அவர்களையும்விடுவேனோ நில்லுநில்லென்றுகர்ஜித்துச் சொல்லிக்கொண்டு வருகையில் மயிலிராவணன் கோபங்கொண்டு அனேகபாணங்களைப் பிரயோகஞ்செய்ய ஆஞ்சநேயர் கோபத்துடனே மயிலிராவணனுடைய பாணங்களைக் கொஞ்சமாகிலும் சட்டைபண்ணாமல் மனதில் பயந்தோன்றுமென்னாமல் பாணத்தின்பேரில் விழுந்தோடி மயிலிராவணன் அனுமார்வருவதைப்பார்த்து மகாதபஞ்செய்துபெற்ற வரப்பிரசாதமான அக்கினியால்திரத்தை

த்தொடுத்து விடவும் அது அக்கினிச்சுவாலையா யெரிந்துகொண்டு வர
அனுமார் அக்கினியாஸ்திரத்தை வாலாலே சுழற்றியடிக்க அப்பே
து அக்கினியாஸ்திரம் பூமியிலே விழுந்தெரிந்துபோய் விட்டது மயிலி
ராவணன் அக்கினியாஸ்திரம் வியர்த்தமாய்ப் போனதுகண்டு மகா
கோபத்துடனே ரவுத்திராஸ்திரத்தையெடுத்து பிரயோகம்பண்ணி
னான். அவ்வஸ்திரமானது விடப்பட்டு அனுமாரைச்சுற்றிவந்து பூமி
யில் விழுந்துபோக மயிலிராவணன் கண்டு நாம் சகலஅஸ்திரமும் பிர
யோகஞ்செய்து பலனென்ன இனியாதோ ரஸ்திரமுமில்லையே யென்
று மனந்திகில்கொண்டு மகா விசாரத்துடனே யோசனைசெய்து அ
டா நாம் என்னகாரியம்செய்தோம் மதங்கி சொன்னவார்த்தை நிலை
நின்றது அவ்வார்த்தையைக் கேளாமற்போனேனே ஆ தெய்வமே இ
னிமேல் எவ்வாறு ஜெயிப்போம் நாமேன் வீணுக்கிலைசகண்டராவண
னுடனே பிரதிக்கினைசெய்து உறுதிகூறி வந்தோமேனன்று மனசஞ்
சலமாய் தனதுவில்லை தேரின்பேரிலேவைத்து யுத்தம்செய்யாமலிரு
க்கிற மயிலிராவணனைப்பார்த்து ஆஞ்சனேயர் அதிகவுக்கிரத்துடனே
ஆகாயத்திலே யெழும்பி அவனுடைய தேரின்பேரிலேகுதித்து துவம்
சப்படுத்தும்போது அவன் தேரைவிட்டுக் கீழேகுதித்து அப்பால்நிற்
க தேர்பொடிப்பொடியாய்ப் போகவே மயிலிராவணன்பக்கத்தில் நிற்
பதைப்பார்த்து அனுமார் ஐந்துவிரலையுமடக்கி அவனுடைய மார்பி
லே குத்த மயிலிராவணன் மூர்ச்சையாய்நாக்கிலும் மூக்கிலும் இரத்
தங்களைக்கக்கி அலறிக்கொண்டு பூமியிலேவிழுந்தான்.

உடனே யெழுந்திருந்து மகாகோபத்துடனே தண்டாயுதபாண
த்தைச்சுழற்றி ஆஞ்சனேயர்மேலில் எறிய இவர் மூர்ச்சையடைந்து
சிக்கிரத்தில் பந்தடித்தாப்போலே பதறிக்கிளம்பி அட்டகாசஞ் செய்
து மயிலிராவணனைப்பார்த்து அடாநில்லு திருடா வென்று சொல்
லிக்கொண்டு தனதுவாலை கீழேவிட்டு அவனுடைய இரண்டுகாலையும்
சுற்றியிழுத்து ஆகாயமார்க்கத்திலே தூக்கி கரகரவென்று சுழற்றி
பூமியிலே அடிக்க மயிலிராவணன் பூமியிலே அறைபட்டு நூறுசுக்க
லாய்ச் சிதறி மார்க்கண்டங்கள் துண்டுதுண்டாய் மூலைக்கொரு பக்க
மாய்த்தெரிந்து உருத்தெரியாமல்போக அனுமார் சந்தோஷத்துடனே
நாம்பண்ணின பிரதிக்கினை முடிந்ததென்று இராமச்சந்திர மூர்த்தி
யிருக்கும் ஸ்தானமாகத் திரும்பி ஸ்தோத்திரஞ்செய்ய அப்போ
து மயிலிராவணன் முன்போலுருவாகி ஐந்து விரலையு முஷ்டியாக
ப்பிடித்து ஆஞ்சனேயர் பின்புறத்தில் வந்து அவரது முதுகில் ஓங்
கிக்குத்தினான் அவர் திரும்பிப் பார்த்தார் மயிலிராவணன் நிற்பது

கண்டு இதேதுகாரணம் இவனைச்சங்காரம் பண்ணினேனே இவனும்
மயிலிராவணன்போலத் தோன்றுகிறது இன்னம் இவனைப்போல இ
ரண்டுமூன்று பேருண்டோமென்று ஐயுற்று யோசனைசெய்துகொ
ண்டிருக்கும்போது அவன் அட்டகாசம்பண்ணி அருகில் நின்றுகொ
ண்டு அநுமானைப் பார்த்து அடா வாடா வானரா வென்றுசொல்லி
நிற்கின்றவனை ஆஞ்சனேயர் சற்றுகிலும் திரும்பிப்பாராமல் ஐந்து
விரலாய் முஷ்டிக்குத்தாகக்குத்தி அதஞ்செய்து மறுபடியும் எழுந்தி
ருந்து யுத்தஞ்செய்து பின்னும் மயிலிராவணனை சாக அடித்து அட்
டதிக்கிலும் மார்க்கண்டங்களை சக்கை சக்கையாய்ப் பேர்த்தெறிய அக்
கண்டங்கள் முந்நூறு யோசனைக்கப்பால் போய்விழுந்தன அப்போ
து ஆஞ்சனேயர் மயிலிராவணனைக் கொன்றுவிட்டோமென்று சந்
தோஷத்துடனே இராமமூர்த்தியைநினைத்து ஸ்தோத்திரஞ்செய்யும்
போது மயிலிராவணனும் முந்நூறுயோசனைக்கப்பால் விழுந்துகிடந்
த மார்க்கண்டங்கள் ஒன்றாகச்சேர்ந்து முன்போலுருவாகி விரைவி
ல் ஓடிவந்தான்.

அப்போது ஆஞ்சனேயரைப்பார்த்து அடா அநுமந்தா நீ சண்
டைக்கு வருவாயென்று கேட்க அநுமார் மயிலிராவணனைப் பார்த்
து இதென்ன ஆச்சரியம் இறந்துபோனவன் அடிக்கடி பிழைத்து வ
ருகிறான் இவ்வதிசயம் யானெங்கிலுங்கண்டதில்லை இதென்னகாரண
மோ அல்லதுவரமோ அல்லதுவல்லமையோ நாமென்னசெய்யலாம
அந்தபாதகனான விபூஷணனும் மயிலிராவணனுடையவல்லமை யிப்படி
ப்பட்டதென்று சொல்லாமற்போனானே இனிமேலிவனை யெப்படிக்
கொல்லுகிறது இவன இவ்வண்ணமாய்ச்செத்துச்செத்துப்பிறப்பானா
கில் நானெப்படிச்செயிப்பேன என்பிரதிக்கினை யெவ்வாறு முடியும்
நீலமேகனுக்கு என்னால் பட்டங்கட்ட முடியுமோ ஆ ஆ தெய்வமே
இப்படிவல்லமையான மயிலிராவணனுடைய மாயைக்கு நானபாத்தி
ரனல்ல ஓ ஓ இராமலட்சுமணரே உங்கள்காரியார்த்தமாய்வந்தவென
க்கு இந்த அபஜயம் வரலாமோ தேவர்களேநீங்களாவது இங்ஙனம் வ
ந்த இவனதுவரம் இப்படிப் பட்டதென்று எனக்கு சொல்லலாகா
தா என்னசெய்வேனென்று விசாரப்பட்டுக் கொண்டு மனம் திடப்
பட்டு இனிமேல நமக்கு மர்மம் ஆர்சொல்லப்போகிறார்கள் நீலமேக
ன் தூதகண்டி இவர்களிடத்திற்குப் போய் இந்தமர்மம் தெரிந்து
கொள்ள வேண்டு மென்று மனதி லுத்தேசித்துக் கொண்டு மயிலி
ராவணனைப் பார்த்து அதிகோபத்துடனே தனதுவாளைக் கீழேவி

ட்டு அவனுடையகால்முதல் கழுத்துவரையில் பிரிசுற்றினுர்போலச் சுற்றியிழுத்து ஆகாயத்திலே கரகரவென்றுசுழற்றி பம்பரம்போலே விசையாயெறிந்துவிட்டு அங்கிருந்தபடியே நீலமேகன்தூரதண்டி இவர்களருகில் போகவேண்டுமென்று சந்தோஷத்துடனிருந்தார். இங்கனம் இப்படியிருக்க தூரதண்டி நீலமேகனைப்பார்த்துச் சொல்லுகிருள் அடா வாடா குமாரகா சண்டாளனுன மயிலிராவணனுடனே ஆஞ்சனேயர் யுத்தஞ்செய்து எங்ஙனம் மூர்ச்சையாய் விழுந்திருக்கிருரோ தெரியாது அந்தமயிலிராவணனை நூறுதரம் சதைசதையாய்ப்பேர்த்தெரிந்தாலும் மறுபடியும் ஒன்ருேடொன் றுருப்பெற்றெழுந்து கொண்டு மறுபடியும சண்டைபண்ணவருவானே அவனைக்கொல்லும் விவரம் ஆஞ்சனேயருக்குத் தெரியாது ஆகையால் நீயிங்கேயிரு நான் அவரைக்கண்டு மயிலிராவணனைக் கொல்லுகிறதற்கு தந்திரஞ்சொல்லிவருகிறேனென்று நீலமேகனை அவ்விடம் விட்டுவிட்டுப் பிரயாணமாய் வந்துபார்க்க அப்போது மயிலிராவணனும் அனுமாரும் ஒருவீட்டிலிருந்து சண்டைபண்ணுகிறதைக்கண்டு அஞ்சனேயரிடத்திற்போய் யாதொருசங்கதியுஞ் செல்லமுடியாமல் பயந்து அந்தவீட்டிலேநின்றுக் கொண்டிருந்தாள.

அப்போது ஆஞ்சனேயர் தூரதண்டி வந்ததைப்பார்த்துச் சந்தோஷமடைந்தார் அவள் எதிர்சென்று இத்தருணம் இருளடர்ந்திருக்கிறபடியால் சைகையாய் ஆஞ்சனேயரைப் பார்த்து சுவாமி அனுமாரே உட்காருமையாவென்று சொல்லி தாங்கள் ஒளித்திருந்த விடத்திலே நீலமேகனை விட்டுப்போட்டு உமதண்டைக்கு வரவேண்டுமென்று வந்தேன் என்று சொல்ல அப்போது ஆஞ்சனேயர் தூரதண்டியைப்பார்த்து வாரும்பெண்ணே தூரதண்டி என்னவென்று சொல்லுவேன் அந்த மயிலிராவணனுடனே பலபல யுத்தம்பண்ணி சித்திரவதைபண்ணினுலும மறுபடியும எழுந்திருந்து சண்டைக்கு வருகிருன் இவ்வண்ணம செத்துப்பிழைப்பது இவ்வுலகிலுண்டோ ஆ-இதென்ன ஆச்சரியம் அவனுடைய விர்த்தாந்தமென்ன அவனுடைய பெலாபெலாந்தானென்ன நீயாதாகிலும் அறிவாயா நீ அறிந்தாயானல் தெரிந்தவரையிற் சொல்லென்று கேட்க தூரதண்டி ஆஞ்சனேயரைப் பார்த்து சொல்லுகிருள் வாரும் வானர சிகாமணியே யான்தெரிந்தவரையிற் சொல்லுகிறேன் கேளும்முற்காலத்திலே நானும் என்கணவனும் சுகமாய் வாழ்ந்திருக்குங் காலத்தில் ஒருகாரியார்த்தமாய் எங்கள்வீட்டில் விருந்துண்ண வந்தான் அவனுக்கும் சகல பிரஜைகளுக்கும் சட்சுவையோடு அன்னம் பாலிக்க சகலரும்

போசனமுண்டு கைகால்சுத்திசெய்து தாம்பூலந்தரித்துக்கொண்டு சந்
தோஷமா யிருக்குந்தருணத்தில் மயிலிராவணன் தனதுவுயிர்நிலையிரு
க்கப்பட்டஸ்தானத்தை கபடில்லாமற்சொன்னான் அந்தவிவரம்யாதெ
ன்றுகேட்பீராகில் யான்சொல்லுகிறேன் கேளும் மயிலிராவணனே
வென்றால் அநேகதவங்கள்செய்து சகலமான வரங்களும் பெற்றது
மன்றி மறுபடியும் பிரமதேவரைநோக்கி அநேககாலம் தவம்பண்
ணினான்.

அந்ததவமானது சத்தியலோகத்தைத் தணலாயெரிக்க அப்
போது பிரமா சரஸ்வதிசமேதராய் மயிலிராவணன் அருகில் வந்து
உன் தபசை நிறுத்து உனக்குவேண்டும் வரத்தைக்கேள் என்று ஆக்
கியாபிக்க மயிலிராவணனானவன் பிரமாவைப் பார்த்துச் சொல்லுகி
றான் வாரும்பிர்மாவே வரங்கொடுப்பது மெய்யானால் சொல்லுகிறே
னகேளும் நீர் எனக்கு சகல அஸ்திரங்களும் கொடுத்திருக்கிறீர் இ
னிமேலெனக்கு யமதொன்றுந்தேவையில்லை நீர்கொடுத்த அஸ்திரத்தினா
லே யானயுத்தஞ்செய்து ஜெயத்தையடைவேன் அந்த அஸ்திரம் வி
யர்த்தமானால் என்னைவெட்டிப் பிளந்தாலும் என்னுயிர் என்னைவிட்டு
நீங்காமலும் வெட்டப்பட்டு துணுக்கை துணுக்கையானாலும் மறுபடி
யும் ஒன்றோடொன்று சரீரத்தோடுசேர்ந்து உயிராகவேண்டும் எப்
போதும் சண்டைக்கிளையாமல் வெற்றியைக்கொடுக்கவேண்டும் அவ்
வண்ணமாய் வரங்கொடுத்தால் மகாவுத்தமம் அப்படிக்கொடுப்பீரானா
ல் உம்முடையகீர்த்தியானது உலகெங்கும் பிரகாசித்திருக்குமென்று
பிரலாபித்துச்சொல்ல பிர்மாவானவர் பார்த்துச் சொல்லுகிறார் வாரு
மயிலனாய் இலங்கைமன்னா நீகேலங்காது சொன்னாய் இவ்வரத்தைக்
கேட்டாயே உயிர்போய்விட்டால் பஞ்சபிராணன் இருந்தாலல்லவோ
சீவன்வரும் என்ன அப்போ மயிலிராவணனானவன் சொல்லுகிறான்
வாரும் வரங்கொடுக்கும்பிர்மாவே பஞ்சபூதமிருந்தாலொழிய சீவன்
வராதென்றீரே யான்சொல்லுகிறேன்கேளும் என்னுடைய பஞ்ச
பூதம் ஐந்துவண்டா யுருக்கொண்டு என்னுடைய பாதாளலங்கையி
லே மூவாயிரம்யோசனைக்கப்பால் விந்தியாசல ர்வதமொன்றிருக்கி
றது அப்பர்வதத்தில் ஐந்துகுகையிருக்கின்றது அந்த ஐந்துகுகை
யிலும் என்னுடைய பஞ்சபூதங்கள் ஐந்துவண்டா யுருக்கொண்டிரு
க்கவேண்டும் இவ்வண்ணமாய் வரங்கொடுமென்று சொல்ல பிர்மா
யோசனைபண்ணி இவனுக்கு இப்படி வரங்கொடுத்தால் உலகமெல்
லாம் அதம்பண்ணுவான் யாவரையும் தன்மனதிலே தன்பாததூளி

பென்றெண்ணுவான் என்று மனதிலுத்தேசித்து மயிலிராவணனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

வாரும்பிள்ளாய் மயிலிராவணா உன் இஷ்டப்படி வரங்கொடுத்தேனே யாராகிலும் உன்மேலெதிர்த்து யுத்தஞ்செய்து உன்னைமிதித்துக்கொண்டு அந்த வித்தியாசலபர்வதத்தி லிருக்கிறவண்டுகளையுநசுக்கி கசக்கிக்கொன்றுவிட்டால் அப்போது உன்சீவன் போய்விடுமென்றுகூற மயிலிராவணன் பிரமாவைப்பார்த்து சொல்லுகிறான் வாரும்பிரம் சிருஷ்டியே அவ்வண்ணம் என்னையும் அடித்து மிதித்துக்கொண்டு அந்த வித்தியாசலபர்வதத்திலிருக்கிற வண்டுகளைத்தையுங்கொன்றால் அப்போது என்சீவன்போகும் அதிலே ஒருவண்டு தப்பிப்போனாலதான் சாகக்கூடாதில்லையென்று வரங்கொடுமென்றுசொல்ல பிரமாவானவர் அவன்கோரியவாறே வரங்கொடுத்து சத்தியலோகத்துக்குப் போனாரென்று, ஆனையிடத்திலாய எனக்கணவனுகிய கலைலெத்தனித்திலும் சந்தோஷத்துடனே சொல்லியிருந்தான் ஆகையால் ஆஞ்சனேயரே அவனுக்கு இத்தனைகாலமும் அதங்காரமிபுசபலங்களும் உண்டாயின அவனுடைய விர்த்தாந்தம் இப்படிப்பட்டது அவனை எவ்விதமாய் சங்காரஞ்செய்யவேண்டுமோ அவ்விதமாய் சங்காரம்பண்ணும்பிள்ளாயென்றுசொல்ல ஆஞ்சனேயர் ஆ இவ்வளவு கஷ்டமாயிருக்குதென்று மனதிலே யோசனை செய்துகொண்டு உடனே அதிகவேகமாய் அவ்விடத்திலிருந்து ரணக்களம்வந்து குதித்தார்.

அப்போது மயிலிராவணன் ஆஞ்சனேயரைப் பார்த்து அடா வாடாவானரா நீயெங்கேபோனாய் நானுன்னைக்கிடுவேனோ யமபுரத்துக்கனுப்புவேன் நீகெட்டியாய்நம்பு இதுபரியந்தம் எங்கே ஒளித்திருந்தாய் என்னுயிர்போக்க உன்னாலாமோ இதோபார் நானொருமாயைபண்ணுகிறேன் உன்கண்ணுக்குப் புலப்படாமலிருக்கிறேன் என்னுடைய மாயையைப்பாரடா வல்லவனென்று ஆண்மைகூறி அக்கணமே கண்கட்டு மந்திரஞ்செய்து ஆஞ்சனேயர் கண்ணைக்கட்ட அவர் அவனுக்குத் தெரியாமல்நின்று அநேகஞ்சேஷ்டைகள்சொல்ல ஆஞ்சனேயர் மயிலிராவணனைப்பார்த்து அடா திருடா வாடா இரு சதப்பதரே இப்படிப்பட்டமாயை யடைந்திருக்கிறாய் முன்பு இந்திரசித்தென்பவன் அநேகவிதமாயைகளைச்செய்தான் அவன் எவ்வாறுபோனான் அவ்வாறு உன்னைநான் அதம்பண்ணுகிறேன் உன்மாயைவிட்டு என்முன்னே நில்லடா என்கேள்விக்கு உத்தரவுசொல்லடாவென்று ஆஞ்சனேயர் மயிலிராவணனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

வாடா இராக்ஷச அதமா இவ்வுலகில் உனக்குச்சமமோ உன்விர்த்
தாந்தம் யாவுமறிந்தேன் உன்மாயையுந் தெரிந்தேன் உன்னையுமென்
வாளுக்கிப்பலிகொடுக்கிறேன் மாயைசெய்யாதே என்னைநீயேமாற்றாதே
என்முன்னில்லடா என்னை சண்டையிலெவல்லடா எங்கேடுப்போ
கிறாய் மகாப் பாவியான நிசைசண்டராவணன் சீதாதேவியைத் திரு
டிக்கொண்டுவந்தான் அதற்கிருகை ஸ்ரீராமமூர்த்தியோதன் த்தி
ரூமே நீலமேகச்சியாம சூரியவம்சத்திற்கு அசம்பன்னைப் போகிறார்
நீயுமத்திருடனோடு திருடனுங் கட்டுண்டு ஸ்ரீராமலக்ஷமணரைக் கொ
ண்டுவந்து திருட்டுத்தனமாய்வைத்த வுன்னைநான் வேசாகஞ்செய்கிறதி
ல்லை நீயென்னசெய்வாய் அஷ்டமத்தச்சனியன் புட்டத்துனிக்கையுமா
மியும் என்பதுபோலவே அதற்கென்னசெய்வார்கள் ஆகாயவாணி
வாக்குகப்புமோ உனதுசெய்கை யாதுக்குவெப்பமோ சூரியவுதயாதயு
க்குள் உன்மாதாளவிலன்கையை கிலிமேகத்துக்குப்பட்டங்கட்டுகிறேன்
உன்சிலுனை இக்கணமே எமபுரத்திற்கு அனுப்புகிறேன் உன்கீர்த்த
ந்தம் உன்மாயாபலவற்றையும் கணைவிட்டுவென்று பிரதிக்கினைகூறி
மயில்ராவணனைப்பிடிக்க பிரதட்சணம் அப்பிரதட்சணமாய்ச்சுற்றிச்சுற்
றி வெருபார்த்திருக்கிறபோது மயில்ராவணன் கேட்டுவிட்டு இந்தவச
னங்களைக்கேட்டு இவ்வண்ணம் இவனை அதிகமுசொன்னது நூரக்கை
யால் அதிக்கிருக்கவேண்டும் இல்லாவிட்டால் இவனுயபத்திரனவி
யுள்ளவனுஞ்சேவனுமல்ல யோசனைசெய்துபயந்து இனிமேல் நாம் இவன்
கையில் அகப்படப்போகாமல் அகப்பட்டால் இவன் நம்முயிரைமடித்
துவிடுவான் ஆகையால் எவ்விதத்திலும் தப்பித்துக்கொண்டு ஓடிப்
போகவேண்டுமென்று நினைத்து சமயம் பார்த்துக்கொண்டேயிருந்
தான் அந்தச்சமயத்தில் ஆஞ்சநேயர் மயில்ராவணனைக்கட்டிப் பிடி
த்து பூமியிலே அறைந்து கொல்லுவோமென்று யோசனைபண்ணி ஸ்ரீராம
மூர்த்தியைநினைத்து அதிககோபத்துடனே இனிமேல் நாம் தாமதம்
செய்யக்கூடாது தாமதஞ்செய்தால் இந்தப்பாதகன் ஓடிப்போவான்
இப்போது இருபத்திநான்குநாழிகை யாச்சுதென்றறிந்துஉடனே அ
வ்விருந்தபடியே ஆகாயத்திலெழும்பி மயில்ராவணனுடைய தேரின்
மீதுகுதித்தார் அவன் திடுக்கிட்டுப்பயந்து நடுநடுங்கி இனிமேல் இங்கே
நிற்கக்கூடாதென்று அந்தரத்தியானமாய் ஒருவர்கண்ணுக்குந் தெரி
யாமல்மாயையாய் மறைந்தோடிப்போனான் அப்போது அனுமாரே
றிநின்று கீழேநின்றுப்பார்த்துமயில்ராவணனைக்காணாமல் அவனெ
ங்குஓடிப்போனானோ என்னமாயை செய்தானோ எங்குஒளித்தானோ
தெரியவில்லையென்று நான்குமூலையும் சுத்திப்பார்த்து எங்குங்காணா
மல் விசாரப்பட்டுக்கொண்டிருக்கும்போது மயில்ராவணன் அதிசீக்

ராமாய் அனுமார்வந்துவிடுவாரோ வந்தால்பிடித்துக்கொள்ளுவாரோ வென்று மனதில்திகிலடைந்து திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டு ஓடிப்போய் சங்கக்கோட்டைக்கும் முத்துக்கோட்டைக்கும் நடுவில் ஒருஉத்தியானவனமிருக்கின்றது அந்த உத்தியானவனத்தோப்பில் ஆலவிருட்சம் பிரமாண்டமாய்வளர்ந்து கொம்புங்கிளையுமாய்தழைத்திருக்கிறது அந்தமரத்தின்கீழ் ஒருவழிபோகின்றது அவ்வழிசென்றால் அங்கேபாதாளத்தில் ஒருவெளியிருக்கின்றது அந்தவெளியே போய் பதுங்கியிருந்தான்.

அப்போது ராட்சசப்பிராமணாள் யாவரும் மயிலிராவணன் ஓடிப்போனதைப்பார்த்து ஆலமரத்தின்கீழே வீரணயாகம்பண்ணப் போனவன்போலே காண்கின்றது ஆகையால் நாமும்போகவேண்டுமென்று அதிசீக்கிரமாக மாயாசொரூபமெடுத்து ஒருவர் கண்ணுக்குத்தெரியாமல் யாகத்துக்குவேண்டியதைகொண்டுவந்து யாகசாலையை முஸ்திபு செய்து ஒன்பதுகோணமாய் ஓமகுண்டம்வெட்டி மயிலிராவணன் உட்கார்ந்திருந்து ஆர்த்திபண்ணுகிறதற்கு முக்கோணமாய் மேடைபோட்டு சுடலைக்குப்போய் நெருப்பெடுத்துவந்து தலைமண்டையோட்டில் எருமைக்கடாவின் இரத்தத்தைச்சொரிந்து ஓமகுண்டத்தைச்சுற்றிலும் அந்தத்தலையோட்டைவிட்டு எருமைக்கிடாவின் எலும்புகளினாலேஓமகுண்டத்துக்கு நான்குபக்கத்திலும் தர்ப்பாசனம்போட்டாற்போல் அஸ்திகளைப்பரப்பி பனைமரங்கொண்டுவந்து துவஜஸ்தம்பம்நாட்டி அதில் ஒருசர்ப்பத்தைக்கட்டினார்கள் பின்னும் ஒருசர்ப்பத்தைக்கொண்டுவந்து ஓமகுண்டத்தினடுவில் உயரமாய்த்தலைகீழாகக்கட்டி அக்கினிச்சுவாலையெழுப்பி அந்ததிரிகோணமேடையில் ஒருதலைமண்டையோடு கவிழ்த்து அவ்வோட்டின்பேரில்மயிலிராவணன் தனதுவலதுகாலையூன்றி இடதுகாலைக் கழுத்தில்மாட்டி இரத்தசந்தனம் பூசிக்கொண்டு உதிரநிறமான புஷ்பமாலைகளை கழுத்திலும் சிரசிலும் தரித்துக்கொண்டு இரத்தவஸ்திரம் உடுத்திக்கொண்டு இடக்கரத்தில் செபமாலையேந்திவலக்கரத்தினால் அக்கினி யாகுதிமுதலான நவதானியசமுத்துக்களை ஆவானம்பண்ணி அந்தயூபஸ்தம்பத்திலே கட்டியிருக்கப்பட்ட சர்ப்பத்தைத அறுத்து நெய்யிற்றோய்த்து பூர்ணாகுதிகொடுத்தான் கொடுத்தவுடனே அந்தஅக்கினிகுண்டத்திலிருந்து பிரமாண்டமாய் ஒருபூதம்புறப்பட்டு மயிலிராவணனைப்பார்த்துச் சொல்லுகின்றது.

வாரும்ஐயா பாதாளலங்கை காவலனாகிய மயிலிராவணா என்னை யாதுகாரியமாய் இந்தயாகஞ்செய்து அழைப்பித்தீர் அந்தக் கா

ரியக்கைச்சொல்லும் நான்செயித்துவருகிறே னென்றுகூறகூப்போ
து மயில்ராவணன் அப்பூதத்தைப் பார்த்து ஓபூதமே எனசத்துருவா
கிய ஆஞ்சனேயரைச் சங்காரஞ்செய்துவருவாயென்ன அப்பூதம்பிர
ளயகாலருத்திரனைப்போற் கர்ச்சித்து மயில்ராவணனைப்பார்த்து மகா
வல்லமையுள்ள பாதாளலங்கைக்கரசே நீர்கூறியவாறே ஆஞ்சனே
யரை அதம்பண்ணிவருகிறேன் அவனெப்படிப்பட்டவனோ அடங்
காமன்னனோ யாதோதெரியாது சகலத்துக்கும் நீரேதனை இங்கவே
ள்ளை விடாமல்செய்துகொண்டுவா நான் சீக்கிரமாகப்போய் செயி
த்துவருகிறேன் நீர்யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாமென்று உறு
திப்படகூறினபின்பு அந்தயாகசாலையைவிட்டு இரணபூமியில்வந்து
ஆஞ்சனேயரிருக்கிறதைக்கண்டு சமீபத்தில்வருவதை அனுமார் பார்
த்து பிரமித்து இதென்னடாவென்று அதிககோபத்துடனே எழுந்தி
ருந்து அந்தப் பிரளயகாலபூதத்தைப்பார்த்துச் சொல்லுகிறார் வாடா
ராட்சசமாயா நீயென்னமாயையாய்வந்தாலும் நான்பயப்படுவேனோ
வென்று அதிககோபத்துடனே ஐந்துவிரலையு முஷ்டியாகப்பிடித்து
பூதத்தைக்குத்தவரும்போது அந்தப்பிரளயகாலாக்கினி பூதமானது
ஆவென்றுவாயைத்திறந்து கூவென்று அட்டகாசஞ்செய்து வாயிலி
ருந்து அக்கினிஜ்வாலையானது குபீர்குபீரென்று புறப்படடந்து ஆ
ஞ்சனேயனென்பவர்நீதானோ உன்னையிப்போதே பஸ்மீகரமாகஎரித்து
ப்போடுகிறேனென்று ஆஞ்சனேயருக்கெதிரில்நின்று ஆவென்று வா
யைத்திறந்து இருந்தவுடனே அவர்பேரில்அக்கினிச்சுவாலை சூழ்ந்து
பற்றிக்கொண்டெறிய அவர் அக்கினிக்கு பயந்துநடுங்கி ஒடுங்கி மூர்
ச்சையடைந்து சோபந்தெளிந்து ஆ இதென்னகாரணமென்று ஆச்சு
ரியப்பட்டு கோபத்துடனே அந்த பூதத்தின்மார்பில் ஒருகுத்துவிட்
டார் அக்குத்தினால் பிரளயகாலபூதமானது மார்புபிளந்து மூர்ச்சை
யாய்பூமியில்விழுந்து எழுந்துகோபமீறி ஆஞ்சனேயரைப்பார்த்து சமீ
பத்தில் ஓடிவந்து நாலுதிசைமெண்டிசைவிடாமல் அக்கினிச்சுவாலை
யாய் சொலிக்கும்படியூத அப்போதவருக்கு தேகமெல்லாம அனலா
ய்ப்பற்றியெறிய கொதவிடமெல்லாம் துடைக்கத் துடைக்க எரிச்சல்
மாறாமல் வேதனையாயிருந்தது அப்போது அனுமார் வருத்தமடைந்
து சீதாதேவியையும் ஸ்ரீராமலட்சுமணரையும் நினைத்து பலவாறுய்த்
தொழுது கண்ணீர்விட்டழுததுமன்றி அக்கினிபகவானை நினைத்து உ
னனிமித்தமல்லவா இராவணசம்மாரம் பண்ணுகிறேனை சகல தேவ
ர்களுக்கும் நீர் உபகாரார்த்தமாய் வந்தவரல்லவா அப்படியிருக்க
நீரென்னை யெப்படித்தகிக்கலாம் நீர் அப்படிசெய்வது உமக்குதர்மமா
வென்று தோத்திரஞ்செய்தார்.

உடனே அக்கினிபகவான் சில்லென்றுதணிந்திருந்தார் அப்போ
து ஆஞ்சனேயருக்குக் கோபம்பிறந்து ஆயுதமுஷ்டிகளாலே பூதத்தை
க்குத்தினார் அந்தக்குத்தினாலே பூதமானது மூர்ச்சையடைந்திருக்க
அச்சமயம் ஆஞ்சனேயர் ஸ்தூலசரீரத்துடனே அவ்விடம்விட்டு அப்

பாலேலிக்கப்போய் அடங்கிக்கொண்டு தாமரைக்கரையருகில்வந்து குதித்து அவளைப்பார்த்து ஆஞ்சநேயர்சொல்லுகிறார் வாரும்பெண்ணேநா ரதவைநாய உன்னோடுயோசிக்கிற அடருந்து இவ்விடத்தில் இப்படி னேனே அந்நகரத்தில் மயில்ராவணன் எங்கையோ மறைவாய் மறைந்துபோய்விட்டான் அதன்பின்பு கண்டிருந்துவந்ததோ ஒருபி ளயதால தமாவது அவனைவிட்டு எங்குங்கூடிவிலையில் யுத்தஞ்செய்தேன் பகலைநாகவிட முடியவில்லை இப்பூதம் எக்காரணத்தால்வந்ததோ தவறிருக்கின்றதோ அல்ல காரணமுண்டோ மகையாவைகக்டு தலைநாள்வந்தவென்று தூரதண்டிவைத்திட்ட அப்பெண்ணு அவள் யாரென்று கேட்டதினை மிசொன்ன ஆஞ்சநேயர்சொல்லுகிறார் ஓ தாமரைவைகளை யாவசொல்லுமைகளென்று தன் கைகுங்குமசராஜ்ய ஸ்ரீ கைவலைஷ்ணுவின் ஐயமுரோதம்பயமான் ஞ்செய்து சகலபசகளை பிடுக்கிறதும் சீதாபிராட்டி மனைபுநிலைதயாயிருக்கிறதுமகன் அந்த ஸ்ரீராமசந்திரனுடைய பாதாரவிந்தங்களைச் சேவித்துக்கொண்டிருக்கிறதும் பெயரானவை இப்போதனைய வெரிததபூதத்தைக்கொல்லுமிடம் எனக்குச் சொல்லவேண்டுமென்றுசொன்னர் அப்போது தாமரைத்தைகள் பெருகிக்கி ஆகாயத்திலிருந்து ஆஞ்சநேயரைப்பார்த்துச் சொல்லுகிறார்கள் வாரும் அனுமந்தசிகாமணியே இப்போதுவந்தபூதம் மயில்ராவணனுடையபூதம் ஆனபடியால் அப்பூதத்தைச்செயிக்க முடியாது உனக்கோர்மர்மஞ் சொல்லுகிறோம்கேள் அம்தாமரைத்தொற்றப்பட்ட தங்கக்கோட்டைக்கும் வெள்ளிகோட்டைக்கும் நடுவில் ஒருதோப்பிருக்கின்றது அத்தோப்பில் ஒரு ஆலவிருட்சம் பிரமாண்டமாயிருக்கின்றது அம்மரத்தடியில் ஒருவழிபோகின்றது அதில் ஐக்குருகையிருக்கின்றது அக்குகையடிநல் ஒருயாகசாலையிருக்கின்றது அச்சாலையில அந்தமயில்ராவணனுனவன விராணயாகமென்கிற ஓர்யாகத்தை அதர்வணவேத தோத்திரமாய்ச் செய்கிறான் அந்தயாகம்பண்ணைச்சேச ஓமகுண்டத்திலிருந்து புறப்பட்டுவந்தது அவன் இன்னமும் யாகஞ்செய்துகொண்டேயிருக்கிறான் அவன்யாகத்தை முடிக்குமுன் நீர் அதிசீக்கிரத்திற்போய் விக்கினஞ்செய்தால் அப்பூதத்துக்குப் பலன் குறைந்துபோம் அப்பால் பூதஞ்சொல்லாமலேயிம் யமபுரத்தைகாணும் அவ்விடத்திலதானே சங்காரம்பண்ணவேணுமென்று சுருமதேவதைகள் கூறினார்கள்.

அதைக்கேட்டவுடனே ஆஞ்சநேயர் ஆகாயத்தில் கிளம்பி அந்தஸ்தானத்தைநோக்கி பறந்துபோகும்போது அப்பூதமானதுகோபத்துடனே ஆஞ்சநேயனைப்பார்த்து அடாகுரங்கே நீ எங்கேபோகிறாய் நில்லுநில்லென்று சொல்லிக்கொண்டு பின்தொடர்ந்து துரத்திக்கொண்டுபோக ஆஞ்சநேயர் பூதத்தைப்பார்த்து நீ கெட்டாய் கெட்டாயென்று அதிவேகமாய் ஆலமரத்தருகில் வந்து இறங்கினார்

அவ்விருட்சத்தின்கீழ் மயிலிராவணனுடைய ஆக்கினையினாலேமனித ரூபமாக இராட்சதபிரமணருள் காவலாகவும் நானாகுழுவையும்பார்த்து கொண்டு யாகஞ்செய்திருந்தவர்களை ஆஞ்சனேயர்கண்டு உடன் உட்புகுந்து இட்டிலாசற்கதவைக் கெட்டியாகத் திடசொன்று பூட்டிக் கொண்டார்கள் உடனே மாயையால் அம்மரத்தின் பட்டையானது கீழ்விழுந்து வழிதெரியவொட்டாமல் மூடிக்கொண்டது ஆஞ்சனேயர் அம்மரத்தின் சத்தத்தைக்கேட்டு சீக்கிரத்தில் ஒருவன் அவ்வழியைமூடிக்கொண்டு உள்ளே ஒளித்துக்கொண்டான் இது தர்மதேவதைகள் கூடிய ஆலமரம் ஆகையால் இம்பாதத்தை அடியோடே பிடுங்கிப் போடுவோமென்று இரண்டு கையினாலும் ஆலமரத்தைப்பிடித்து அசைத்து அசைத்துப்பிடுங்க அப்போ அந்த மாப்பிரளயகால பூதமானது மரத்தைபிடுங்கிக்கொண்டிருக்கிற ஆஞ்சனேயருடைய முதுகிலேகுத்த அவர் திரும்பிப்பார்த்து அப்பிரளயகால பூதத்தை வாலில் கட்டிக்கொண்டு பூதத்தைக்காகமென்று சுழற்றி பூமியிலே அடித்தார் அப்போது அந்தபூதமானது அந்தரத்திலாணமாய்க்குதித்து ஆகாயத்திலேபோய் அனுமாரைப்பார்த்துச்சொல்லுகிறது வாருமையா அனுமந்தா ஸ்ரீராமகாரியதுரந்தராகேளும் அந்த யாகபோவியானமயிலிராவணனாலே உம்மிடத்திற்சண்டைதொடுத்தேன் போய் வருகிறேன் சுவாமி அதோமயிலிராவணனுவன் மாயையாய் ஓடிப் போய்விட்டான் அவனைத் தேடிப்பிடித்துச் சம்மாரஞ்செய்யும் இந்த யாகத்தைவிக்கினஞ்செய்திரோ உம்மைப்போல் வல்லமையானவனை இவ்வுலகத்திலுண்டோ சுவாமி இராயமூர்த்தி தூதா நீ இந்தமயிலிராவணனைச்செயித்து கீர்த்தியடையக்கடவாயென்று பூதமானது வரங் கொடுத்துப்போய்விட்டது,

அப்போது ஆஞ்சனேயர் அந்த விசேஷத்தைக்கேட்டு கொடூரமான மயிலிராவணனை எங்கும்பாருமென்று திரும்பிப்பார்த்தார் மயிலிராவணன் சுறுசுறுவிருக்க அதிகோபங்கொண்டு அடா திருடா நீ எங்கேபோனாலும் நான் உன்னைப்பிடிப்பேனென்று பராக்கிரமங்கூறி ஆகாயவாணி பூமிதேவி இவ்விருவர் சாட்சியாக அருணோதயத்துக்குமுன்னே அந்த அரக்கனாகிய மயிலிராவணனைக்கொல்லாமற்போனால் இப்பாதாளலங்கைப் பட்டணத்திலே நான் அக்கினிப்பிரவேசமாகக்கடவேனென்று சபதங்கூறி அங்கிருந்த அஞ்சனேயர் வெளியே புறப்பட்டு பாதாளலங்கைப்பட்டணம் நாலுதெருவாசக்கதே எங்குமொலியில் ஒளித்திருக்கிறானோவென்று காகுத்தேடிக்கொண்டிருக்க அந்தக்ஷணத்தில் மயிலிராவணன் ஆஞ்சநேயர் கண்ணுக்குப் புலப்படாமல் அவர்சொன்ன விசேஷங்களையெல்லாங்கேட்டுப் பயமுற்று நடுநடுங்கி காமகலங்கிபோய் பிழைப்போம் அவன்கைமை விடுவதாகத் தோற்றவில்லையென்று யோசனைசெய்து முத்துக்கோட்டைக்கு வடபுறத்திலே ஒருவெளியான விடத்தைப்பார்த்து அவ்விடத்திலேபோய் தன்னுடைய மாயையினாலே தனதுசரீரத்தை ஒரு வெள்ளியமலையாக்கி அந்தவெள்ளிமலையிலசிலவிருட்சசாதிகளும் உண்டாய்

களும் மாடமாளிகை கூடகோபுரங்களுமாக் கொடிமுடியோடேவெள்ளியங்கிரிக்குச் சமானமாய்விழுந்துகிடந்தான்.

அப்போது அநுமாரானவர் மயங்கித்தியங்கி இலங்கைப்பட்டணத்துள் நானாவு தெருவிலுக்தேடி மயிலிராவணனைக்காணுமல் தூரதண்டியண்டையில்வந்து வாராய்பெண்ணே தூரதண்டி அந்த பூதத்தையும் மயிலிராவணனுடைய சக்கியத்தையும் விக்கினஞ்செய்து அவனைத்தேடிப்பார்க்கையில் எங்கையோ மறைந்துபோய்விட்டது அவன் எங்கிருக்கிறானோ அவனிருக்குமிடமுனக்குத் தெரிந்திருக்குமாவென்று தூரதண்டியைக்கேட்க அவள் அநுமாரைப்பார்த்துச் சொல்லுகிறாள் வாரும் சுவாமி ஆஞ்சனேயசிகாமணி அந்த மயிலிராவணனுடைய மாயை உம்மாலறியக்கூடுமோ யாவராலும் அறியக்கூடாதே அப்படியிருக்க அவன்மாயையை என்னாலறியவல்லமையுண்டோ அவன் சுவரூபினுனோ என்னென்னரூபம் எடுத்திருக்கிறுனோ ஆனால் சொல்லுகிறேன் கேளும் ஐயாவே அவன்எங்கேயாகிலும் மாயாசொரூபமாயாவது செடியாவது மரங்களாயாவது பிரமிக்கும்படி யுற்பத்தியாகிப் புதிதாய்த் தோனறச்செய்வானென்று சொல்ல அநுமார் கேட்டு தூரதண்டியைப்பார்த்து சொல்லுகிறார் கேளும்பெண்ணே தூரதண்டி புதியதும் பழையதும் உனக்குத்தெரியுமல்லவா நான்முன்னே போகிறேன் நீயென்பின்னால்வா எனக்குத்தெரியும் தெரியாமைக்கும் நீ துணைகோலாயிருவென்று ஆக்கியாபிக்க தூரதண்டியானவள் நல்லதென்று சம்மதித்து அவருடன் புறப்பட்டு இலங்கைப்பட்டணம் நானாவிதெருவீதியும் தேடிக்கோட்டைகள் முற்றும்ஓடி ஒரிடத்திலுங்காணுமல் மனதுவாடிமுத்துக் கோட்டைச்சமீபமாகநீடிவராச்சே அங்ஙனம் வெள்ளியங்கிரியைக் கண்டு ஆஞ்சனேயர் இது முன்னிருந்ததோ யில்லையோவென்று சந்தேகப்பட்டு அப்பால் நடக்கிறபோது தூரதண்டியானவள் அந்த வெள்ளியங்கிரியைப்பார்த்து இது புதிதாயிருக்கின்றது மயிலிராவணனுடைய மாயையோவென்று மனதில் ஐயுற்று ஆஞ்சனேயர் அண்டையிலேயோடி அவருக்குச்சூக்ஷமாய் வெள்ளிமலையைக்காட்டி இதுபுதிதாயிருக்கிறதென்று சொல்லவே அவள்வாக்கைக்கொண்டு ஆஞ்சனேயர் ஐந்துவிரலையுமடக்கி மகாகோபத்துடனே அந்தவெள்ளியங்கிரியை நோக்கி தாக்கிக்குத்த அக்குத்தானது பலிதப்பட்டு சுக்கல் சுக்கலாய்த்தெறித்து படிசூரணமாய்ப்போக அந்த மயிலிராவணனானவன் உடனே வெள்ளியங்கிரியிலிருந்து கிணறுவெட்டப் பூதம்புறப்பட்டதுபோல் வெளியிற்புறப்பட்டு அநுமானைப்பார்த்து புன்னகைகொண்டு சொல்லுகிறான் அடாவாடா அநுமந்தனுயா அமரர்கள்நேயா என்னுடைய மாயையினாலே சுற்றியிழுத்துக் கட்டிக்கொண்டு மரத்தை வேரோடேபிடுங்கி அப்பாலெறிய அங்ஙனம் கைதோன்றி பாதாளமாகப்போக அந்தப்பாதாளவழியாக ஆஞ்சனேயர் பூதத்தையும் மயிலிராவணன் ஓமம் பண்ணிக் கொண்டிருக்கிறதைக்கண்டு ஐந்துவிரலையுமடக்கி நோக்கிக்குத்தினார் அதனால் மயிலிராவணன் மூர்ச்சையாய் கீழே விழுந்தா

ன்பு ஆஞ்சநேயா அங்கிருந்த ஓமபாத்திரங்களை யெல்லாம் அதமாக்
கி உடைத்து யாககுண்டத்தையிடித்து விக்கினஞ்செய்ய மயிலிராவ
ணன் மூர்ச்சைதெளிந்து அனுமானித்து கிடுகிடுவென்றுநடுங்க நாம்
தப்பிப்போகவேண்டுமென்று மாயையாயோடிப்போனான். அப்போ
து ஆஞ்சநேயர் யாகசாலையாகவும் அதஞ்செய்து தன்வாலில்கட்ட
சநேயென்று அவன்கண்ணுக்குப்புலப்படாமல் அந்தரத்தியானமாய்
ஓடிப்போனான் அஞ்சநேயர் மயிலிராவணன் மாயையாய்ப்போனதை
ப்பார்த்து அடடா இவன்திருடன் இவனைக்கண்டவுடன் பிடியாமற்
போனேனே இன்னம் என்னமாயைசெய்வானோ எவ்விதமாய்க் கண்
டுபிடிப்பேன் என்று அங்கலாய்த்து மறுபடியும் இலங்கைப்பட்டண
ம்வந்து நாநாறுதெருக்களிலும்தேடி எங்குங்காணாமல் நடுத்தெருவி
ல் நடந்து தேடிக்கொண்டுபோகிறபோது மயிலிராவணனானவன் தன்
னுடைய உத்தியாவனத்திற்குப்போய் உட்கார்ந்துக்கொண்டு மகாவி
சாரத்துடனே இனிமேல் என்னசெய்யப் போகிறோமென்று துக்கா
க்கிராந்தனாய் வெளியேபுறப்பட்டு நாம் அனுமாருடன் சண்டைசெய்
வதாமென்றால் நம்மால்முடியாது மாயையாயிருப்போமென்றால் நம்
முடைய மாயைக்கு உட்படுகிறவனல்ல நாம் இங்கிருந்தால் எவ்வித
த்திலும் நம்மைக்கண்டுபிடித்து நம்முயிரை மடித்துப்போடுவான் ஆ
கையால் நாம்இப்போதே திசைகண்ட ராவணனிடத்திற்போய் இவ்
விடத்தில் நடந்த சமாச்சாரமெல்லாம் ஆதியோடந்தமாகத் தெரிய
ப்படுத்தி அவனையழைத்துக்கொண்டுவந்து சண்டைக்கேவினால் நல
மாயிருக்கும் இல்லாவிட்டால் நாமிப்படி ஒளித்திருப்போமானால் எவ்
விடத்திலுங் கண்டுபிடித்து யமபதிசேரும்படி முடிப்பதற்கோர் சந்
தேகமில்லை பொழுதுவிடியுந்தருணமாயிற்று அனுமான் அக்கினிப்
பிரவேசமாவான் அதற்கப்பால் எப்போதும்போலே இலங்கைப்பட்
டணத்திலே திசைகண்டராவணன் சுகமேயிருப்பான் நாமும் சுகமா
ய்ப் பாதாளவிலங்கையைப் பரிபாலனம்செய்துக்கொண்டிருப்போமெ
ன்று யோசனைசெய்து திடீரென்றுபுறப்பட்டு திசைகண்டராவண
னை அழைத்துவருவோமென்று அதிசீக்கிரமாய் மாயரூபமெடுத்து
ஒருவர்கண்ணுக்கும் புலப்படாமல் தாமரைக்குளத்தில் நூல்வழியை
ப்பார்த்து தாமரையடைபட்டாற்போ லடைத்துக்கிடக்க அப்போது
மயிலிராவணன் தாமரைநூற்றண்டுவழியைத் தட்டிமுட்டிபிடித்துப்
பிடித்து நோக்கிருத்தினான் அவன் என்னசெய்தபோதிலும் வழிவி
பெடாமல் அடைபட்டிருக்கப்பார்த்து ஆனால் நான்வரச்சே தந்தசக்
கிரகமலத்திலேயிருக்கிற ஆயிரங்கோடி ராக்ஷதர்களையும் பத்திரமா

யிருமென்று சொல்லிவந்தோம் அவர்கள்தான் இப்படி காவலுடன் பத்திரமா படைத்துக்கொண்டிருக்கிறார்களோ யாதோதெரியவில்லையென்று மனதிலுத்தேசித்து ராட்சதாள் பேர்சொல்லி அடாராட்சதா அடாகடகரோமா அடாசம்புமாலி என்று அவரவர்கள் நாமதேயத்தைச்சொல்லிக்கூப்பிட அப்போது வாயுதேவன் மயிலிராவணன் கூப்பிடுகிறானென்றறிந்து நீஆரடாவென்றுகேட்க அப்போது மயிலிராவணன்கேட்டு ஆரடா அங்ஙனம்பேசுகிறது குரல்வேறாயிருக்கின்றது அங்கே ஆயிரங்கோடி இராட்சதாளிருந்தார்களே அவர்கள் இருக்கிறார்களா உன்பேச்சிக்குரல் வேறாயிருக்கின்றது உன்பேரென்னவென்றுகேட்க அப்போவாயுபகவான்கேட்டு ஆரடா இங்ஙனம் வந்து கூப்பிடுவதென்றுகூற மயிலிராவணன்கேட்டு நான்தான்பாதாளஇலங்கைக்காரசன் இவ்விடம் ஆரிருக்கின்றது வழிவிடடாவென்று சொல்ல வாயுபகவான் மயிலிராவணனைப்பார்த்து அடா இலங்கைமன்னா நீதானாகூப்பிடுவது நான்தான் வாயுபகவான் அனுமார்கட்டளைப்படிக்கு நானிங்குவழிகாத்திருக்கிறேன் யாவரையும் விடப்போகாதென்றுசொல்ல மயிலிராவணன் வாயுபகவானைப்பார்த்துச் சொல்லுகிறான் ஓ வாயுபகவானே உன்குமாரனும்நானும் அநேகதரம் சண்டைபண்ணினோம் அப்போது அனுமாருக்குக் கோபம்வந்து பலபல விதமாய் தாறுமாறாயடித்து அதம்பண்ணவந்தார் அப்போது நான் என்னுடையமாயையினாலே அவனென்னசெய்தபோதிலும் அதற்கு அஞ்சாமல் அவனும் என்பேரில் சண்டைமிஞ்சாமல் ஆச்சரியமாய தப்பித்துக்கொண்டேன் ஆகையால் ஆஞ்சநேயர் மகாவல்லமைசாலியென்று நான்வெகுவாய் மெச்சிக்கொண்டேன் உனை அவரும்மெச்சிக்கொண்டார் நாங்கள் ஒருவருக்கொருவர் சந்தோஷப்பட்டு உன்னுடையகுமாரனுக்கு பாதாளஇலங்கைப் பட்டங்கட்டிவைததென்னானவெளியேபோகவேண்டும் எனக்கு நீவழிவிடும்பிள்ளாயென்றுசொல்ல வாயுபகவான்கேட்டு தனக்குள்ளேயோசனைசெய்து மனதுணிந்து சகலமுமறிந்துகொண்டு மயிலிராவணனைப்பார்த்து புன்சிரிப்புக்கொண்டு அடாராக்ஷதப்பயலே நானுன்னுடைய மாயைக்கு அகப்படுவேனோ ஆஞ்சநேயர் உத்தரவில்லாமல் உம்மைப் போகவிடுவேனோ பயித்தியக்காரா போபோவென்று பலவாறுசொல்ல மயிலிராவணன் வாயு பகவானைப்பார்த்து நீவழிவிடுகிறையோ இல்லையோ நான்வேறே வழிபண்ணிக்கொண்டு போவேனென்றுசொல்ல அப்போது வாயுபகவான் யோசனைசெய்து இந்தமயிலிராவணன் மாயாவினாலேதிவேறேவழிபண்ணிக்கொண்டு போனாலும்போவான் நமக்கு இந்த வில்

லங்கம்வேண்டாம் முன்னமே ஆஞ்சநேயரானவர் நம்மோடு சொல்
லிப்போனாரே யாராகிலும் பலவந்தம்பண்ணினால் என்னை நீலையென்
றுசொன்னாரே ஆகையால் அனுமாரை அழைப்பிப்போமென்று மன
தில் நினைத்துக்கொண்டு மயிலிராவணனைப்பார்த்துச் சொல்லுகிறான்
அடாவிகடராட்சசப்பயலே நான்வழிவிடவுத்தரவில்லை நீஅவருக்குப்
பட்டங்கட்டிவைத்தேனென்றும் உன்னைவெளியிலே போகச்சொன்
னாரென்றுஞ்சொன்னாயே அதுமெய்யானால் நீ அந்தஅனுமாரையழை
த்துவந்து எனக்குச்சொல்வாயானால் அதன்பிறகு உனக்கு நான்வழி
விடுவேன் அழைக்காவிட்டால் இப்போதே அந்த அனுமாரைநானே
அழைப்பிக்கிறேனென்று பிரதிக்கினைகூறி ஆஞ்சநேயரை நினைத்து
ஓ-இராமகாரியதுரந்தரா அனுமந்தா வாருமையா மயிலிராவணன்வந்
து என்னைவழிவிடச்சொல்லுகிறான் வாரும்வாருமென்று ஆஞ்சநே
யரைக்கூப்பிடும்போது அவர் இலங்கைபட்டணம் நாநூறுதெருக்களு
ந்தேடி எங்கிலுங்காணாமல் விசாரத்துடனே முத்துக்கோட்டைமே
லேறி நான்குமூலையும் ஆராய்ந்துபார்த்து கண்ணுக்குப்புலப்படாமல்
அங்ஙனம் உட்கார்ந்துக்கொண்டு தலைமேல் கையைவைத்து விசாரப்
பட்டுக்கொண்டிருக்கிறவேளையிலே வாயுபகவானழைக்க ஆஞ்சநேயர்
திடுக்கென்றெழுந்திருந்து வாயுவேக மனோவேகமாயோடிவரும் போ
து மயிலிராவணன் ஆஞ்சநேயரைப்பார்த்து நடுநடுங்கி நாம் என்ன
மாயைசெய்து மறைந்துபோவோமென்று இருந்தாற்போலேயிரு
ந்து ஒருமதயானையாய் நான்குகொம்புடனே ஸ்தூலசரீரமெடுத்து அ
திவேகமாய் ஓடலுற்றான் அப்போது அனுமார் வாயுபகவான் அரு
கில்வந்து ஓவாயுபகவானே நீர்யாதுகாரியமாக என்னை அழைத்தீரெ
ன்றுகேட்க வாயுபகவான் ஆஞ்சநேயருக்குச் சொல்லுகிறார்.

வாரும் அனுமாரே இவ்விடம் மயிலிராவணன்வந்து உமக்குப்
பட்டங்கட்டி வந்தேனென்றும் தன்னைவிட்டுவிடச் சொன்னானென்
றும் இவ்விதமாய்க்கூறினான் நான் வழிவிடுகிறதில்லையென்றேன் அ
ப்போது மயிலிராவணன் என்னைப்பார்த்து நீவழிவிடாவிட்டால் நா
ன்வேறே கள்ளவழிசெய்துக்கொண்டு போவேனென்றான் நான் அவ்
வசனங்கேட்டு உம்மைநினைத்தேனென அனுமார்சொல்லுகிறார் ஐயா
வாயுபகவானே முன்னம் என்னுடைய வால்கோட்டையைப்பார்த்து
என்னை ஏமாற்றிவிட்டுப்போனான் அவனுடைய மாயை உமக்குத்தெ
ரியுமே பிரமாதிகள்வந்து வழிவிடச்சொன்னாலும் வழிவிடாதே ஜா
க்கிரதையாயிருமென்று ஆக்யாபித்து அனுமார் மயிலிராவணன் எவ்

கேஒளித்திருக்கிறானோவென்று தேடிக்கொண்டு வரும்போது ஒருமதயானை நான்குகொம்புடனே ஓடப்பார்த்து அப்போது தூரதண்டியானவள் உபாயமாய் ஒருவிரலாலே யானையை அனுமாருக்குக்காட்ட அவர் அந்தயானையை அதிவேகமாய்த் துரத்திக்கொண்டு ஓடோடியுமவந்து ஐந்துவிரலையும் முஷ்டியாகப்பிடித்து யானையினுடைய மத்தகத்தின்பேரில்குத்த அவ்வானையானது மத்தகம்பிளந்து வீறிட்டுக்கொண்டுசாக அந்தயானைக்குள்ளிருந்து மயிலிராவணன் வெளியேபுறப்பட்டு ஆஞ்சநேயரைப்பார்த்து சிரித்து வாரும் ஆஞ்சநேயரே உன்கையிலகப்படுவேனோ என்னுடைய பராக்கிரமத்தைப் பாருமென்று மாயையினால் ஒருரதத்தை சகலவாயுதங்களோடும் மகாவுன்னதமாயும் க்ஷணநேரத்துக்குள் உண்டுபண்ணி அனுமானைப் பார்த்து இலங்கைமன்னன் சொல்லுகிறான்.

அடா வானரா இதுபரியந்தம் மாயையாயிருந்தேன் இனிமேல் நான்மாயையைவிட்டு ரதாரூடனாய்வந்தேன் நான் உன்னைவிடத்தக்கதில்லை இப்போது என்னுடைய பாணப்பிரயோகவேகத்தைப்பாரும் என்று மயிலிராவணனானவன் பரப்பிரம்மசொரூபியாகிய சிவபெருமானைத்துதித்து பெரியோரைமதித்து அனேகதியென்றெண்ணி திர்க்காலோசனைபண்ணி தன்வில்லைக்குணகதொனிசெய்து நாணேறிட்டு முதுகில் கட்டியிருக்கிற அம்புப்பட்டியிற் சரத்தைவிடுத்துச் சிலசரங்களையெடுத்து மனதில்தானே தூபதீப நைவேத்தியஞ்செய்து மந்திரோபதேசத்தோடு வில்லில்தொடுத்துவிட்டான் அந்தபாணம் வானத்திலெழும்பி தேவர்கள்நடுங்க மின்னல் இடிமழையோடிகூடிய மேகங்களையும் காற்றையும் பர்வதங்களையும் இன்னுமநேகவியப்படையத்தக்க விநோதங்களையும் காண்பித்தான் பின்பு ஆஞ்சநேயர் அந்தரணக்களத்திலிருக்கிற வில்லுகளிலொன்றை யெடுத்து நாணேறிட்டு ஒருகணையையெடுத்துத் தூபதீபநைவேத்தியமுதலியவைகளைச்செய்து வில்லிற்பூட்டி மந்திரோபதேசத்தோடு தொடுத்தார் அக்கணை-௧-௰-௱-௲-௰௲-௱௲-கோடி-சதகோடி - சங்கம் - மகாசங்கம் என்னுங்கணக்கு அகப்படாத நாகங்களைப்போற்சீறி மானத்தைமூடிற்று சகலஜனங்களும் வேடிக்கைபார்க்க நாடிற்று பின்னும் ஆஞ்சநேயர் கஜாஸ்திரத்தை யெடுத்துவிடுத்தார்.

அதுகண்டு மயிலிராவணன் அக்கஜாஸ்திரத்துக்கு வயிரியாகிய கேசரியாஸ்திரத்தைவிட்டு அதனைமறுக்க ஆஞ்சநேயர் சர்ப்பாஸ்திரத்தை யெடுத்துவிடுத்தார் உடனே இலங்கைமன்னன் அதற்குவயிரியாகிய கருடாஸ்திரத்தைவிட்டுமறுக்க அனுமார் அக்கினியாஸ்தி

ரத்தையெடுத்துவிடுத்தார் அவ்வஸ்திரத்துக்கு வயிரியாகிய வருணாஸ்திரத்தைவிட்டு மறுத்தான் பின்னும் இருவாஸ்திரத்தை யெடுத்துவிட்டார் உடனே சூரியாஸ்திரத்தை விடுத்துத் தடுத்தான் மறுபடியும் அசுராஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகஞ்செய்தார் அதையும் கந்தர்வாஸ்திரத்தைவிடுத்து மறுத்தான் இதன்றி இன்னும் அநேகதேவாஸ்திரங்களை விடுத்தார் அவைகளையும் பாவியாகிய மயிலிராவணன் முறைமுறையே கண்டித்துவந்தான் இதனைக்கண்ட தேவர்கள்யாவர்களும் மகிழ்ந்தார்கள் ஆஞ்சநேயரைப் பலவாறு புகழ்ந்தார்கள் இப்படி ஒருவர்க்கொருவர் அஸ்திரங்களை தோர்வையில்லாமல் பொழிந்தார்கள் அநேகருயிர்விட்டெழுந்தார் சிலரைரசக்கிபானமாய்ப்பிழிந்தார் போர்க்களமெல்லாம் இரத்தம் பரவியோடின கழுகுகள் வந்துகூடின களிப்புடனான கண்கள் ஆனந்தங்கொண்டு பாடின இப்படி சண்டப்பிரசண்டமாய் யுத்தம் நடத்தினார்கள் இவ்விதமாய் நடத்தும் மயிலிராவணன் சண்டைக்கிளையாமல் சகலரும்வியப்புறும்படி வில்லைவளைத்து நாணியேறிட்டு விற்குணத்தொனி செய்து திவ்வியபாணங்களைத் தொடுத்துச் சிங்கநாதஞ் செய்தான் சோனைமழைபோலச் சரமாரிபெய்தான் ஆஞ்சநேயர் அவன்தொடுத்துவிட்டபாணங்களை யெல்லாம் அறுத்துவிட்டு அநேகபாணங்களைத்தொடுத்து சாட்சாத் ஸ்ரீராமமூர்த்தியையடுத்து இவரேநமது வழிபடுகடவு ளென்றெண்ணி யோசனைபண்ணி அடாமயிலிராவணா நான் இலேசானவனென் றெண்ணாதே உன்மனதில் யோசனை பண்ணாதே நானே அநேகயுத்தத்தில் கைதேர்ந்தவன் ஸ்ரீராமமூர்த்தியோடு சேர்ந்தவன் பெரியோரனுக்கிரகம் பெற்றவன் ஆகையால் நீ ஜாக்கிரதையாயிரு இதோபாணந்தொடுக்கிறேன் பாரென்று சொல்லி அஸ்திரசஸ்திரத்தை யெடுத்து வில்லிற்றொடுத்து சோனைமாரிபெய்வதுபோலச்சரமாரிபெய்தார்.

அதைமயிலிராவணன்கண்டு அஸ்திரங்களை யெல்லாம் நடுப்பாதியிற் கண்டதுண்டமாகச் செய்து - ௪-௰-௱-௲-௱௲-அள்வுக் கதிகப் படும்பாணத்தை யெடுத்துத்தொடுத்து வில்லைநறுக்கி நாணியையறுத்து மார்பைப்பிளந்து உடல்முழுதும் ரத்தமயமாக்கினான் ஆஞ்சநேயர் ஸ்மரணைதப்பி வில்லின்மேலும் மற்றஆயுதங்களின் மேலுஞ் செல்லுங்கருத்தைவிட்டு சோர்ந்தாற் போலிருந்து களைதெளிந்தெழுந்திருந்து அடடா குருத்துரோகி இவனைச் சித்திரவதை செய்து கொல்லவேண்டும் மரணாவஸ்தைக்குச் சரியான அவஸ்தையே இவனுக்குண்டாக்க வேண்டும் ஒருவேளை ஓடிப்போனாலும் போவான்

இவனைவிடக்கூடாதென்று கருதி அங்குள்ள வேறொருவில்லை யெடுத்துவளைத்து மணலைவாரி இரைத்தாற்போலப் பாணங்களைத் தொடுத்து அவன் தேரை அசையவொட்டாமல் சரக்கூடம் போட்டார் மயில்ராவணன் அதிககோபங்கொண்டு போர்முகத்துக்குரிய கார்முகத்தை வளைத்து நாணேற்றிட்டு தேவருமஞ்சக் குணத்தொனி செய்து பிறைமுகபாணங்களில் சிலபாணங்களைத் தொடுத்து தன்தேரை மூடியிருக்கிறபாணங்களை அறுத்துச் சிலபாணங்களை ஆஞ்சநேயர் மீதுதூண்டினான்.

அநுமார் அந்தபாணங்களை ஒன்றையாகிலும் விடாமலறுத்து மூன்று திவ்வியாஸ்திரங்களை யெடுத்துத்தொடுத்தார் அந்தபாணங்கள் மயில்ராவணனுடையதேகத்தைரத்தமயமாகச்செய்தது உடனே மயில்ராவணன் கோபமீறி பற்களைநெறநெறவென்று கடித்து மீசை படபடவென்றுதுடிக்க அட்டகாசஞ்செய்து அளவற்ற கணைகளைத் தொடுத்தான் அக்கணைகளால் ஆஞ்சநேயர் அந்த பாணங்களையெல்லாம் நடுபாதியிற்கண்டித்து இவனோடு இந்நேரவரைக்குமா போராடுகிறதென்று அட்டகாசஞ்செய்து வில்லினிடமாகச் சிலபாணங்களையேவி மயில்ராவணனுடைய தேரைச் சக்கைசக்கையாக போராடுகிறதென்று அட்டகாசஞ்செய்து வில்லினிடமாகச் சிலபாணங்களைவிடுத்து குதிரையைச் சல்லடைக்கண்களாகத் துளைத்து சாரதி தலையையறுத்து பின்னும் சிலகடூரமான கணைகளைத்தூவி மயில்ராவணன்பேரில் பிரயோகஞ்செய்து அவனணிந்துவந்த விகசிதமான மகரகுண்டல ஆரகேயூர கடககங்கண முதலாகிய ஆபரணங்களையும் கவசத்தையும் பொடியாக்கி அவனையும் ரத்தமயமாக்கினார் அதனால் மயில்ராவணன் பிரமைகொண்டு ஒன்றுந்தோன்றாமல் மனங்கலங்கி சற்று மசைவின்றிச் சித்திரப்பதுமைபோலநின்றான் அத்தருணத்தில் ஆஞ்சநேயர் மயில்ராவணன்தேரிற்றாவி தன்வில்நாணியில் அவனை மடல்விரியக்கட்டி அட்டகாசஞ்செய்தார் இலங்கை மன்னன் மூர்ச்சை தெளிந்து கண்ணைவிழித்துப்பார்த்து கர்ச்சித்து கட்டில் நின்று திமிரிக்கொண்டு வெளிப்பட்டு காலாக்கினிருத்திரனைப்போல் கோபமீறி வேறுதேரேறி அநுமாரெதில் தனதுதேரைத்தூண்டி அநேகதவங்களைச்செய்து வரப்பிரசாதத்தில்பெற்ற சிலஅஸ்திரங்களை விடுத்தான் அதுகண்டு ஸ்ரீராமதூதராகிய ஆஞ்சநேயர் சில அஸ்திரங்களை விடுத்து அவ்வஸ்திரங்களைக்கண்டித்தார்.

இப்படி இவ்விருவரும் காலாக்கினி ருத்திரனைப்போல சண்டப்பிரசண்டமாய் ஒருவர்க்கொருவர் தோர்வையடையாமல் போர்பு

ரிந்தார்கள் அப்போது மயிலிராவணனானவன் அக்கினியாஸ்திரம் வ
ருணாஸ்திரம் முதலான ஆயிரத்தெட்டு அஸ்திரங்களையும் பிரயோக
ஞ்செய்ய ஆஞ்சநேயர் அதிககோபத்துடனே மகாவுக்கிராகாரனாய
கண்களில் நெருப்புப்பொறிபறக்க இருபுயங்களுந் துடிக்க பற்களை
நறநறவென்றுகடித்து அவனதுவுதிரத்தை மடமடவென்று குடிக்க
விஸ்வரூபமாய் பதினாயிரயோசனைவிஸ்தாரமாய்த் தோன்றும்படி
ஸ்தூலசரீரமெடுத்து மயிலிராவணனையெடுத்து அவனது தேரின்மே
ரில் ஓரறைநோக்கியறைந்தார் அவ்வறையினாலே அந்தரதம் அச்சு
வேறு ஆணிவேறுதும்பம்வேறு குத்துக்கால்வேறு முத்துக்கால்வே
று கொடிஞ்சைவேறாகச் சின்னபின்னப்பட்டு பொடிப்பொடியாய்
ப்போக மயிலிராவணன் ஆஞ்சநேயரின் குரூரத்தையும் அவரது
கோபத்தையுங் கண்டுமனதில் திகில்கொண்டு நடுங்கி தேரைவிட்டுக்
கீழேகுதித்து கையில்கத்திகேடயம் பாலா முதலியதைப்பிடித்து மீ
சைகள்படபடவென்று துடிக்க தடதடவென்று ஓட்டமாயோடிவந்து
ஆஞ்சநேயருடைய நடு மார்பிலே கத்தியினாலோங்கிவெட்ட அ
வர் அதைத்தட்ட அவன் பின்னுமுட்ட ஆஞ்சநேயர் யாதொன்று
க்கும் சட்டைபண்ணாமல் தனதுவாலை கீழேவிட்டு மயிலிராவணனு
டைய இரண்டுகாலையும் எற்றிப்பிடித்து சுருக்காய் இழுத்துப் பூமி
யிலேதள்ளி இலங்கை மன்னனைப்பார்த்து அடாராட்சதப்பயலே நீ
இனிமேல் எங்கேயாவது ஓடிப்போகலாமென்று யோசித்திருக்கிறா
யென்று சொல்லி கர்ச்சித்து பதினாயிரம்யோசனை தூரம் வளர்ந்து
அவனுடைமார்பில் இடதுகாலும் விந்தியாசலபர்வதத்தின்மேல் வல
துகாலுமாக வூன்றிக்கொண்டு அந்தவிந்தியாசலபர்வதத்தின் ஐந்து
குகைக்குள் நடுவாயிருக்கிற துவாரத்தைக்கண்டு அந்தத்துவாரமைந்
தையும் இடதுகை யுள்ளங்கையினால் மூடிக்கொண்டு வலதுகையை
துவாரத்துள் புகவிட்டு தடவிப் பிடிக்கையில் வண்டுகளைந்தும் ஆ
ஞ்சநேயரஸ்தம் வருவதைக்கண்டு வெளியே புறப்பட்டுப்போவோ
மென்று வாசலில்வந்து பார்க்கும்போது அவ்வாசலானது ஆஞ்சநே
யருடைய உள்ளங்கையில் மூடியிருப்பதைக் கண்டு அவ்வண்டுகளா
னது பயந்து வெளியே புறப்படாமல் மூலைக்குமூலையோடி உள்ளே
யொளித்திருந்தன அவருடையகையில் அகப்படாமலிருக்க அவர் உ
பாயமாய் விரலினாலேபிடித்து நகத்தினாலே கோர்த்துக்கொண்டு இ
ரண்டாம் துவாரத்தில் இருக்கிற வண்டையும் பிடித்து மூன்றாந்து
வாரத்தில் கையிட்டு அதிலிருக்கிற வண்டையும் பிடித்து நான்காந்
துவாரத்திற்கரத்தைச்செலுத்தி அதிலிருப்பதையும் பிடித்து ஐந்தா

ந்துவாரத்தி லிருப்பதையும் பிடித்துக்கொண்டு இவ்வண்டையும் உள்
ளங்கையிலடக்கி நசுக்கிக் கசக்கித்தேய்த்து மாய்த்துப்போட அந்த
வண்டுகளின் பிராணன் அதிகவேகமாய்ப் பரதவித்துக்கொண்டு மயி
லிராவணனைத் தேடியலைந்து அவன்தேகத்திற் பிரவேசிக்க மயிலிரா
வணன் தன்பிராணன் தனதுடலிற் புகுந்ததைப்பார்த்து அவன்சிர
சையறுத்து இதென்ன ஆச்சரியம்நமக்கு இன்றோடே மரணகால
ம் நேரிட்டிருக்கின்றது ஆகையால் இந்த ஆஞ்சநேயர்கையில் வண்
டுகளைந்தும் அகப்பட்டு நசுங்கினதென்றறிந்து சொன்ட ஆகாயவா
ணிசொன்ன விசேஷத்தையும் நினைத்து ஆஞ்சநேயர் வீராவேசத்
தையும் பார்த்துக் கொண்டிருக்கச்சே மயிலிராவணனுக்கு ஞானசர
மானது சம்பூரணமாய் நிறைந்து ஆஞ்சநேயரைப் பார்த்து தோத்
திரம் பண்ணுகிறான் ஓவாரும் அனுமந்தா ஜெயாவிஜீபவா ஸ்ரீராமச
காயா பரிபூரணா கருணாகரா காருமைபா சுவாமியென்று பலபலவித
மாய்த் தோத்திரஞ்செய்து சுவாமி நான் செய்தகுற்றங்கள் யாவும்
பொறுத்து ரட்சிக்கவேண்டும் ஸ்ரீராமதூதா ஸ்ரீராமதுரோகம் பண்
ணினபாவியாகிய நான் உன்பாதாரவிந்தங் காணப்பெற்றேன் வைகு
ண்டபதவியுற்றேன் நீர்வந்தகாரியம் ஈடேறியது சீக்கிரமாய் நீலமே
கனுக்குப் பட்டங்கட்டிவைத்து ஸ்ரீராமலட்சுமணனை யெடுத்துக்கொ
ண்டுபோய் இராவணசம்மாரஞ் செய்துலையும் ஜயாவென்று தோத்
திரம் பண்ணிக்கொண்டிருக்கச்சே பாதாளவிலங்கைக்கரசனாகிய மயி
லிராவணன் சிவஞானத்து வைகுந்தபதவியடைந்தது அவனுக்குத்தெய்
வலோகத்திலிருந்து புட்பவிமானம்வந்தது அந்தப் புட்பவிமானத்தி
லேறிக்கொண்டு தேவ்தாஸ்திரிகளாகிய அரம்பை மேனகை ஊர்வசி
திலோர்த்தமை முதலான ஸ்திரீகள் நடனமாடவும் வெண்சாமரை
போடவும் தாளமத்தளங்கள் சாடவும் சகலதேவர்களும் புஷ்பமாரி
பொழிந்து கொண்டாடவும் இவ்வித ஆடம்பரத்துடனே புஷ்பவிமா
னத்தி லிருந்தபடியே ஆஞ்சநேயரைத் தரிசனஞ் செய்துக்கொண்டு
நான் போய்வருகிறேனென்று வீரசொர்க்கத்தை யடைந்தான் அப்
போதே அப்பாதாளவிலங்கையில் சில இராட்சசர்க ளிருக்கப்பார்த்
து ஆரடா ராட்சசர்களே நீங்கள் சீக்கிரமாய் நீலமேகன் தூரதண்டி
இவர்களை அழைத்துவாருங்களென்ன அப்படியே அழைத்துவந்தா
ர்கள் தூரதண்டி நீலமேகன் இவ்விருவரும் ஆஞ்சநேயர்பாதத்தில்சா
ஷ்டாங்கமாகவிழுந்து நமஸ்கரித்துக்கைகட்டிவாய் புதைத்துக்கொண்டு
நிற்க ஆஞ்சனேயர் நீலமேகனைப்பார்த்து அடாவடா நீலமேகா இந்த
மயிலிராவணனுக்கு உத்தரகிரியைமுதலியன எவ்வண்ணம் முடிக்க

வேண்டுமோ அவ்வண்ணம் முடித்துவாவென்றுகூறி சூரியவுதயத்
துக்குமுன்னே இராமலட்சுமணனைக் கொண்டுபோய் ராவணசம்மார
ம்செய்யவேண்டும் இப்போது ரூபவதியென்கிறபெண்ணை உனக்கு
கலியாணஞ்செய்வித்து பட்டாபிஷேகஞ்செய்ய நினைக்கிறேன் ஆகை
யால் நீ அதிசீக்கிரத்தில் மயிலிராவணனுக்குச் செய்யவேண்டியசடங்
குகளெல்லா முடிப்பித்துவரவேண்டுமென்று ஆக்கியாபித்து ஆஞ்ச
னேயர் அரண்மனைபோய்ச்சேர்ந்தார் அப்போது நீலமேகன் அவர்
சொல்லியவண்ணம் இராட்சசப்பிராமணனை யழைத்து அதற்குவே
ண்டும் சாமக்கிரியைகள்யாவுஞ் சேகரம்செய்து வைத்துக்கொண்டு
மயிலிராவணனுக்கு அக்கினிசம்ஸ்காரஞ்செய்வித்து ஸ்நானபானம
பண்ணி வஸ்திரந்தரித்து நீலமேகன் தாரகண்டியும் மற்றுமுள்ள இ
ராட்சசப்பிராமணன் அனைவரும் ஆஞ்சநேயருக்கு ஸ்தோத்திரஞ்
செய்து நின்றார்கள் ஆஞ்சநேயர் மாதங்கியைப்பார்த்து ஓவாருமபெ
ண்ணேமாதங்கி ஆகாயவாணிசொல்லிய வாக்குப்படிக்கு உன்குமார
த்தியை இந்தவீரசூரனை நீலமேகனுக்குக்கொடுத்து கலியாணஞ்
செய்துவையுமென்று சொல்ல மாதங்கி அவரைப்பார்த்து சுவாமி
உமதிஷ்டப்படி செய்கிறேனென்று உறுதிகூறி ரூபவதியை யழைத்
துக்கொண்டு கந்தபுஷ்பமுதலியன வணிந்து பச்சைப்பந்தல் வாழை
கமுகுமுதலியவைகளால் அலங்கரித்து தம்பதிகளிருவருக்கும் விசித்
திரமான ஆபரணங்களினால் அலங்காரஞ்செய்து நீலமேகன் ரூபவதி
இவ்விருவருக்கும் கலியாணச்சடங்குகள் யாவும் சம்பிரமத்துடனே
முடிப்பித்து மாங்கல்யம் தரிப்பித்து இரத்தினசிங்காதனமிட்டு வீற்
றிருக்கச்செய்து சகலராக்ஷசப்பிராமணரைக்கொண்டு சர்வதீர்த்தங்கள்
கொண்டுவந்து ஆஞ்சநேயர்முன்னேவைத்தார்கள் அப்போது அவர்
தங்கக்குடத்திலிருக்கிற சுத்தசலத்தை நீலமேகனுக்கு அபிஷேகஞ்
செய்துவைத்தபின்பு மந்திரிபிரதானி சாமந்தர் தண்டத்தலைவர் யூக்
த்தலைவர் அணித்தலைவர் முதலிய சகலமானவர்களும் அபிஷேகஞ்
செய்ய பின்பு நீலமேகன் சகல ஆபரணபூஷணங்களினால் எழுந்து
வந்து ஆஞ்சநேயர் பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து
நமஸ்கரித்து சிரமேற்கரங்குவித்து ஸ்தோத்திரம்பண்ணினான் தார
தண்டி பாங்கிமுதலிய சகலரும் ஆஞ்சநேயர்முன்விழுந்து கும்பிட்டு
எழுந்துவந்து கைகட்டி வாய்புதைத்துநின்றார்கள் அப்போது ஆஞ்ச
நேயர் நீலமேகனைப்பார்த்து ஆசீர்வாதஞ்செய்கிறார் வாரும்பிள்ளாய்
நீலமேகா நீ இந்தபாதாளவிலங்கையை இராச்சியபாரஞ்செய்துக்கொ
ண்டுசுகமாயிரு ஸ்ரீராமமூர்த்தியின்பேரும் பிரதிஷ்டையும் எந்தமட்

டுக்கும் சாஸ்விதமாயிருக்குமோ அக்காலம்வரையும் சுகசீவியாய் தர்மநீதிகள் தவறாமல் நீதிசெலுத்தக்கடவாய் சகலவுயிர்களும் தன்னுயிர்போல் மன்னுயிர்களைக்காப்பாற்றி வாழக்கடவாயென்று சிறிதுபுத்திகள்கூறி தூரதண்டியைப்பார்த்து ஓபெண்ணே நீகேட்டுக்கொண்டபடிக்கு நீலமேகனுக்குப் பட்டங்கட்டிவைத்தேன் நான்போகச்செலவுகொடும் என்றுகேட்க அப்போது தூரதண்டியானவள் சீக்கிரமாய்ப் பொக்கிஷத்தைத்திறந்து அநேக ஆபரணங்களும் வன்னவன்ன வஸ்திரங்களும் கந்தபுஷ்பமுதலிய பரிமளதிவ்வியங்களும் தட்டோடெடுத்துக்கொண்டுவந்து ஆஞ்சநேயர்முன்பாகவைத்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்துக்கொண்டாள் ஆஞ்சநேயர் தூரதண்டியைப் பார்த்து சொல்லுகிறார்.

வாரும்பெண்ணே தூரதண்டி நீகொண்டுவந்த வெகுமதிகளைப் பார்க்கச் சந்தோஷமாயினவென்று தனது அஸ்தத்தினால் தொட்டு நான் அஸ்தமிட்டவுடனே எனக்கு மனங்களிப்புண்டாயிற்று நீகொண்டுவந்ததைப் பொக்கிஷத்தில் கொண்டுபோய்ச்சேர்ப்பி அவ்வஸ்துக்கள்கொடுக்ககாரணமில்லை யாதென்றால் சாக்ஷாத்கடவுளாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் இராவணசம்மாரமுடித்துப் பட்டாபிஷேகமான பின்பு யான் அங்கபூஷணதிரவியங்களைத் தேடுவேனென்று ஆக்கியாபித்து விடைகொடுத்துவிட்டு பின்பு ஆஞ்சநேயர் மச்சவல்லபனையழைத்து ஓ வாரும்பிள்ளாய் மச்சவல்லபசிகாமணியே இப்பாதாளவிலங்கையை உன்வசமொப்பிவித்தேன் நீ நீலமேகன் சொற்படிகேட்டு நடந்துகொண்டு சுகமாயிரு நான்போய்வருகிறேனென்று விடைபெற்றுக்கொண்டு சீக்கிரமாய்ப்புறப்பட்டு ஸ்ரீராமலட்சுமணனைவைத்திருக்கப்பட்ட இடத்தில்வந்து பூமிதேவியைப் பார்த்து வாராய் பூமிதேவியே ஸ்ரீராமலட்சுமணனை தடையின்றிக்கொடும் என்றுவினவ பூமிதேவியானவள் ஆஞ்சநேயர்கையில் பெட்டியோடு தூக்கிக்கொடுக்க அவர் ஸ்ரீராமலட்சுமணனைப் பத்திரப்படுத்தியிருக்கிற பெட்டியைப் பெற்றுக்கொண்டு அதிசீக்கிரமாய் பாதாளவிலங்கையைவிட்டு தாமரைத்தடாகம்வந்து அத்தாமரைத்தண்டின் வழித்துவாரத்தைப் பார்க்க அவ்வழிமூடப்பட்டிருந்தது அங்ஙனம் காவலாயிருக்கிறவாயுபகவானைக்கண்டு ஓய்பகவானே எனக்குச்சற்றே வழிவிடுமென்னவாயுபகவான் அனுமான்வந்துவிட்டானென்றுவழிவிட அவர் பெட்டியையெடுத்துக்கொண்டு அந்ததாமரைநூற்றண்டுவழியாக அதிசீக்கிரமாய் நடந்து சகஸ்திரகமலத்தில் வந்துசேர்ந்தார் வாயுபகவான் அவரைப் பார்த்து வாரும்பிள்ளாய் ஆஞ்சநேயா மயில்ராவணனைச் சங்காரம் பண்ணி ஸ்ரீராமலட்சுமணனை எடுத்துவந்ததாரென்ன அவர் வாயுபக

வானைப்பார்த்து ஓவாயுபகவானே நான் மயிலிராவணனைச் சங்காரம்
பண்ணி ஸ்ரீராமலட்சுமணனை இந்தப்பெட்டியோடே எடுத்துக்கொ
ண்டுவந்தேனென்ன வாயுபகவான் அதிகசந்தோஷத்தை யடைந்தார்
அப்போது பாதாளவிலங்கையிலிருந்த மச்சவல்லபன அந்தகரைவிட்
டு பாட்டனாரும் தகப்பனாருமிருக்கிற ஸ்தானத்தில் வந்துசேர்ந்து அ
வர்களிருவருக்கும் சாஷ்டாங்க நமஸ்காரம்செய்து கைகட்டிவாய்பு
தைத்துக்கொண்டுநின்றான் அப்போது வாயுபகவான் ஆஞ்சநேயரை
ப்பார்த்துச்சொல்லுகிறார் ஓவாரும் ஆஞ்சநேயனாயா அரிராமசகாயா
ஸ்ரீராமலட்சுமணனைக் கொண்டுவந்தேனென்றாயே அவர்களைப்பார்க்க
எனக்கு விருப்பமிருக்கிறதென்று கேட்க மச்சவல்லபனும் அவர்கள்
எப்படிப்பட்ட புண்ணியபுருஷர்களோ நானும்பார்க்க விருப்பமுள்ள
வனாயிருக்கிறேன் என்று இருவருங்கூடி ஆஞ்சநேயர் பெட்டியையெடு
த்துக்கொண்டுவந்து இதோதிறக்கிறேன் பாருங்களென்று பெட்டியை
த்திறக்க அப்பெட்டியில் இராமலட்சுமணளிருவரும் கண்மூடி நித்தி
ரைசெய்திருக்க அத்தருணத்தில் வாயுபகவான் ஆஞ்சநேயர் மச்சவல்
லபன் இம்மூவரும் மூக்கால்வகம்வந்து ஸ்ரீராமலட்சுமணனுக்கு சாஷ்
டாங்கமாக நமஸ்காரஞ்செய்து பெட்டியைமூடி தாட்கொண்டுபூட்டி ஆ
ஞ்சநேயர் மச்சவல்லபனைப்பார்த்து ஒருவசனம் சொல்லுகிறார் ஓமச்
சவல்லபா நீயிங்குவந்தகாரியம் என்னென்றுவினவ மச்சவல்லபன்
சொல்லுகிறான் ஓ ஆஞ்சநேயரே நாளையத்தினம் உதயகாலையில் இரா
வணனுடனே யுத்தஞ்செய்யவேண்டும் ஆகையால் நானே அந்தராவ
ணனுடனே ராட்சதப்பூண்டுகளையெல்லாம் அடித்துச் சாகும்படியா
ய்மடித்து உதிரத்தைக்குடித்து வீராவேசம்படித்து பின்பு இப்பாதா
ளவிலங்கைக்குவருவேனென்ன ஆஞ்சநேயர் மச்சவல்லபனைப் பார்த்
துச் சொல்லுகிறார் வாரும்மச்சவல்லபா நீஇவ்விதம்வந்தால் அந்தசுக்
ரீபன் முதலானவர்யாவரும் இவன்யாரென்று என்னைக் கேட்பார்கள்
அப்போது அவர்களுக்கு என்னுடைய பிள்ளையென்று சொல்லநேரி
டும் அப்படியிருப்பதால் அவர்கள் சந்தேகப்படவும் பரிகாசஞ்செய்ய
வும் விருதாவாகப் பிள்ளையென்று ஒப்பாரி பிடித்துக்கொண்டு வந்தா
னென்றும் எனக்கு அபகீர்த்திநேரிடும் ஆகையால் நீவரவேண்டுவதி
ல்லை நீ இலங்கைப்பட்டணத்தில் சுகமாயிருவென்று விடைகொடுத்து
வாயுபகவானையும் அனுப்பிவிட்டு ஸ்ரீராமலட்சுமணனை பெட்டியோ
டெடுத்துக்கொண்டு வாயுவேகமாய்வரும்போது அங்கதன் சுக்ரீபன்
நீலன் நளன் சாம்புவன் விபீஷணாமுதலிய யாவரும் ஒன்றாய்க்கூடிக்
கொண்டு இன்னம் ஆஞ்சநேயர் வரவில்லையே சூரியவுதயமாகின்றதே
என்று வருத்தப்பட்டு நான்குமூலையும் பார்த்துக்கொண் டிருக்கும்தரு

ணத்தில் ஆஞ்சநேயர்வருவதுகண்டு அனைவரும் நாதிகொண்டு கூடாராவந்துசேர்ந்தார்கள் ஆஞ்சநேயர் பெட்டியோடே இராமலட்சுமணுளை அசையாமல் எப்போதும்போல் முன்னிருந்த விடத்தில்வைத்து பிரதட்சணம்வந்து கும்பிட்டார் பின்பு அங்கதன் நீலன் சுக்கிரீபன் சாம்புவந்தன் விபூஷணன் முதலானவர்களெல்லோரும இடம்புரி வலம்புரியாய்வந்து தோத்திரஞ்செய்துநிற்க சூரியபகவான் உதயகிரியிலிருந்து தன்கிரணங்களைப்பரப்பிப் புறப்பட்டான் உடனே ராமலட்சுமணுளை வைத்திருந்தபெட்டியானது மாயமாய் கண்ணுக்குத்தெரியாமல் மறைந்துபோயின இராமலட்சுமணுளிருவரும் நித்திரைதெளிந்து எழுந்திருந்தார்கள் ஆகாயமார்க்கத்திலே சகலதேவதைகளும் புஷ்பமாரிபொழிந்தார்கள் நான்குமாதர்களும் நடனமாடினார்கள் தேவகணங்கள் கூத்தாடினார்கள் சகலசனங்களும் பார்க்க ஆச்சரியத்துடனேவந்து கூடினார்கள் இன்றையதினம் இதென்ன ஆச்சரியமாயிருக்கிறதென்று சந்தேகப்பட்டார்கள் யாருடனே போர்கொடுத்தோம் என்று இராமலட்சுமணுள்கேட்க சாம்புவந்தரானவர் இந்தப் பூர்வோத்திரமெல்லாம ஸ்ரீராமமூர்த்திக்குச் சொன்னார் அப்போது ஆஞ்சநேயர் சாம்புவந்தனைப்பார்த்து கன்னசைகையாகச் சொல்லாதேயென்றார் அவர்சைகையைச் சாம்புவந்தர் அறிந்துக்கொண்டு இராமலட்சுமணுளைப்பார்த்துச்சொல்லுகிறார் வாருமஐயா ஜகத்ரட்சகா ஸ்ரீராமச்சந்திரா இனிமேல் நடக்குங்காரியங்களுக்கு ஆலோசியுங்களென்றுசொல்ல ஸ்ரீராமமூர்த்தியானவர் அனுமாரைப்புகழ்ந்து சிரஞ்சீவியாயிருக்கக்கடவையென்று ஆசிர்வதிக்க சகலரும் சந்தோஷமடைந்திருந்தார்கள் இங்ஙனம இப்படியிருக்க இலங்கைப்பட்டணத்தில் இராவணனென்பவன் ஸ்திரீகளோடு சரசசல்லாபவுல்லாசமாய் சிரித்துக்கொண்டு இருந்தவன சூரியவுதயத்தில் தேவர்கள் கருடகாந்தருவர் முழங்கப்பட்ட மேளவாத்தியத் தொனியைக்கேட்டு யோசனைபண்ணி யிப்போது தேவர்கள் இந்தவாத்தியக்கொண்டாட்டம் பண்ணும்படியான காரியமென்ன இராமலட்சுமணுளை மயிலிராவணன் கொண்டுபோயிருக்க தேவதைகளுக்கு இத்தனை சந்தோஷவாத்தியத்துக்கு காரியமென்னவென்று இராவணன் மனதில்யோசித்து தூதுவேவுகாரரை யழைப்பித்து இக்கணமேபோய் பாதாளலங்கையில் மயிலிராவணனண்டைக்குப்போகாமல வானரசேனை யண்டைக்குப்போய் இராமலட்சுமணுள் உயிருடனே க்ஷேமமாயிருக்கிறார்களா அவர்களுடைய சேனையை விசாரித்துக்கொண்டு வாருங்களென்ன அந்தவுத்தரப்படிக்கு வேவுகாரர் பாதாளலங்கைக்குச்செல்லாமல் வானரசேனையிருப்பிடம்வந்து விசாரிக்குமளவில இராமலட்சுமணுள் சுகமாயிருப்பதைப் பார்த்து அதிசிக்

கிரமாய்த் திரும்பிவந்து இராவணேஸ்வரனை நோக்கிச் சொல்லுகிறார்கள் வாரும் லங்கைக்கதிபா இராமலட்சுமணன் சுகமாயிருக்கிறார்களென்ன இராவணன் இதேது ஆச்சரியமாயிருக்கின்றது மயிலிராவணனைக் கொன்றுவிட்டார்களோ அல்லது அவன் அவர்களிருவரையும் எடுத்துக்கொண்டுபோகாமல் தனியாய்ப் போனானோவென்று மனதில் பலபலயோசனைசெய்து எட்டுபேர்வேவுகாரரை யழைப்பித்துச் சொல்லுகிறான் ஓதூதர்களே நீங்கள் சீக்கிரமாகப் பாதாளவிலங்கைக்குப்போய் மயிலிராவணனிருக்கிறானா இல்லையாவென்று பார்த்துவாருங்களென்ன அங்ஙனம் எட்டுபேர்வேவுகாரர்கள் அதிசீக்கிரமாய் காலால்நடவாமல் காற்றாய்ப்பறந்து பாதாளலங்கைக்குப் போகவேண்டுமென்று தாமரைக்குளத்தில்வந்து இராட்சசரெல்லாரும் அங்ஙனம் இல்லாதிருப்பதைப்பார்த்து இதென்ன ஆச்சரியம் இவ்விடத்தில் நூதனமாய் நீலமேகனும் அவன் சேனைகள் காவலாயிருப்பதைப்பார்த்து அந்த எண்மரும் சொல்லுகிறார்கள் வாருங்கள் இராட்சசப்பேய்களே லங்கையிலிருக்கப்பட்ட நாய்களே மயிலிராவணனெங்கே இக்கோட்டையில் ஆயிரங்கோடி ராட்சதாள் காவலாயிருந்தார்களே அவர்கள் எவ்வாறாயினார்கள் நாங்கள் திசைகண்ட ராவணனாலே அனுப்பப்பட்டவர்கள் மயிலிராவணனைக் காணவந்தோம் வழிவிடுங்களென்ன காவலர்கள் எண்மருங்கேட்டுச் சொல்லுகிறார்கள் ஆடா நீங்கள் திசைகண்ட ராவணன்பேச்சை யெடுக்குங்காரணமென்னவென்று கர்ச்சித்துப் பற்களை நறநறவென்றுகடித்து மீசை துடித்துக் கோபங்கொண்டு பிடரியைப்பிடித்துத்தள்ளுங்கள் தள்ளினபின்பு சேதிவந்துசொல்லுங்களென்ன அப்போது வேவுகாரர்கள் காவலாயிருக்கப்பட்ட இராட்சதர்கள் காலில்விழுந்து எழுந்து நடுங்கி ஒடுங்கிச் சொல்லுகிறார்கள் ஓ காவலர்களே எங்களுக்கு அந்தவர்த்தமானத்தைச் சொல்லவேண்டுமென்று வேவுகாரர்கள்கேட்க காவலர்கள் அவர்களைப்பார்த்துச்சொல்லுகிறார்கள்.

வாருங்கள் வேவுகாரர்களே அநுமார் மயிலிராவணனை அசந்செய்து நீலமேகனுக்குப் பட்டங்கட்டி ஸ்ரீராமலட்சுமணனையும் எடுத்துக்கொண்டுபோனார் ஆகையால் அவனுடைய உத்தரவல்லாமல் இங்ஙனம் சற்றேனும் நிற்கக்கூடாதென்று சீக்கிரத்தில் நெட்டித் தலைமேற்குட்டி பிடரியைப்பிடித்துக் கழுத்தைக்கசடித்துப் பிடித்துத் தள்ளிவிட்டார்கள் அவர்களப்படித் தப்பிச்செய்ய ஆசையோடுபெற்றுக்கொண்டு அவ்விடம்விட்டு புறப்பட்டு இலங்காபுரியை யாளப்பட்ட இராவணனிடத்தில்வந்து மகாதுயரத்துடனே சொல்லுகிறார்கள் கேளும்ராவ

னேஸ்வரா மயிலிராவணன் புத்திரமித்திரகளத்திராதியுடனே அநே
மாரால் யமபுரத்தையடைந்தான் இராட்சசப்பூண்டு சகலமும் அழிந்
துவிட்டது நீலமேகன் பாதாளலங்கையைப் பட்டங்கட்டி அரசுசெ
லுத்திக்கொண்டு இருக்கிறானென்றுகூற அவ்விசேஷத்தைத் திசை
கண்டராவணன் கேட்டு சிங்காதனத்தின்மேலிருந்து கீழேவிழுந்து
கடகடவென்று புரண்டு மூர்ச்சையாய்கிடக்கிற இராவணனை மகோத
ரன்முதலிய மந்திரிகளெடுத்து ஆயசந்திரப் பாபாசந்தத்து சோடச
வுபசாரஞ்செய்து மூர்ச்சைதெளியவைத்து அவனுக்குத் தேறுதலை
சொன்னார்கள் இராவணன் மந்திரிகளைப்பார்த்துச்சொல்லுகிறான் வா
ருங்கள் மந்திரிகளே இந்தபாரத்தை என்றுஞ்சொல்லமுடியுமோ யா
ன்செய்த பிரயத்தனமெல்லாம் விருதாவாய்ப்போயின மகாசாமர்த்தி
யரானசகோதரனும் பிள்ளைகளும் இறந்துபோனதால் என்சரீரபலமி
ல்லாது யாதொன்றிலும் புத்திசெல்லாது காயமும்பொல்லாது க்ஷண
நேரமில்லையென்று மனதிலெண்ணி யோசனைபண்ணி இடங்கொண்டு
தன்னுடைய தேரைக்கொண்டுவரச்சொல்லி யானைசேனை பரிவாரமுத
லியவற்றைச் சேர்த்துக்கொண்டு யுத்தகளத்தில்வந்து ஸ்ரீராமமூர்த்தி
பேரில் எதிர்த்து வில்லைவளைத்து நாணேறிட்டு அனேகபாணங்களை
விடுத்தான்.

அதுகண்டு ரகுநாயகரானவர் அதிககோபத்துடனே தமது கோ
தண்டத்தை வளைத்து நாணேறிட்டு ஸ்ரீராமபாணங்களையெடுத்து சர
வருஷங்களைப் பொழிந்தார் அந்தபாணங்களால் ராவணேஸ்வரனுடை
ய யானைசேனை முதலியயாவரும் ரணக்களத்தில் விழுந்திறந்தார்கள்
இராவணன் தனியாகநின்று யுத்தஞ்செய்தான் அதுகண்டு ஸ்ரீராமமூ
ர்த்தியானவர் இதென்ன இவனுடையபோராட்டமே நமக்கு மாராட்
டமாயிருக்கிறதென்று கோபங்கொண்டு தனது வில்லினிடமாக அதி
தீட்சண்யமாக ஸ்ரீராமபாணத்தையெடுத்துத் தொடுத்து இராவணனு
டைய உந்திக்கமலத்திற்கு நேராகவிடுத்தார் அந்தப்பாணமானது இரா
வணனுடைய உந்திக்கமலத்திலிருக்கும் அமுதகலசத்தை வெளிப்படு
த்தி முறிவிலுருகிப்போயின-இராவணன் தலைகள் பலவாறுய்ப் பூமியி
ல்விழுந்தன பின்பு ஸ்ரீராமமூர்த்தி விபூஷணருக்கு உபசாரஞ்செய்து
ராவணேஸ்வரனையெடுத்து தகனஞ்செய்யச்சொல்லி உத்தரவுகொடு
த்தார் உடனேவிபூஷணர் இராவணனையெடுத்துத்தகனஞ்செய்து பதி
னறுநாள் கர்மாதிகாரியத்தை நடத்தினார் அதுகண்டு ரகுநாயகர் விபூ
ஷணருக்கு லெங்காபட்டணத்தைப் பட்டாபிஷேகஞ்செய்துவைத்
து சீதாதேவியை யழைத்துக்கொண்டு வரச்சொல்லி விபூஷணன் சுக்
ரீபன் அங்கதன் நளன் நீலன் குமுதன் குமுதாக்கன் சாம்புவந்தன்

முதலிய சேனைகளனைவரும் எழுபத்திரண்டுவெள்ளஞ்சேனையும்பதா
ரூடராய்வரச்சொல்லி ஆஞ்சனேயனுடன் புறப்பட்டு ஸ்ரீராமலட்சம
ணர் சீதாபிராட்டிசமேதராய் விமானத்திலேறிக்கொண்டு சேனைகளை
நடக்கும்படி ஆக்கியாபித்து தமது விமானத்தையும் நடத்தி பரத்து
வாசர் ஆச்சிரமத்திலிறங்கினார்கள் அப்போது ஆஞ்சநேயர் முன்னு
தாகப் பரதருக்கு சுகசேதிசொல்லவேண்டுமென்று ரகுநாயகரிடத்தி
ல் விடைபெற்றுக்கொண்டு அயோத்தியாபுரிபட்டணத்திற்குவந்து பர
தனைக்கண்டு சுவாமிவருகிற சமாச்சாரத்தை ஆதியோடந்தமாகச்
சொன்னார் சந்தோஷப்பட்டு பட்டணமெல்லாம் அலங்காரஞ்செய்வித்
து தானும் சத்துருக்கன்முதலானவரோடு தங்கள் தாய்மார்களையும் அ
ழைத்துக்கொண்டு அநேகயானைகுதிரை சேனைகளுடன் பட்டணத்தி
லுண்டாகிய ஜனங்களோடும் எதிர்கொண்டுபோனான்.

அப்போது ரகுநாயகர் பரத்துவாசர் ஆச்சிரமத்திலே போசன
ஞ்செய்து பரத்துவாசரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சகலசேனைக
ளுடனேபுறப்பட்டு அயோத்தியை நோக்கிவரும்போது எதிர்கொண்
டுவருகிறபரதனைக்கண்டு ரகுநாயகர் இரதத்தை நிறுத்தினார் உடனே
பரதர் ஸ்ரீராமமூர்த்திக்கு சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்தார் ரகுநாய
கர்பரதனைக்கட்டிக்கொண்டு ஆலிங்கனஞ்செய்து அதிகசந்தோஷத்து
டனே சதுரங்கசேனையுடன் பிரயாணப்பட்டு நந்திக்கிராமம்வந்து கங்
காஸ்நானஞ்செய்து வஸ்திராபரணம் சுகந்தபுஷ்பபரிமளவர்க்கமுதலி
யவையணிந்துகொண்டு திவ்யான்னம்புசித்து தாம்பூலகர்க்கந் தரித்து
அதிகசல்லாபவுல்லாசமாய் அயோத்தியாபுரிபட்டணத்திற்குப்போய்
ஸ்ரீராமமூர்த்திக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்து சகல பிரஜைகளும்
ஆனந்தமடைந்திருக்குந்தருணத்தில் சுக்ரீபன் விபூஷணர்முதலானவர்
எழுபத்திரண்டுவெள்ளம் வானரசேனைகளும் உபசாரஞ்செய்ய ஸ்ரீரா
மமூர்த்தியானவர் வசிஷ்டரைப்பார்த்து ஒருவிசேஷஞ்சொல்லுகிறார்
ஐயாவாரும்சுவாமி வசிஷ்டமகாமுனியே இதோயிருக்கிற ஆஞ்சநே
யர் எங்களுக்கு அநேகசகாயஞ்செய்திருக்கிறார் அவர்செய்த உபகார
த்துக்குத் தேவராலும் யாவராலும் பிரதிஉபகாரஞ் செய்யமுடியா
தென்று ஸ்ரீராமமூர்த்திசொல்ல வசிஷ்டர் சொல்லுகிறார் வாருமையா
இராமசந்திரணரங்கவிந்திரா ஆஞ்சநேயர் அநேகவுபகாரங்கள்செய்
தாரென்றுசொன்னீரே அவர்செய்தவுபகாரத்தை யாவருமறியார்கள்
இன்னதென்றறியார்கள் அவர்செய்த காரியார்த்தமென்ன நம்மை
பறியாமல் என்னஅற்புதஞ்செய்தார் நமக்கு சகலகாரியமும் ஞான
திருஷ்டியால்தெரியும் அவர்செய்தவுபகாரத்தைச்சொல்லவேண்டுமெ

ன்றுகேட்க ரகுநாயகர் விபூஷணரை நோக்[illegible]ச்சொன்னார்
விபூஷணர் சாம[illegible]வரைப்பார்த்து ஐயாசாம்புவந்தரே ஆஞ்சநேயர்
மயில்ராவணனைச் சங்காரஞ்செய்த சவிஸ்தாரத்தைச் சொல்லவேண்
டுமென்ன சாம்புவந்தர் எழுந்து பயபக்திவிசுவாசத்துடனே கைகட்டி
வாய்புதைத்து ரகுநாயகரை ஸ்தோத்திரஞ்செய்து சபைக்குமுன்னி
ன்றுசொல்லுகிறார் அநுமாரானவர் தாமரைத்தண்டின் நூல்வழியா
ய்ப்போனதும் அவ்விடத்தில் ஆயிரங்கோடி இராக்ஷதர்களைச் சங்கா
ரஞ்செய்ததும் பின்பு அக்கினிக்கோட்டையில் மச்சவல்லபனோடு
போர்புரிந்ததும் மச்சவல்லபனைத் தன்னுடைய பிள்ளையென்று பிற
ப்புவளர்ப்பால் அநுமார் அறிந்ததும் பின்பு தெப்பக்குளக்கரையில்
தூரதண்டியைக்கேட்டு அவ்விடத்தில் சிலசங்கதிகளையறிந்து மலாய
ந்திரக்கோட்டைவாசலில் நடந்தவரலாறு தான் உள்ளேநுழைந்து
காளிகோயிலைக்கண்டு சுவாமியை எடுத்துக்கொண்டு வந்ததும் மயிலி
ராவணன் அநேகமாயைகள் செய்து போர்புரிந்ததும் பின்பு அவனை
க்கொன்றதும் தூரதண்டிகுமாரன் நீலமேகனுக்குப்பட்டங்கட்டி அவ
னுக்கு விவாகஞ்செய்துவைத்ததும் அப்பட்டணத்தின் சமாச்சாரங்
களும் சுவாமியையெடுத்துக்கொண்டுவந்ததும் ஆதியோடந்தமாகச்
சொன்னார், ஸ்ரீராமமூர்த்தியானவர் ஆனந்த சந்தோஷத்தையடைந்து
எழுந்திருந்து ஆஞ்சநேயரைத் தழுவிக்கொண்டு புன்சிரிப்பாகச் சிரி
த்துச்சொல்லுகிறார் நீர்வல்லமையுள்ள புண்ணியவான் யாவருக்குங்
கண்ணியவான் உமக்கு நான் என்னவுபகாரஞ் செய்யப்போகிறேனெ
ன்று அநுமாருக்கு மறுபடியும் சிரஞ்சீவியும் ஆசீர்வாதமுங்கூறிவே
ண்டுவனவற்றைத்தந்து அதிகசந்தோஷத்தை யடைந்திருந்தார்.

இக்கதையை யாதாமொருவர் படித்தாலும் பத்திவினயத்தோடு
முடித்தாலும் ஒருவர்படிக்கக்கேட்டாலும் படித்தவர்கள் மற்றொருத்
தருக்குச்சொன்னாலும் அதைச்செவியுற்று கேட்டாலும் நவக்கிரகங்
கள் குரூரஞ்செய்யமாட்டாது கலிபுருஷனுமணுகான் இதைத்தோத்
திரம்பண்ணினவர்களும் மனதிலெண்ணினவர்களும் கண்டவரும் ஆ
திசெய்துகொண்டவரும் நற்பதவியடைவார் அவாளவாள்செய்த பிரம
ஹத்தி-சிசுஹத்தி முதலிய கொடியபாவங்களும் அற்று பரமபதத்தை
ப்பெற்று ஈடேறிவாழ்வார்கள்.

மயில்ராவணன்கதை

முற்றிற்று.